
# கார்ல் மார்க்ஸ்



# கார்ல் மார்க்ஸ்

(வாழ்க்கைக் குறிப்பு)

எழுதியவர்கள் :

பால் லவார்க்

வில்லியம் லீப்னெட்

❋

தமிழ்ப்படுத்தியவர்

ஆர். எச். நாதன்

புதுமைப் பதிப்பகம் லிமிட்டெட்

காரைக்குடி

முதற் பதிப்பு 5-9-46

விலை ரூபா மூன்று.

உரிமை பதிவு செய்யப்பெற்றது.

---

**Printed at the Sadhu Press, Royapettah, Madras.**
**Paper Issue Card No. M. S. 115 for**
**Pudamai Padippaham Ltd., Karaikudi**
**Paper Issue Card No. R. 11—C. 1000—5-9-46**

# முகவுரை

இதுவரையில் உலகில் தோன்றின சிந்தனையாளர்களில் தலைசிறந்தவர் கார்ல் மார்க்ஸ். அவர் சிந்தனையாளர் மட்டுமல்ல—சிறந்த தத்துவ ஞானியும்கூட. அதுவரையில் ஓய்வுபெறும் வர்க்கத்தின் ஏகபோக உரிமையாக இருந்த தத்துவ சாஸ்திரத்தை அவர் ஜனங்களின் பொதுச் சொத்தாக்கினார். அத்துடன் தத்துவத்தையும் அனுஷ்டானத்தையும் ஒன்றாக இணைத்து, தத்துவத் துறையில் தலைகீழ் மாற்றத்தை உண்டுபண்ணினார். கார்ல் மார்க்ஸ் சிறந்த விஞ்ஞானி; சுயசிரம ஜீவிகளின் ஒப்பற்ற தலைவர்; சுயசிரம ஜீவிகளின் முன்னணிப் படையின் - கம்யூனிஸ்டு கட்சியின் - நிர்மாணிகர்; விஞ்ஞான ரீதியான சோஷலிஸத்தின் தந்தை.

மார்க்ஸின் வாழ்க்கை கரடுமுரடானது. அவர் சரித்திரம் புரட்சியின் சரித்திரம். அத்தகைய பெரியாருடைய வாழ்க்கையை - முக்கியமாக, அவரிடம் காணப்பட்ட மனிதப்பண்பை - இந்த நூல் வர்ணிக்கிறது.

இந்த நூல் ஆசிரியர்களான பால் லவார்க்கும், வில்லியம் லீப்னெட்டும் மனித சிரேஷ்டரான மார்க்ஸைப் படம் பிடித்துக்காட்டுகிறார்கள். இவர்கள் இருவரும் சிறந்த மார்க்ஸ்வாதிகள்; புரட்சி இயக்கத்தில் நேரடியாகப் பங்கு எடுத்துக்கொண்டவர்கள்.

பால் லவார்க் பிரெஞ்சு சோஷலிஸ்டு கட்சியின் தலைவர்; வில்லியம் லீப்னெட் ஜெர்மன் சோஷலிஸ்டு இயக்கத்தின் தலைவர். தாங்கள்

கண்ட மார்க்ஸை இவர்கள் இருவரும் நமக்குப் படம் பிடித்துக்காட்டுகிருர்கள்.

மார்க்ஸ் மனிதாபிமானம் சிறிதும் இல்லாதவர் என்று, முதலாளித்வ எழுத்தாளர்கள் இடைவிடாது பிரசாரம் செய்துவந்தார்கள். அவரை ஒரு "அரக்கனுக"ச் சித்தரிக்கப் பெருமுயற்சி செய்தார்கள். புரட்சிக்காரர் மார்க்ஸ் அன்புக்கு உறைவிடம் என்பதை மறைக்க முயன்ருர்கள். இந்தத் தப்புப் பிரசாரங்களுக்குப் பதில் கூறுகிறது இந்த நூல். மனித சமூகத்தை இதயபூர்வமாக நேசிப்பதில் மார்க்ஸுக்கு இணை மார்க்ஸ்தான் என்பதற்குச் சான்று இந்த நூல்.

மார்க்ஸ் நம்மை விட்டு மறைந்துவிட்டார்; ஆனல், மார்க்ஸியம் வாழ்கிறது. மார்க்ஸீயத்தை உலகத்திற்கு அளித்துச் சிரஞ்சீவித்வம் பெற்ருர் மார்க்ஸ். அவர் சரித்திரத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா?

சென்னை
1—9—'46

ஆர். எச். நாதன்

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **பால் லவார்க் எழுதிய வாழ்க்கைக் குறிப்பு** | 1—57 |
| **வில்லியம் லீப்னெட்** | 59—128 |
| 1. முதல் சந்திப்பு | 59 |
| 2. முதல் சம்பாஷணை | 61 |
| 3. புரட்சிக்காரர்களின் குரு | 66 |
| 4. மார்க்ஸின் நடை | 78 |
| 5. அரசியல்வாதி, குரு, மனிதர் | 82 |
| 6. மார்க்ஸ் எழுதும்பொழுது | 92 |
| 7. மார்க்ஸும் குழந்தைகளும் | 96 |
| 8. லென்சன் | 102 |
| 9. மார்க்ஸோடு உலாவுதல் | 103 |
| 10. வியாதியும் மரணமும் | 110 |
| 11. தனிமையும் வறுமையும் | 122 |
| 12. மார்க்ஸின் சமாதி | 122 |
| **ஏங்கல்ஸ் : புகழ்மாலை** | 129 |

# கார்ல் மார்க்ஸ்

## பால் லவார்க்*

ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தைந்தாம் வருஷம், பிப்ரவரி மாதத்தில்தான், கார்ல் மார்க்ஸை நான் முதன்முதலாகச் சந்தித்தேன். 1864-ம் வருஷம், செப்டம்பர் மாதம், 28-ந் தேதியன்று, ஸெண்ட் மார்டின் ஹாலில் நடைபெற்ற கூட்டத்தில்தான், முதலாவது சர்வதேச தொழிலாளர் மஹா சபையை [முதலாவது இண்டர்நாஷனலை] நிறுவினார்கள். பிரான்ஸ் தேசத்திலுள்ள இளம் ஸ்தாபனம் எவ்வளவு தூரம்

---

* பால் லவார்க் 1842-ம் வருடம் பிறந்தார். முதலாவது சர்வதேச தொழிலாளர் மஹா சபையில் [முதலாவது இண்டர்நாஷனலில்] ஓர் அங்கத்தினர். பிரெஞ்சுத் தொழிலாளர் கட்சியை ஸ்தாபித்த தலைவர்களில் ஒருவர். இரண்டாவது சர்வதேச தொழிலாளர் மஹா சபை [இரண்டாவது இண்டர்நாஷனல்] நிலவியிருந்த காலத்தில், பிரஞ்சுத் தொழிலாளர் இயக்கத்தின் தலைவர்களில் தலைசிறந்தவர். 1890-ம் வருஷம் செப்டம்பர் மாதம் "நீயூஜீட்" என்ற பத்திரிகையில், இந்தக் கட்டுரை முதன்முதலில் பிரசுரிக்கப்பட்டது. 1911-ம் வருஷம் மரணமடைந்தார்.

வளர்ச்சியடைந் திருக்கிறது என்பதை,மார்க்ஸிடம் நேரில் தெரிவிக்கும்பொருட்டு, நான் பாரிஸ் மாநகரிலிருந்து லண்டனுக்கு வந்திருந்தேன். முதலாளித்துவக் குடியரசைச் சார்ந்த சட்டசபையில் ஒரு அங்கத்தினராகவும் பெர்லினில் நடந்த மகா நாட்டிற்கு அதன் பிரதிநிதியாகவும் சென்றிருந்த மொஸ்ஸியோ [ஸ்ரீ] தோலேன் என்பவர் மார்ஸுக்கு என்னை அறிமுகப்படுத்திக் கடித மொன்று தந்திருந்தார்.

அப்பொழுது, எனக்கு வயது இருபத்து நான்கு. அந்த முதல் சந்திப்பின்போது என் மனதில் ஆழமாகப் பதிந்த எண்ணங்களை வாழ்நாள் முழுதும் என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. அச்சமயத்தில், மார்க்ஸ் உடல்நலம் குன்றிப்போய், மிகவும் பலஹீனமாகவே யிருந்தார். "மூலதனம்" என்ற அரிய பொருளாதார நூலின் முதல் வால்யூமை, ஓய்வொழிச்சலின்றி எழுதிக்கொண் டிருந்தார். [இரண்டு வருஷங்களுக்குப் பின்பு, 1867-ல் இந்த நூல் பிரசுரமாயிற்று.] அந்தப் புத்தகத்தைத் தம்மால் எழுதி முடிக்க முடியாது போய்விடுமோ என்று மார்க்ஸ் பயப்பட்டார். வாலிபர்களை மட்டற்ற மகிழ்ச்சியோடு வரவேற்றார். அதற்குக் காரணம் யாதெனில், "நான் இறந்துபோன பின்பு, கம்யூனிஸ்டுப் பிரசாரத்தைத் தொடர்ந்து நடத்தக் கூடிய வகையில், இளைஞர்களுக்கு நான் பயிற்சியளிக்க வேண்டும்" என்று, அவரே அடிக்கடி கூறுவது வழக்கம்.

விஞ்ஞான சாஸ்திரம் பொது வாழ்க்கை ஆகிய இரண்டிலும், முதல் வரிசையில் முக்கிய

ஸ்தானம் வகிப்பதற்கு அருகதையுள்ள ஒருசில மேதாவிகளில், மார்க்ஸூம் ஒருவர். இவ்விரு துறைகளையும் அவ்வளவு அன்னியோன்யமாக அவர் ஒன்றோடொன்றை இணைத்திருந்தாராதலால், அவரை ஒரு சோஷலிஸ்டு வீரராகவும் அதே சமயத்தில் அவரை ஒரு விஞ்ஞான சாஸ்திர நிபுணராகவும் ஒன்றுசேர்த்துப் பார்ப்பது அவசியமாகும். இல்லையேல், அவரை நாம் பரிபூரணமாக அறிந்துகொள்வது கடினம். ஒவ்வொரு விஞ்ஞான சாஸ்திரத்தையும், அதனதன் சொந்த நலனை உத்தேசித்து, அதனை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும், விஞ்ஞான சாஸ்திரங்களை ஆராயும்போது அவைகளின் பலாபலன்கள் எத்தகையனவாய் இருக்கும் என்ற எண்ணத்தில் ஆழ்ந்து பதிந்து, நமது சிந்தனையை நாம் அநாவசியமாக அலட்டிக்கொள்ளக் கூடாதென்றும் மார்க்ஸ் கூறுவார். ஆயினும், தம்மைத் தாமே சிறுமைப் படுத்திக்கொள்ள விரும்பாத எந்த அறிஞனும், பொது அலுவல்களில் பங்கெடுத்துக்கொள்வதை ஒரு கணமேனும் நிறுத்தவே கூடாதென்று கருதினார். அதாவது, கிணற்றுத் தவளைபோல், தமது படிப்பிலேயே, அல்லது, தமது ஆராய்ச்சி அறைக்குள்ளேயே தன்னைத் தானே அடைத்துப் பூட்டிக் கொள்வதில் திருப்தி அடைந்துவிடக் கூடாதென்றும், தமது காலத்தில் ஏனையோர் வாழும் வாழ்க்கையையும் சமூக அரசியல் போராட்டங்களையும் புறக்கணிக்கக் கூடாதென்றும் மார்க்ஸ் கருதினார். "சொந்த நலனுக்காக, விஞ்ஞான சாஸ்திரத்தைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது.

விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியில் தம்மையே அர்ப்பணம் செய்துகொள்ள வாய்ப்புப் பெற்ற அதிர்ஷ்டசாலிகள், மனித சமாஜத்தின் நன்மைக் காகத் தங்களுடைய அறிவைச் சமர்ப்பிக்க முத லில் முந்திக்கொள்ள வேண்டும்" என்று மார்க்ஸ் அடிக்கடி கூறுவார். "உலக நன்மைக்காகப் பாடு படு" என்பதுதான், அவருக்குப் பெரிதும் பிரிய மான கோட்பாடுகளில் ஒன்று.

தொழிலாளர் வர்க்கம் துன்பக் கடலில் ஆழ்ந்துகிடப்பதைக் கண்டு, மார்க்ஸ் மனமுரு கினர் என்பது உண்மைதான். ஆயினும், மனித வர்க்கத்தின்மீது வைத்திருந்த கருணையின் காரண மாக அவர் கம்யூனிஸ்டாக மாறவில்லை. சரித் திரத்தையும் பொருளாதார சாஸ்திரத்தையும் நுணுக்கமாக ஆராய்ச்சி செய்ததன் பயனுகவே, அந்த அறிவுணர்ச்சி தூண்டியே, அவர் கம்யூ னிஸ்டுத் தத்துவத்தை ஏற்றுக்கொண்டார். சுய நலம் என்ற கொடிய சுழலில் சிக்காதவர்களும், வர்க்கத் துவேஷம் என்ற காமாலையால் கண்கள் மங்கி மறைந்து போகாதவர்களும்—அதாவது பார பட்சமற்ற நடுநிலைமையாளர்களும் — இத்தகைய முடிவுக்குத்தான் வந்துதீர வேண்டு மென்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கை. ஆனால், திட்டவட்டமான கருத்துக்களை ஏற்கனவே மன தில் பதியவைத்துக்கொண்டு, மனித சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சி அரசியல் வளர்ச்சிகளை அவர் ஆராயவில்லை யென்றாலும், ஆராய்ச்சியின் பயனாய்த் தாம் கண்ட முடிவுகளைப் பாரெங்கும் பரப்பும் திட்டவட்டமான உத்தேசத்துடன்தான்,

அவர் தமது ஆராய்ச்சியை நடத்தினர்; தமது காலம்வரையிலும் கற்பனை உலகிலேயே சஞ்சரித்துக்கொண் டிருந்த சோஷலிஸ்டு இயக்கத்திற்கு விஞ்ஞான ரீதியான அஸ்திவாரத்தை நல்கும் திட நம்பிக்கை யோடேயே அவர் ஆராய்ச்சியில் ஈடு பட்டார். பொது அலுவல்கள் சம்பந்தப்பட்ட மட்டில், தொழிலாளர் வர்க்கத்தின் வெற்றிக்காகப் பாடுபடுவதில்தான் அவர் பங்கெடுத்துக்கொண் டார். தொழிலாளர் வர்க்கம், சமுதாயத்தின் அரசியல் துறை பொருளாதாரத் துறைகளில் தலைமைதாங்கும் சக்தியாக வந்தவுடன், கம்யூனிஸத்தை நிலைநாட்டுவதே அதன் சரித்திர பூர்வமான கடமை. அது மாதிரியாகவே, விவசாயம் இயந்திரத் தொழில் ஆகியவைகளின் அபிவிருத்தியைத் தடை செய்துவரும் நிலப்பிரபுத்துவத்தின் தளைகளைச் சுக்கு நூறாகத் தகர்த்தெறிவதும், மனிதர்களும் சரக்குகளும் சுயேச்சையாக ஊடாடுவதற்கு வேண்டிய வழிகளைத் திறந்து விடுவதும், தொழிலாளிகளும் முதலாளிகளும் தங்களுக்குள் சுதந்திரமாகப் பரஸ்பரம் ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு வசதி யளிப்பதும், உற்பத்தி சாதனங்கள் பரிவர்த்தனை ஆகியவைகளைக் கேந்திரிகரித்தலும், இறுதியாக, கம்யூனிஸ்டு சமுதாயத்தின் லோகாயத அறிவுச் சக்திகளைத் தயார் செய்வதும்தான் அதிகாரத்தைக் கைப்பற்றியவுடன் முதலாளித்துவம் செய்யவேண்டிய சரித்திர பூர்வமான கடமைகள்.

தாம் பிறந்த தாயகத்திற்குச் சேவை செய்வதோடு மட்டும் மார்க்ஸ் நின்றுவிட வில்லை. "நான், உலகத்தின் ஒரு பிரஜை; எங்கெங்கு வாழ்

கிறேனே, அங்கெல்லாம் நான் தொண்டு செய்வேன் " என்று அவர் கூறுவதுண்டு. வாஸ்தவத்தில், பல சம்பவங்களும், அரசியல் அடக்கு முறைகளும், மார்க்ஸைப் பல நாடுகளுக்குத் [பிரான்ஸ், பெல்ஜியம், இங்கிலாந்து] துரத்தின. அந்த நாடுகளி லெல்லாம், புரட்சிகரமான இயக்கங்களை வளர்ப்பதில் மார்க்ஸ் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டார்.

ஆனால், முதன்முதலில் நான் அவரைச் சந்தித்தபொழுது - அதாவது, மெய்ட்லண்ட் பார்க் ரோடில், ஓர் அறையில் சிரத்தையோடு ஆழ்ந்து படித்துக்கொண் டிருந்த தருணத்தில் பார்த்த பொழுது - அலுப்புச் சலிப்பில்லாத நிகரற்ற ஒரு சோஷலிஸ்டுக் கிளர்ச்சிக்காரராக அவர் தோற்றமளிக்க வில்லை; அறிவுக்களஞ்சியமாகவே அவர் காட்சியளித்தார். இயந்திரங்களைக் கொண்டு உற்பத்தி செய்வதில் முன்னேறியுள்ள சகல நாடுகளிலிருந்தும், ஏராளமான கட்சித் தோழர்கள் அவரது ஆராய்ச்சி அறைக்குத் திரள்திரளாக வந்தனர். ஆம், சோஷலிஸத்தின் தந்தையிடமிருந்து உபதேசங்களையும் யோசனைகளையும் பெறத்தான் சாரி சாரியாக அவர்கள் வந்தனர். அந்த அறை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. அறிவுத் துறையில், மார்க்ஸ் எத்தகைய வாழ்க்கை நடத்தினார் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள யாராவது விரும்பினால், அவர்கள் அந்த அறையின் முழு விவரங்களையும் அறிந்துகொள்வது அவசியமாகும். அந்த அறை, முதல் மாடியில் இருந்தது. பார்க்கை நோக்கி அமைந்திருந்த விசாலமான

ஜன்னலின் வழியாக ஊடுருவிப் பாய்ந்த ஒளியால், அறை பிரகாசமாக இருந்தது. ஜன்னலுக்கு நேர் எதிரிலும், அடுப்புக்கு இரு பாகங்களிலும் ஏராள மான புத்தகங்கள் அடங்கிய அலமாரிகள் இருந் தன. அவைகளின்மீது, பழைய பத்திரிகைகளும் கையெழுத்துப் பிரதிநிதிகளும் கட்டுக் கட்டாகக் கூரையை முட்டிக்கொண் டிருந்தன. ஜன்னலின் ஒரு பாகத்தில் இரண்டு மேஜைகள் இருந்தன. அவைகளிலுங்கூட, பல்வேறு கடிதங்களும் குறிப்புகளும் பத்திரிகைகளும் புத்தகங்களும் மலைபோல் குவிந்து கிடந்தன. அறையின் மத்தி யில், வெளிச்சம் நிறைய உள்ள இடத்தில், எழுது வதற்குரிய சிறிய மேஜை ஒன்று இருந்தது. அதன் பரப்பு, மூன்றடி நீளம் இரண்டடி அகலம். இத்துடன், மரத்தால் செய்யப்பட்ட நாற்காலி ஒன்றும் இருந்தது. இந்த நாற்காலிக்கும் ஜன்னலை நோக்கி நிற்கும் ஒரு புத்தக அலமாரிக்கும் மத்தியில் தோலால் உறையிடப்பட்ட ஸோபா ஒன்று இருந் தது. எப்பொழுதாவது, சிரம பரிகாரத்திற்காக, மார்க்ஸ் அதில் படுத்துக்கொள்வது வழக்கம். மற்றொரு மேஜையின்மீது புத்தகங்களும் சுருட்டு களும் தீப்பெட்டிகளும் புகையிலை ஜாடிகளும புதல்விகள், மனைவி, பிரடரிக் ஏங்கல்ஸ், வில்ஹெம உல்ப் ஆகியோரின் போட்டோக்களும் அங்கு மிங்குமாகச் சிதறிக் கிடந்தன. மார்க்ஸ் மிதமிஞ்சிச் சுருட்டுக் குடிப்பார். "மூலதனம் என்ற நூலை எழுதும்பொழுது நான் குடித்த சுருட்டுகளுக்கு எவ்வளவு பணம் செலவாயிற்றோ, அவ்வளவு பணம் 'மூலதன'த்தை விற்பதனால் கிடைக்குமா

என்பது சந்தேகமே" என்று மார்க்ஸ் என்னிடம் கூறினர். ஆனல், தீப்பெட்டியை இன்னும் அபரிமிதமாக அவர் உபயோகித்தார். தாம் குடித்துக்கொண் டிருந்த சுருட்டை, அல்லது குழாயை அவர் அடிக்கடி மறந்துபோவது வழக்கமாதலால், அதைத் திரும்பத் திரும்பக் கொளுத்த வேண்டிய அவசியம் நேர்ந்தது; எனவே, மிகக் குறுகிய காலத்திற்குள் ஒரு தீப்பெட்டியை அவர் அப்படியே காலி செய்துவிடுவார்!

அவருடைய புத்தகங்களையும் குறிப்புக் காகிதங்களையும் ஒழுங்காக அடுக்கிவைக்க [வாஸ்தவத்தில், தாறுமாருக அடுக்கி வைக்க] யாரையும் அவர் அனுமதிக்க மாட்டார். ஒழுங்கின்றி, வரிசையாக இல்லாமல் கிடப்பதுபோலவே, அவை மேல் பார்வைக்குத் தோன்றும். ஆனல், வாஸ்தவத்தில், ஒவ்வொன்றும் அதனதன் இடத்தில் ஒழுங்காகத்தான் இருந்தது. தமக்கு எந்தப் புத்தகம் தேவையோ, அல்லது, எந்தக் கையெழுத்துப் பிரதியை அவர் எடுக்க விரும்புகிருரோ அதைக் கொஞ்சமேனும் சிரமமின்றி நொடிப்பொழுதில் கையை நீட்டி எடுத்துவிடுவார். சம்பாஷணை செய்துகொண் டிருக்கும்பொழுதுகூட, திடீரென நிறுத்தி, பேசிக்கொண் டிருந்த விஷயம் சம்பந்தமான வாக்கியங்களையும் புள்ளி விவரங்களையும் புத்தகத்தி லிருந்து எடுத்துக்காட்டுவார். அவருடைய படிப்பு அறையில் கிடந்த புத்தகங்களும் குறிப்புக் காகிதங்களும், கைகால்களைப்போல், அவரது மனத்திற்குக் கீழ்ப்படிந்து நடந்தன.

புத்தகங்களை வரிசையாக அடுக்கிவைக்கும் பொழுது, அவைகளின் பருமனைப்பற்றி மார்க்ஸ் கிஞ்சிற்றேனும் பொருட்படுத்துவது கிடையாது. மிகப் பெரிய புத்தகங்களோடு சின்னஞ் சிறிய துண்டுப் பிரசுரங்களையும் சேர்த்து வைத்திருப்பார். புத்தகங்களின் பருமனுக்குத் தக்கபடி யல்லாமல், அவைகளில் அடங்கியிருக்கும் விஷயங்களுக்குத் தக்கபடி, புத்தகங்களை வரிசையாக அடுக்கிவைப்பது வழக்கம். அறிவை அபிவிருத்தி செய்துகொள்வதற்கு உதவி புரியும் கருவிகளாகப் புத்தகங்களைக் கருதினாரே தவிர, பொழுதுபோக்குக் கருவிகளாகப் புத்தகங்களை அவர் கருதியதே இல்லை. "அவை என்னுடைய அடிமைகள்; எனது இஷ்டம்போல் அவை எனக்குச் சேவை செய்ய வேண்டும்" என்று அவர் கூறுவார். புத்தகங்களின் வடிவத்திற்கும், பைண்டிங்கிற்கும், அச்சடித்திருப்பதின் அழகிற்கும், அல்லது, காகிதத்தின் அழகிற்கும் அவர் அதிக முக்கியத்துவம் கொடுப்பதே கிடையாது. அவர், பக்கங்களின் அடியில் கோடு கிழிப்பார்; விளிம்புகளில் பென்ஸிலால் அடையாள மிடுவார். குறிப்புகள் எழுதி வைப்பதில்லை என்றாலும், ஆசிரியரின் கருத்துகள் தமக்கு உடன்பாடாய் இராவிட்டால், விளிம்பில் ஆச்சரியக் குறி, அல்லது, கேள்விக் குறி போட்டு வைப்பார். வாக்கியங்களின்கீழ் கோடு கிழிப்பதில், அவர் அலாதியான ஒப்பற்ற ஒரு முறையைக் கையாண்டு வந்தார்; நினைத்தபொழுது, சிரமமின்றி, தேவையான வாக்கியங்களைத் திரும்பவும் கண்டுபிடிக்க அந்த முறை பெரிதும் உதவி புரிந்தது. அவருக்கு, அசாதாரணமான ஞாபகசக்தி உண்டு.

தாம் படித்த புத்தகங்களில் அடையாள மிட்டு வைத்திருந்த வாக்கியங்களையும், எழுதி வைத்திருந்த குறிப்புகளையும் சில வருடங்களுக்கு ஒரு முறை திரும்பத் திரும்பப் படித்து, ஞாபகசக்தியை மீண்டும் புதுப்பித்துக்கொள்வது அவருடைய வழக்கம். ஹெகலின் உபதேசத்தைப் பின்பற்றி, பிள்ளைப் பிராயத்தில் இருந்தே, அலாதியான முறையில் மார்க்ஸ் வாக்கியங்களை மனப்பாடம் செய்வார்.

கேத்தே, ஹெயின் ஆகிய பேராசிரியர்களின் நூல்களை அவர் கரைத்துக் குடித்திருந்தார்; சம்பாஷணையின் இடையிடையே, அவர்களுடைய காவியங்களிலிருந்து அடிக்கடி மேற்கோள்கள் எடுத்துக் காட்டுவார். ஐரோப்பிய பாஷைகளிலுள்ள தலை சிறந்த கவிகளைப் பொறுக்கி எடுத்து, சதா சர்வ காலமும் அவற்றை அவர் படித்துக்கொண்டேயிருப்பார். அகிலஸின் நூல்களை, கிரேக்க மூலத்திலேயே வருடா வருடம் திரும்பத் திரும்பப் படிப்பார். இதுவரையிலும் உலகில் தோன்றியுள்ள நாடகப் பேராசிரியர்களில் தலைசிறந்தவர்களான அகிலஸ், ஷேக்ஸ்பியர் ஆகிய இரு மேதாவிகளிடம் அவருக்கு அபரிமிதமான மதிப்பு உண்டு. ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் அனைத்தையும் மார்க்ஸ் கரைத்துக் குடித்திருந்தார். மார்க்ஸின் உள்ளத்தை ஷேக்ஸ்பியர் கொள்ளை கொண்டுவிட்டார். சர்வ சாதாரண நாடகப் பாத்திரங்கள்கூட, அவருக்குப் பரிச்சயமிருந்தது. மார்க்ஸ் குடும்பத்தினர் அனைவரும் ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் பல பகுதிகளை மனப்பாடம் செய்துவைத்திருந்தனர்.

1848-ம் வருடத்திற்குப் பின்பு, மார்க்ஸ் ஆங்கில மொழியை இன்னும் நன்ருகக் கற்கத் தொடங்கினர், - ஏற்கனவே, ஆங்கிலத்தை, நன்ருக வாசிக்க அவரால் முடியும். அப்பொழுது, ஷேக்ஸ்பியர் நாடகங்களில் வரும் முக்கிய சொற்ருெடர்களைப் பொறுக்கி யெடுத்து, ஒன்றுதிரட்டி வந்தார். வில்லியம் காபட் என்ற பேராசிரியரின் கட்டுரைகளிலிருந்தும் அவ்வாறே செய்தார். இவருடைய நூல்களில் மார்க்ஸுக்குப் பெரிதும் ஈடுபாடு உண்டு. தாந்தே, பர்ன்ஸ் போன்ற மஹா கவிகளிடம் மார்க்ஸுக்குப் பெரிதும் ஈடுபாடு உண்டு. பர்ன்ஸின் சரள காவியங்களையும் காதல் கவிதைகளையும், தமது பெண் குழந்தைகள் பாடுவதைக் கேட்டு, மார்க்ஸ் பேரானந்த மடைவார்.

அலுப்புச்சலுப்பின்றி, சதா சர்வ காலமும் ஆராய்ச்சி செய்துகொண் டிருந்தவரான குவியர் என்ற விஞ்ஞான மேதாவி, பாரிஸ் மியூஸியத்தின் தலைவராக இருந்த காலத்தில், சொந்த உபயோகத்திற்கென ஏராளமான ஆராய்ச்சி அறைகளை வைத்திருந்தார். ஒவ்வொரு அறையையும், வெவ்வேறு விதமான விஷயங்களை ஆராய்ச்சி செய்வதற்கென அவர் தனியே ஒதுக்கி வைத்திருந்தார். எனவே, ஒவ்வொரு அறையிலும் ஆராய்ச்சிக்குத் தேவையான பிரத்தியேக புத்தகங்களும் கருவிகளும் நிறைந்திருந்தன. ஏதேனும் ஒரு அறையில், ஒரு விஷயத்தை ஆராய்ந்துகொண் டிருக்கும்பொழுது, அலுப்புத் தட்டினல், மற்ருெரு அறைக்குச் சென்று, வேறு விஷயத்தை ஆராய்வது அவருடைய வழக்கம். ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் மூளையைச்

செலுத்தி, நுணுக்கமாக ஆராயும்போது, மூளை சோர்வடைந்தால், மற்ரோர் அறைக்குச் சென்று வேறு விஷயத்தை ஆராய்வது சிரம பரிகாரத்திற் குச் சமம் என்பது அவர் கருத்து. குவியரைப்போலவே, மார்க்ஸும் ஓய்வொழிச்ச லின்றி உழைப்பவர். ஆனால், குவியரைப்போன்று மார்க்ஸினிடம் ஆராய்ச்சி செய்வதற்குப் போதிய அறைகள் கிடையா. எனவே, அறைக்குள் அங்கு மிங்கும் உலாவுவதன்மூலம், மார்க்ஸ் சிரம பரிகாரம் தேடிக் கொள்வார். இதனால், அறையில் விரிக்கப்பட்டிருந்த ரத்தினக் கம்பளத்தில், ஜன்னலுக்கும் கதவிற்கும் இடையில், பச்சைப் பசேரென்ற புல்வெளியின் ஊடே சிறிய நடைபாதை ஒன்று யிருப்பதுபோல், கம்பளத்தில் உள்ள நூல்கள் தேய்ந்துபோயிருந்தன. சில சமயங்களில், ஸோபாவில் படுத்துக்கொண்டு ஏதேனும் நாவல் படிப்பார். அவர், எப்பொழுதும் இரண்டு மூன்று நாவல்களை மாற்றி மாற்றிப் படிப் பது வழக்கம். டார்வினைப்போல், அவரும், நாவல் கள் படிப்பதைப் பெரிதும் விரும்பினர். பதினெட் டாவது நூற்றுண்டில் எழுதப்பட்ட நாவல்களில் அவருக்குப் பிரியம் அதிகம். அவைகளில் பீல்டிங்ஸ் எழுதியுள்ள "**டாம் ஜோன்ஸ்**" என்ற நாவலை அவர் பெரிதும் விரும்பினர். நவீன நாவல் ஆசிரியர் களில் பால்-டி-காக், சார்லஸ் லிவர், மூத்த டூமாஸ், ஸர் வால்டர் ஸ்காட் [இவரது "**ஒல்ட் மார்ட்டாலிட்டி**" என்ற புத்தகத்தை உயர்ந்தரகக் கற்பனை சிருஷ்டியாக மார்க்ஸ் கருதினர்] ஆகியவர்களின் புத்தகங்களைப் பெரிதும் விரும்பினர். நகைச்சுவை ததும்பும் கதைகளும், சாகஸங்கள் நிறைந்த கட்டுக்

கதைகளும் அவருக்குப் பிடித்தமானவைகளே. உயர்ந்த கற்பனு சக்திநிறைந்த சிருங்காரக் கதைகளை எழுதிய ஆசிரியர்களில் பால்சாக், ஸெர்வாண்டே ஆகியவர்கள்தான் தலைசிறந்தவர்கள் என்பது அவரது கருத்து. சாகஸங்கள் புரியும் மத்தியகால வீரர்களின் செல்வாக்கு அழிந்து வருகிறது என்பதைத்தான், "டான் குக்ஸ்ஸாட்" என்ற நாவல் பிரதிபலிக்கிறது என்று அவர் கருதினுர். இவர்களது குணுதிசயங்கள், புதிதாகத் தலைதூக்கி வளர்ந்துவரும் முதலாளித்துவ உலகில், அபத்தக் களஞ்சியமாகவும் முட்டாள்தனமாகவும் இருக்கின்றன. பால்சாக்கை அவர் பெரிதும் மதித்தபடியால், பொருளாதார ஆராய்ச்சியை முடித்தவுடன், அவர் எழுதியுள்ள "லா காமடி ஹூமேன்" என்ற புத்தகத்திற்கு ஒரு விமர்சனம் எழுத வேண்டுமென்று மார்க்ஸ் கருதியிருந்தார். தமது காலத்திலுள்ள சமூக வாழ்க்கையின் சரித்திராசிரியர் என்று மாத்திரம் பால்சாக்கை மார்க்ஸ் கருதவில்லை; எதிர்காலத்தையும் சித்தரிக்கும் ஆற்றல் உடையவராகப் பால்சாக்கை மார்க்ஸ் கருதினுர். பால்சாக் சித்தரித்திருந்த சம்பவங்கள் லூயீ பிலிப் காலத்தில் கருத்தரித்தபோதிலும், மூன்ருவது நெப்போலியன் காலத்தில் - பால்சாக் இறந்துபோன பின்புதான் - அவை மூக்கும் முழியும் உயிரும் உள்ள குழந்தைகளாகப் பரிபூரணமாக வளர்ந்தன.

முக்கியமான ஐரோப்பிய பாஷைகளையெல்லாம் மார்க்ஸால் வாசிக்க முடியும். பிரெஞ்சு, ஆங்கில, ஜெர்மானிய பாஷைகளை நன்கு அறிந்தவர்கள் பாராட்டக்கூடிய முறையில், இந்த மூன்று

பாஷைகளை எழுதவும் படிக்கவும் அவரால் முடியும். "வாழ்க்கைப் போராட்டத்தில் அன்னிய பாஷை ஒரு பெரிய ஆயுதம்" என்று கூறுவதில், அவருக்கு அளவிட முடியாத பிரியம். பாஷைகளை எளிதில் கற்றுக்கொள்ளும் பேராற்றல்படைத்தவர் மார்க்ஸ். இந்தத் திறனை அவரது புதல்விகளும் பெற்றிருந்தனர். அவர் ருஷ்ய பாஷையைக் கற்கத் துவங்கிய பொழுது, அவருக்கு ஏற்கனவே ஐம்பது வயதாகி விட்டது. முன்னமேயே அவருக்குத் தெரிந்திருந்த, வழக்கத்தி லில்லாத, வழக்கத்திலுள்ள பாஷைகளுக்கும், ருஷ்ய பாஷைக்கும் இடையே சப்தத்தில் யாதொரும் சம்பந்தமும் இல்லாதிருந்தும்கூட, ஆறு மாத காலத்திற்குள் தலைதெறிக்கும் வேகத்தில் ருஷ்ய பாஷையை அவர் கற்றுக்கொண்டுவிட்டார். ருஷ்ய மூலத்திலேயே ருஷ்யக் காவியங்களையும் நூல்களையும் படித்து அனுபவிக்க ஆரம்பித்துவிட்டார். புஷ்கின், கோகோல், ஷெஷ்ரின் ஆகிய பேராசிரியர்கள் அவருக்குப் பெரிதும் பிடித்தமானவர்கள். அதிகாரிகள், விசாரணை நடத்தி வெளியிட்டுள்ள அறிக்கைகளைப் படிக்க வேண்டுமென்ற பேராவல் தான், அவரை ருஷ்ய பாஷையைப் படிக்கும்படி தூண்டிற்று. இந்த அறிக்கைகள் மனதை உருக்கும் வண்ணம் மக்களின் பரிதாபகரமான நிலைமையை வெளிப்படுத்தியதால், சர்க்கார் அவைகளை அமுக்கி வைத்திருந்தது. மார்க்ஸின் ஆருயிர்த் தோழர்கள், அந்த அறிக்கைகளில் சிலவற்றை, அவருக்குக் கொண்டுவந்து கொடுத்தார்கள். மேற்கு ஐரோப்பாவிலுள்ள பொருளாதார நிபுணர்களில், அந்த

அறிக்கைகளைப்பற்றித் தெரிந்திருந்தவர் மார்க்ஸ் ஒருவர்தான்.

காவியங்களையும் நாவல்களையும் படித்து வந்ததோடு கூடவே, மூளைக்கு ஓய்வுகொடுக்கும் பொருட்டு, மார்க்ஸ் மற்றொரு விஷயத்திலும்-அதாவது கணிதத்திலும் - ஈடுபட்டிருந்தார். மார்க்ஸ் இதைப் பெரிதும் விரும்பினார். பீஜ கணிதம் அவருக்கு மனச்சாந்தியைக்கூட அளித்தது. சண்டமாருதம் போன்ற இன்னல்கள் அவரது வாழ்க்கையை ஆட்டி அலைத்து, மனோவேதனை அலை யலையாக மோதியபொழுது, பீஜ கணிதத்தில்தான் அவர் அபயம் தேடினார். தமது மனைவி கடைசி முறை, நோய்வாய்ப்பட்டிருந்த காலத்தில், தமது விஞ்ஞான ஆராய்ச்சி வேலைகளைத் தொடர்ந்து நடத்த முடியாமல் தவியாய்த் தவித்தார். மனைவி படும் வேதனைகளை பற்றிய சிந்தனையிலிருந்து தப்புவிக்க, -அதனைச் சிறிது நேரம் மறந்திருக்க - ஒரேஒரு வழிதான் இருந்தது; அதற்காக, கணிதத்தில் மூழ்கிக் கிடப்பார். மனோவேதனையால் இவ்வாறு துடிதுடித்த காலத்தில், கணித சாஸ்திரத்தில், கூட்டுதலைப்பற்றி மிக நுணுக்கமாகக் கட்டுரை ஒன்று எழுதினார். கணித சாஸ்திர நிபுணர்கள் அதைப் பெரிதும் பாராட்டி, அதற்குக் கணிதசாஸ்திரத்தில் மஹோன்னதஸ்தானத்தை அளித்திருக்கிறார்கள். அவருடைய நூல்கள் அனைத்தையும் ஒன்றுதிரட்டிப் பிரசுரிக்கும்பொழுது, கணித சாஸ்திரத்தைப்பற்றி எழுதிய கட்டுரையும் அவைகளோடு சேர்த்துக்கொள்ளப்படும். உயர்தர கணிதத்தில், தர்க்க இயலின் சலனத்தை மிகமிகத் தர்க்கரீதியான வடிவத்தில்

கண்டுபிடிப்பது இதனுல் சாத்தியமாயிற்று. கணித சாஸ்திரத்தைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய நிலைமையை அடையும்பொழுதுதான், விஞ்ஞான சாஸ்திரமானது உண்மையில் வளர்ச்சியடைந்திருப்பதாகக் கூற முடியும் என்று அவர் கருதினுர்.

ஆராய்ச்சியி லீடுபட்டிருந்த காலத்தில் கஷ்டப் பட்டுத் திரட்டிய ஆயிரக் கணக்கான புத்தகங்கள் நிறைந்த மார்க்ஸின் வாசகசாலை, அவருடைய தேவையைப் பூர்த்தி செய்வதாய் இல்லை; பல வருஷங்கள்வரையிலும், தொடர்ச்சியாக, பிரிட்டிஷ் மியூஸியத்திலுள்ள வாசகசாலைக்கு அவர் போய் வந்தார். அங்குள்ள புத்தக அட்டவணையை அவர் பெரிதும் பாராட்டிச் சொல்வ துண்டு. அவருடைய எதிரிகள்கூட, அவர் பெரிய கல்விமான் என்பதை ஒப்புக்கொண் டிருக்கிறுர்கள். அவர் பொருளாதார சாஸ்திரத்தில் மாத்திரமின்றி, சர்வதேச சரித்திரம், தத்துவ சாஸ்திரம், இலக்கியம் ஆகியவைகளிலும் அபாரப் புலமை பெற்றிருந்தார்.

வெகு நேரம் சென்று பிறகே, தினந்தோறும் உறங்கச் செல்வது வழக்கமாயினும், காலையில் எட்டு மணியிலிருந்து ஒன்பது மணிக்குள்ளாக மார்க்ஸ் விழித்தெழுந்து விடுவார். பாலில்லாத காபியை ஒரு கப் குடித்தவுடன், தினசரிப் பத்திரிகைகளைப் படித்து முடிப்பார். பின்னர், தமது படிப்பு அறைக்குச் சென்றுவிடுவார். அங்கு, அடுத்த நாள் காலை இரண்டு, அல்லது மூன்று மணி வரைக்கும் படிப்பில் ஆழ்ந்துகிடப்பார். சாப்பாட்டிற்கு மாத்திரம் எழுந்து வருவார். மப்பு மந்தாரமின்றிக் காலநிலை இருந்தால், ஹாம்ப்ஸ்டெட் ஹீத்

வரையிலும் உலாவச் செல்வார். படிப்பதில் இளைத் திருக்கும்பொழுது, மத்தியில், இரண்டொரு மணி நேரம் ஸோபாவில் சாய்ந்துகொள்வார். வாலிபப் பருவத்திலிருந்தே, இரவுமுழுதும் வேலை செய்யும் பழக்கம் அவருக்கு உண்டு. ஏதேனும் வேலை செய்துகொண்டே இருப்பதில் அவருக்குப் பிரியம் அதிகம். இத்தகைய குணம் படைத்த மார்க்ஸ், உணவைக்கூட மறந்துவிடுவது இயற்கைதானே! அவர் சாப்பாட்டு அறைக்குள் வருவதற்கு முன்பு, அவரைத் திரும்பத் திரும்பப் பன்முறை அழைத் துக்கொண்டே யிருக்க வேண்டும். இது தினசரி வழக்கமாக நடக்கும் சம்பவம். கடைசிக் கவளத்தை மென்று விழுங்குவதற்குள், படிப்பறைக்கு மீண்டும் திரும்பிவிடுவார். அவர் உட்கொள்ளும் உணவின் அளவு மிகமிகக் குறைவு. போதிய அளவு பசிப் பதும் இல்லை; பக்குவப்படுத்தப்பட்ட ருசிகர மான பன்றி உப்புக் கண்டம், கருவாடு, ஊறுகாய் முதலியனவற்றைப் புசிப்பதன் மூலம், பசியின்மை யோடு அவர் போராடி வந்தார். அவருடைய மூளை செய்துவந்த மிதமிஞ்சிய வேலைக்கு வயிறு உண வளிக்க வேண்டி யிருந்து. உடல் உறுப்புக்கள் அனைத்தும் மூளையில் படிந்தன; அங்கேயே தொழில் புரிந்தன. சிந்தனை செய்து ஆராய் வதில்தான் அவர் பேரின்ப மடைந்தார். இளம் பரு வத்தில் அவருக்குத் தத்துவ சாஸ்திரக் குருவாக விளங்கிய ஹெகல், "திருடன், எப்படிக் கன்னக் கோல் வைப்பது என்பதுபற்றி, பற்பல ஆலோசனை கள் செய்து திட்டம் வகுத்துக்கொள்கிறானே, அந்தத் திட்டம், விண்ணுலகத்திலுள்ள அற்புதங்

களைவிட, பன்மடங்கு அற்புதமானது; போற்றிப் புகழத்தக்கது" என்று கூறியிருப்பதை மார்க்ஸ் சதா சொல்லிக் கொண்டே இருப்பார்.

அவருக்கு எஃகுபோன்ற உடல் உறுதி இருந்தது என்பதில் சந்தேகமே யில்லை. இல்லையேல், அவரால் இத்தகைய அசாதாரணமான வாழ்க்கையை நடத்தியிருக்கவே முடியாது; அல்லது, மூளையைச் செலுத்தி, இத்தகைய கடினமான வேலைகளைச் செய்திருக்கவே முடியாது. வாஸ்தவத்தில், அவர் உறுதியான உடல் படைத்தவர். சாதாரணமாக, ஒரு மனிதனுக்கு இருக்கவேண்டியதை விட உயரமான சரீரம், அகன்ற தோள்கள், பரந்த மார்பு. கால்கள் மட்டும், உடலுக்குத் தக்கபடி நீளமாக இல்லையாயினும், [யூதர்களுக்குக் கால்கள் குட்டையாகவே இருக்கும்.] அவருடைய அவயவங்கள் அனைத்தும் ஒன்றுக்கு ஒன்று இயைந்து வளர்ந்திருந்தன. வாலிபப் பருவ விளையாட்டுக்களில் மார்க்ஸ் ஈடுபட்டிருந்திருப்பாரேயானால், அவரது உடல் இன்னும் எவ்வளவோ மடங்கு பலம் பொருந்தியதாக இருந்திருக்கும். உலாவுவது ஒன்றுதான் அவர் செய்த தேகப் பயிற்சி. கொஞ்சங்கூடக் களைப்புத் தட்டாமல், சுருட்டுக் குடித்துக்கொண்டும், பேசிக்கொண்டும் மணிக் கணக்காக நடப்பார்; குன்றுகள்மீதுகூட, சிறிதும் சோர்வடையாமல் ஏறிவிடுவார். படித்துக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருந்த அறையிலேயே, அங்குமிங்கும் உலாவிய காலத்து, சகல காரியங்களையும் அவர் செய்து முடித்திருக்கிறார் என்று சொன்னால், அது மிகையாகாது. இப்படி உலாவிக்கொண்

டிருக்கும்பொழுது, தாம் சிந்தித்த விஷயங்களைக் குறிப்பு எழுதிக்கொள்வதற்காக மாத்திரம், நடுவிலே சிறிது நேரம் மேஜையினருகே சென்று உட்காருவார். உலாவிக்கொண் டிருக்கும்பொழுதே உரையாடுவதில் அவருக்குப் பிரியம் அதிகம். வாதப் பிரதிவாதம் உக்ர நிலையை அடைந்தால், அல்லது சம்பாஷணை மிகமிக முக்கியமானதாக இருந்தால் மட்டுமே, நடக்கும்பொழுது சிறிது நேரம் நிற்பார்.

ஹாம்ஸ்டெட் ஹீத்தில் இருந்த காலத்தில் பல வருடங்கள்வரையிலும், நானும் மார்க்ஸோடு உலாவச் செல்வ துண்டு. பச்சைப் பசேலென்ற வயல்களினூடே, நடந்து செல்லும்பொழுதுதான், பொருளாதார சாஸ்திரத்தை, மார்க்ஸிடமிருந்து நான் கற்றுக்கொண்டேன் எனலாம். அந்தச் சமயம்தான், 'மூலதனத்தின்' முதல் பாகத்தை மார்க்ஸ் எழுதிக்கொண் டிருந்தார். என்னோடு இவ்வாறு சம்பாஷணை செய்துகொண் டிருக்கும்பொழுது, அவர், தம்மை அறியாமலே, 'மூலதனத்தின்' முதல் பாகத்திலுள்ள சகல விஷயங்களையும் உருவாக்கினார். வீடு திரும்பியதும், எனது ஞாபகத்திற்குத் தக்கபடி, மார்க்ஸிடமிருந்து கேட்ட விஷயங்களின் சாராம்சத்தை நான் எழுதி வைப்பது வழக்கம். ஆனால், ஆழமாக, பின்னிப்பிணைந்து செல்லும் மார்க்ஸின் சிந்தனைப் போக்கைப் பின்தொடர முடியாது, நான் தத்தளிப்ப துண்டு. அதாவது, எனக்குப் பரிபூரணமாகப் புரிவதேயில்லை. துரதிர்ஷ்ட வசமாக, இந்தக் குறிப்புக்களை நான் இழந்துவிட்டேன். காரணம் யாதெ

னில், பாரிஸ் கம்யூனுக்குப் பிறகு, அடக்குமுறைப் பேய் கோரவடிவத்தில் தாண்டவமாடியபொழுது, பாரிஸிலும் பார்டியோவிலும் இருந்த இந்தக் குறிப்புகளை யெல்லாம், போலீஸார் கைப்பற்றிச் சென்று எரித்துச் சாம்பலாக்கிவிட்டார்கள். ஏராள மான ஆதாரங்களுடன், மனித சமுதாயத்தின் வளர்ச்சியைப்பற்றிய அற்புதமான தத்துவத்தை, ஒரு நாள் மாலையில், மார்க்ஸ் எனக்கு விவரமாக விளக்கினார். முக்கிய குறிப்புகள் அடங்கிய இந்தக் கையெழுத்துப் பிரதியை இழந்துவிட நேர்ந்தது வருந்தத்தக்கது. என்னுடைய கண்களை மறைத் திருந்த திரையை விலக்கியதுபோல் இருந்தது, அன்று மார்க்ஸ் எனக்குப் போதித்த புதிய தத்து வங்கள். அப்பொழுதுதான், முதன்முதலில் தர்க்க ரீதியாக, சமுதாய சரித்திரத்தை என்னால் தெளி வாகக் கிரகிக்க முடிந்தது.

எண்ணங்களின் பரிணமத்திற்கும், சமுதாயத் தின் பரிணமத்திற்கும் அடிப்படையாக உள்ள லோகாயத காரணங்களை வெளிப்படையாகப் பார்த்தால், முரண்பாடுகள் நிறைந்திருப்பதாகவே தோன்றும். ஆனால், மார்க்ஸ் அவைகளைத் தெளி வாக எடுத்துரைத்ததுமுதல் எனது மனதில் குடிகொண் டிருந்த குழப்பம், அறவே அகன்றது. இந்தப் புதிய தத்துவம் என்னை ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது எனலாம். அன்று எனது மன தில் பதிந்த எண்ணங்கள், பல வருடங்கள் வரையி லும் நிலைத்திருந்தன. என்னுடைய எளிய சக்திக் குத் தக்கபடி, மட்ரிட்டிலுள்ள சோஷலிஸ்டுகளுக்கு இந்தத் தத்துவத்தை நான் எடுத்துரைத்த

பொழுது, அவர்களும் இதைக் கேட்டும் பிரமித்துப்போய்விட்டார்கள். மார்க்ஸின் மூளையில் உருவான சகல தத்துவங்களிலும், இதுதான் மஹோன்னதமானது. மனிதனின் மூளை, இதுவரை உருவாக்கியுள்ள தத்துவங்களில் இதுதான் தலைசிறந்த தத்துவம் என்பதில் கொஞ்சமேனும் சந்தேகமில்லை.

சரித்திரம், விஞ்ஞான சாஸ்திரம் ஆகியவை சம்பந்தமாக, ஏராளமான உண்மைகளும், தத்துவ சாஸ்திர சித்தாந்தங்களும் மார்க்ஸின் மூளையில் நம்பமுடியாத அளவு, மலைபோல் குவிந்துகிடந்தன. அலுப்பு, சலிப்பில்லாமல், நெடு நாட்களாகக் கஷ்டப்பட்டு ஆராய்ந்துபெற்ற இந்தப் பேரறிவை, வியக்கத்தக்க முறையில் உபயோகப்படுத்திக் கொள்ளும் பேராற்றலை மார்க்ஸ் பெற்றிருந்தார். எந்தச் சமயத்திலும், எந்த விஷயத்தைப்பற்றியும், கேட்கும் கேள்விகளுக்கு மார்க்ஸ் ஒரு கணமேனும் தயங்காமல் பதில் சொல்வார். அவர் சொல்லும் பதிலில் ஆழ்ந்த கருத்துக்கள் நிறைந்திருக்கும். இந்தப் பதிலில் தத்தத்துவ சாஸ்திரக் கருத்துக்கள் மல்கிக் கிடந்தன. தளபதியிடமிருந்து கட்டளை பிறக்க வேண்டியதுதான் தாமதம், உடனே, குறித்த இடத்திற்குப் பாய்ந்தோடத் தயாராக இருக்கும் யுத்தக் கப்பலைப் போன்றது அவரது மூளை. அதாவது, சிந்தனை என்ற மாபெரும் கடலில் ஊடுருவிப் பாய அவரது மூளை எப்பொழுதும் தயாராய் இருந்தது. சந்தேகத்திற்கு இடமின்றி ஜீவசக்தியும், சிருஷ்டித் திறனும், வற்றாத அறிவும் படைத்த மூளையை மார்க்ஸ் பெற்றிருந்

தார் என்பதையே, 'மூலதனம்' என்ற நூல் தெள் ளத் தெளிய நமக்குப் படம் பிடித்துக்காட்டுகிறது. 'மூலதன'மோ, அல்லது அவர் எழுதிய ஏனைய நூல்களோ, அவரது அறிவுத்திறன் அனைத்தையும் பரிபூரணமாகக் காட்டவில்லை யென்றுதான், நானும் மார்க்ஸோடு நெருங்கிப் பழகிய ஏனைய நண்பர்களும் கருதுகிறோம். விலைமதிக்க முடியாத அவரது மேதாவிலாசத்தை, வற்றாத ஊற்றுப் போன்ற அவருடைய அறிவை, அவரது நூல்கள் போதிய அளவு பிரதிபலிக்க வில்லை யென்றுதான் நாங்கள் கருதுகிறோம். அவர் எழுதியிருக்கும் புத்த கங்களில் பிரதிபலிக்கும் அறிவைக் காட்டிலும், எவ்வளவோ உயர்ந்த அதி மேதாவி அவர்.

நான் மார்க்ஸோடு சேர்ந்து வேலை செய்திருக் கிறேன். குமாஸ்தாவைப்போல் இருந்துகொண்டு, அவர் சொல்வதை அப்படியே எழுதி வந்தேனே தவிர, வேறு எதையும் நான் செய்யவில்லை. ஆயி னும், அவர் எப்படி சிந்தனை செய்கிறார், எப்படி எழுதுகிறார் என்பனபோன்ற பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள எனக்கு அரிய சந்தர்ப்பம் கிடைத் தது. அவரிடம் வேலை செய்வது சுலபமாகவும் சில சமயத்தில் கஷ்டமாகவும் இருக்கும். எவ் வாறு சுலபமாக இருந்தது என்றால், எந்தப் பிரசினை யானாலும் சரி, அது சம்பந்தமான கருத்துக்களும் உண்மைகளும் நொடிப் பொழுதில் அவரது மூளை யில் குவிந்துவிடும். ஆனால், மலைபோல இவ்வாறு குவிந்திருக்கும் கருத்துக்களை யெல்லாம் ஒன்று திரட்டிக் கோர்வையாக வெளிப்படுத்துவது கஷ்ட மாகவே இருந்தது.

"எல்லாம் தெரிந்த கடவுளுக்குத்தான் எந்த விஷயத்தைப்பற்றியும் பரிபூரணமாகத் தெரியும். ஆனால், வெளிபாகத்தை மாத்திரம் தெரிந்திருக்கும் மனிதனுக்கு, மேல்பாகம் மாத்திரந்தான் தெரியும்" என்று விகோ என்பவர் எழுதியிருக்கிறார். விகோவின் கடவுளைப்போல், மார்க்ஸும் சகல விஷயங்களைப்பற்றியும் பரிபூரணமாக அறிவார். எதையும் அவர் மேல் எழுந்தவாரியாக பார்ப்பதில்லை; அடித்தளம்வரை ஊடுருவிச் சென்றுதான் ஆராய்வார். ஏதேனும் ஒரு பொருளை எடுத்துக்கொண்டால், அதன் சகல உருப்புக்களும் அன்னியோன்யமாகப் எப்படிப் பொருந்திப் பின்னி இருக்கிறது என்பதைப் பரிசோதித்துப் பார்ப்பார். அதன் ஒவ்வோர் உருப்பையும் தனித் தனியே பிரித்து அவை வளர்ச்சி அடைந்த விதத்தை நுணுக்கமாக ஆராய்வார். பின்னர், அவைகளின் சூழ்நிலை எவ்வாறு இருந்தது என்பதைப் பரிசீலனை செய்வார். பிறகு அவை ஒன்றோடொன்று எவ்வாறு ஊடுருவிக் கலந்து பின்னி வருகின்றன என்பதையும் கவனிப்பார். தாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட பொருளின் மூலத்திற்குத் திரும்பிச் சென்று, அது மாற்றமடைந்ததையும், பரிணமித்ததையும், அதில் ஏற்பட்ட புரட்சிகளையும் நுணுக்கமாக ஆராய்ச்சி செய்து, இறுதியில் அதன் ஒவ்வொரு பலன்களையும் கண்டுபிடிப்பார். ஒரு பொருள் ஏனைய பொருளோடு தொடர்பின்றி, தானாகவே தனித்திருப்பதை - தனித்து நின்று இயங்குவதை - அவர் காணவேயில்லை. இயங்கிக் கொண்டேயிருக்கிற பல பிணைப்புக்களால் இணைக்கப்பட்டுள்ள உலகத்தைத்தான் அவர் கண்டார்.

சதா சர்வ காலமும் மாறிக்கொண்டும், மாற்றம் அடைந்துகொண்டும், அசைந்துகொண்டும் இருக்கிற இந்த உலகத்தின் ஜீவ சக்திகளைத் தெளிவாக விளக்குவதுதான் அவரது முக்கிய இலட்சிய மார்கும். பிளாபர்ட், டி கன்கோர் முதலிய ஆசிரியர்களது சித்தாந்தங்களில் நம்பிக்கையுடையவர்கள், நாம் பார்க்கும் பொருள்களைப்பற்றி, திட்டவட்டமாக விவரிப்பதில், பல கஷ்டங்களிருப்பதாகக் குறை கூறுகிருர்கள். அவர்கள் விவரிக்க விரும்புவதும், விகோ கூறியதுபோல், மேலெழுந்தவாரியான ஆராய்ச்சியே தவிர வேறொன்றுமில்லை. இந்த மேற்போக்கான ஆராய்ச்சியால் தங்களது மனதில் பிரதிபலித்ததைத்தான் வெளிப்படுத்துகிருர்கள். அவர்களுடைய இலக்கியப் பணியை, மார்க்ஸ் மேற்கொண்ட பணியோடு ஒப்புநோக்கினுல், அவர்களது பணி, குழந்தைகளின் வெறும் விளையாட்டுப் போன்றது என்பதை நாம் தெளிவாகக் காணலாம். யதார்த்த உண்மையைக் கிரகிப்பதற்கு வேண்டிய அசாதாரண சிந்தனைசக்தியும் தம்முடைய கருத்துக்களைப் பிறருக்குத் தெளிவாக எடுத்துரைக்கும் பேராற்றலும் மார்க்ஸ் பெற்றிருந்தார். தாம் எழுதுவது பிறருக்கு ஸ்பஷ்டமாகப் புரியக்கூடியதாக இருக்க வேண்டும் என்பதற்காக, திரும்பத் திரும்ப மாற்றி மாற்றி எழுதுவது அவரது வழக்கம். அப்பொழுதுகூட, கருத்துக்களைப் பூரணமாக விவரிக்கவில்லையே என்று அடிக்கடி கூறுவார். மனே தத்துவ சாஸ்திரத்தைப்பற்றி, பால்ஸாக் என்பவர் ஒரு புத்தகம் எழுதியிருந்தார். அந்த நூலில் மார்க்ஸுக்குப் பெரிதும் ஈடுபாடு உண்டு. ஏனெ

னில், தம்முடைய மனோபாவத்தை, பால்ஸாக் அந்தப் புத்தகத்தில் ஓரளவு விவரித்திருந்ததை மார்க்ஸ் கண்டார். ஸோலா என்பவர் இதிலுள்ள கருத்துக்களைத் தமதாக்கிக்கொண்டு வேறொரு புத்தகம் தனியே எழுதி யிருக்கிறார். ஓவியனொருவன் தமது மூளையில் உருவாகித் திரண்டுவரும் உருவத்தை அப்படியே தீட்டிவிட வேண்டு மென்ற வேட்கை தூண்ட, திரும்பத் திரும்பச் சாயத்தைப் பூசி ஓவியத்தைத் தீட்டிக்கொண்டே யிருப்பானால், இறுதியில் உருவமற்ற, சாயங்கள் நிறைந்த ஒரு மொட்டையான பிண்டமாகத்தான் அது முடியும். ஆயினும், தாம் எழுதிய படம் நன்றாகத்தான் இருக்கிறது என்ற மனோபாவத்தோடு நோக்கும் சைத்ரிகனுக்கு, அந்தச் சித்திரம், யதார்த்தத்தைப் பரிபூரணமாகப் பிரதிபலிப்பதாகவே தோன்றும்.

மாசுமறுவற்ற, பேராற்றல் படைத்த ஒரு சிறந்த உழைப்பாளனுக்குத் தேவையான குணங்கள் அனைத்தும் மார்க்ஸிடம் பொதிந்து கிடந்தன. ஒரு வஸ்துவில் அடங்கி யிருக்கும் பல்வேறு பாகங்களை அக்கக்காகப் பிரித்து, ஒவ்வொன்றையும் தனித் தனியாக அலசி ஆராய்ச்சி செய்யும் மகத்தான சக்தியை மார்க்ஸ் பெற்றிருந்தார். மார்க்ஸுக்கு நிகர் மார்க்ஸேதான் என்று துணிந்து கூறலாம். மேலும், தனித் தனியே பிரித்து ஆராய்ந்த வஸ்துவின் பாகங்களை மறுபடியும் ஒன்றுசேர்த்து, அவை வளர்ச்சியடைந்த காலத்து ஏற்பட்ட மாறுதல்கள் என்ன என்பதை மார்க்ஸ் ஆராய்வார். இவற்றோடு அவற்றின் உள்தொடர்புகள் யாவை என்பதையும் கண்டுபிடிப்பார்.

மார்க்ஸ் ஆராய்ச்சி செய்து வெளியிட்ட உண்மைகளில் பொதுப்படையான சாராம்சங்கள் மட்டும் அடங்கியிருக்க வில்லை. சுயமாகச் சிந்தனை செய்யச் சக்தியற்ற பொருளாதாரவாதிகள், பொதுப்படையான சாராம்சங்களை வைத்துக்கொண்டு, மார்க்ஸ் தில்லுமுல்லு தகிடுதத்தம் செய்கிறார் என்று குறை கூறிவந்தார்கள். க்ஷேத்திரக் கணிதக்காரர்கள் கையாளும் முறைகளை மார்க்ஸ் கையாள்வது இல்லை என்பது உண்மையே. க்ஷேத்திரக் கணிதக்காரர்கள் சுற்றுப்புற உலகினின்று, ஒதுப்புறமாக விலகிநின்று, தாங்கள் கூறும் விவரணத்தோடு ஒன்றிநில்லாது, வெறும் அனுமானத்தின் மூலமே முடிவு செய்து வருகிறார்கள். 'மூலதனம்' என்ற மாபெரும் நூலில் தனிமையான ஒரு விவரணத்தையேனும், அல்லது தனிமையான ஒரு சூத்திரத்தையேனும் நாம் காண முடியாது. ஒரு விஷயத்தை எடுத்துக்கொணடு தெளிவாகப் புலப்படாத பலதரப்பட்ட வித்தியாசங்களையும், நிலையற்ற பல்வேறு கருத்துக்களையும், உயர்ந்த முறையில், தொடர்ச்சியாக, மிக மிக நுணுக்கமாக ஆராய்ந்திருப்பதை நாம் அந்த நூலில் காணலாம். இப்பொழுது முதலாளித்துவ சமுதாயம் நடைமுறையி லிருக்கிறது. முதலாளிகளிடம் சொத்து இருக்கிறது என்று சொல்கிறோமே, அந்தச் சொத்து என்பது யாது? பண்டங்களை ஏராளமாகக் குவித்துவைத்திருப்பதையே சொத்து என்று சொல்கிறோம். எனவே, பண்டங்கள் என்ன என்பதை முதலில் விவரித்துக்கொண்டு, 'மூலதனம்' என்ற புத்தகத்தை மார்க்ஸ் ஆரம்பிக்

கிறுர். கணித சூத்திரப்படி விவரிக்காமல் திட்டமான புறப்பொருளை அடிப்படையாகக் கொண்டு, முதலாளித்துவ சமுக அமைப்பில், சொத்து என்பது பண்டங்களை அடிப்படையாக வைத்துக் கட்டப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாக விவரிக்கிருர். இந்தப் பண்டங்கள் தான் முதலாளித்துவத்தின் ஜீவ அணுக்கள், அல்லது முக்கிய அம்சங்கள். பின்பு, மார்க்ஸ் அந்தப் பண்டங்களைத் தனியே பிரித்து, நன்கு அலசி ஆராய்கிருர்; ஒவ்வொரு கோணத்திலும் நின்று அவற்றின் தன்மையை ஆராய்கிருர்; அவற்றின் அகம் புறம் இரண்டையும் பல முறை ஆராய்கிருர். இந்த ஆராய்ச்சியின் பயனுய்ப் பண்டங்களைப்பற்றிய ரகசியங்களை ஒன்றன்பின் ஒன்ருகக் கண்டுபிடிக்கிருர். சாதாரண பொருளாதாரவாதிகளுக்கு இந்த ரகசியங்களைப் பற்றி இம்மியளவேனும் தெரியாது. கத்தோலிக்க மதப் புத்தகத்திலுள்ள பரம ரகசியங்களைவிட, ஏராளமான ஆழ்ந்த ரகசியங்கள் இவைகளில் மறைந்து கிடக்கின்றன. பல கோணங்களிலிருந்து பண்டங்களைப்பற்றி நுணுக்கமாக ஆராய்ந்து அறிந்த பிறகு, ஏனைய பண்டங்களோடு அதற்குள்ள தொடர்புகளை நுணுகி ஆராய்கிருர். அதாவது, பண்ட மாற்றுதலை ஆராய்ச்சி செய்கிருர். பின்னர், பண்டங்களின் உற்பத்தியைப்பற்றி ஆராய்கிருர். பண்டங்களை உற்பத்தி செய்வதற்குச் சரித்திரபூர்வமாக அவை தேவையாய் இருந்த காரண காரியங்கள் யாவை என்பதை அலசி ஆராய்கிருர். பண்டங்களின் உருவங்கள் எப்படி அமைகின்றனவென்றும், ஒருவடிவத்திலிருந்து மற்ருெரு வடிவத்திற்கு அவை

எவ்வாறு உருமாறுகிறது என்பதுபற்றியும், ஒரு வடிவம் மற்றொரு வடிவத்தைப் பெறுவதற்கு எப்படி இடமளிக்கப்படுகிறது என்பதுபற்றியும் மிகவும் தெளிவான முறையில் அலசி ஆராய்கிறார். தேர்ச்சி பெற்ற கலாநிபுணனைப்போல, பிரகிருதியின் விசேஷ குணங்களைத் தர்க்கரீதிப்படி வரிசையாக அவர் விவரித்துக்கொண்டு போவதைப் பார்த்தால், இதெல்லாம் மார்க்ஸின் கற்பனை சிருஷ்டிகளே என்று நினைத்தாலும் நினைக்கக் கூடும். ஆயினும், அவை யதார்த்தமானவைதான். பண்டங்களில் பொதிந்து கிடக்கும் உண்மையான தர்க்க இயலைத்தான் அவர் எடுத்துக்காட்டுகிறாரே தவிர, வேறொன்றுமில்லை.

மார்க்ஸ் எழுதுவதும் சரி, பேசுவதும் சரி, மேலெழுந்தவாரியாக இருக்காது. ஒரு பிரசினையை எடுத்துக்கொண்டால், அதை அக்கறையோடு நன்கு பரிசீலனை செய்து ஆராய்வார். நிரூபிக்க முடியாத உண்மைகளையோ, புள்ளிவிவரங்களையோ மார்க்ஸ் கையாளவே மாட்டார். தலைசிறந்த நிபுணர்களின் ஆதாரங்களை மேற்கோளாக எடுத்துக்காட்டுவார். முதன் முதலில் எழுதிய மூல ஆசிரியரின் கருத்துக்களை, மற்றோர் ஆசிரியர் மேற்கோள் கொடுத்திருந்தால், அதை ஒரு காலத்திலும் உபயோகிக்க மாட்டார். எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் சரி, அதைப் பொருட்படுத்தாமல் உற்பத்தி ஸ்தானத்தை, அதாவது மூல ஆசிரியர்களின் சான்றுகளை உபயோகிப்பதையே அவர் பெரிதும் விரும்பினார். முக்கியத்துவம் பெறாத அற்ப விஷயத்தைக்கூட ஒப்புநோக்கிச் சரிபார்க்கும் பொருட்டு, பிரிட்டிஷ்

மியூஸியத்திற்கு அடிக்கடி அவர் விஜயஞ்செய்வார்.
அதனால்தான், மார்க்ஸைக் குறைகூறினவர்களால்
கூட, அஜாக்கிரதை காரணமாக நேரும் அற்பத்
தவறுகளைக்கூட மார்க்ஸ் எழுதிய நூல்களில்
எடுத்துக்காட்ட முடியாது போயிற்று. கடுமையான
பரிசோதனைக்கு நிற்க இயலாத - நிற்க ஆற்றல் இல்
லாத - உண்மைகளை அவர் எழுதி யிருக்கிறார்
என்று ஒரு விமர்சகர்கூட இதுவரை சொன்னது
கிடையாது. மூல ஸ்தானம்வரையிலும் சென்று
உண்மைகளை அலசி ஆராயும் சுபாவம் அவரிட
மிருந்ததால், சாமானிய, யாருமே கேள்விப்படாத
ஆசிரியர்களின் நூல்களைக்கூட அவர் படித்துவந்
தார். இத்தகைய ஆசிரியர்களின் நூல்களிலிருந்து
மார்க்ஸ் ஒருவர்தான் மேற்கோள்களைக் கொடுத்
திருக்கிறார். கண்டும் கேட்டுமிராத ஆசிரியர்களின்
மேற்கோள்களை 'மூலதன'த்தில் பரக்கக் காண
லாம். பல புத்தகங்களிலிருந்து மேற்கோள்களை
ஏராளமாக அவர் எடுத்துக்கொடுத்திருப்பதைக்
காணும்பொழுது, தமது கல்விஞானத்தைத் திறந்து
காட்டத்தான் இவ்வாறு செய்தாரோவென்றுகூட
எண்ணத் தோன்றுகிறது! "நான் சரித்திரபூர்வ
மான நியாயத்தை, யார் யாருக்கு எது எது உரி
யதோ அதனை அவரவர்களுக்கு வழங்கியிருக்
கிறேன்" என்ற எண்ணம் தூண்டவே, மார்க்ஸ்
ஊர் பேர் தெரியாத ஆசிரியர்களையும் குறிப்பிடு
கிறார். ஆசிரியர் எவ்வளவு சர்வ சாதாரண நபராக
இருந்தாலும் சரி, அவருடைய பெயரை அவசியம்
குறிப்பிடுவது தமது முதல் கடமை என்று மார்க்ஸ்
கருதினார். ஏனெனில், அவர்தான் முதன் முதலில்

ஓர் எண்ணத்தைத் தெரிவித்தார்; அல்லது ஏனையவர்களைவிட மிக மிகத் தெளிவாக விவரித்திருந்தார்.

விஞ்ஞான உணர்வைப்போலவே, மார்க்ஸின் சாஹித்திய உணர்வும் இருந்தது. ஒரு விஷயம், அல்லது புள்ளிவிவரம் உண்மையானதா, அல்லவா என்பது நிச்சயமாகத் தெரியாதிருந்தால், அதை ஒரு காலத்திலும் நம்பவேமாட்டார். தாம் பரிபூரணமாக ஆராய்ந்து தீர்மானத்திற்கு வராத விஷயத்தைப்பற்றிப் பேசவே மாட்டார். ஏதேனும் ஒருவிஷயத்தைப்பற்றி எழுதநேர்ந்தால், அதைத் திரும்பத் திரும்ப எழுதித் தமக்கே மனத்திருப்திஏற்பட்ட பின்னர்தான், அதைப் பிரசுரிப்பார். அரைகுறையான விஷயங்களைப் பொதுஜனங்களுக்குச் சமர்ப்பித்ததை அவரால் சகிக்கவேமுடியாது. இது மட்டுமல்ல; பரிபூரணமாகத் திருத்தம் செய்து முடிக்கு முன்பு, கையெழுத்துப் பிரதிகளை யாரிடத்திலும் காட்டமாட்டார். இந்த உணர்ச்சி அவரது மனதில் உரம்பெற்றிருந்தபடியால், "கையெழுத்துப் பிரதிகளைப் பூர்த்திசெய்யாமல் விட்டுவிட்டுச் செல்வதைவிட, எரித்துவிடுவதே நலமென்று கருதுகிறேன்" என்று என்னிடம் ஒரு நாள் கூறினர். அவர் எவ்வளவு கஷ்டப்பட்டு எழுதினர் என்பதை, அவரது புத்தகங்களைப் படிப்பவர்கள் எளிதில் ஊகிக்கவே முடியாது. உதாரணமாக, 'மூலதனம்' என்ற நூலில், இங்கிலாந்திலுள்ள பாக்டரி சட்டத்தைப்பற்றி இருபது பக்கங்களுக்கு மேல் எழுதி யிருக்கிறார். இதற்காக, இங்கிலாந்திலும், ஸ்காட்லாந்திலும் உள்ள பாக்டரி இன்ஸ்பெக்டர்களின் அறிக்கை

கள், பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டிருந்த விசாரணைக் கமிட்டிகளின் அறிக்கைகள் முதலானவற்றை - அதாவது சர்க்கார் வெளியிட்டுள்ள ஏராளமான புத்தகங்களை - அவர் படித்தார். அந்த அறிக்கைகளில் ஒரு வரிகூட விடாமல் படித்திருக்கிறார் என்பது, பக்கங்களின் விளிம்புகளில் பென்ஸிலால் குறிப்பு எழுதியிருப்பதிலிருந்து தெரிய வருகிறது. முதலாளித்துவ உற்பத்தி முறையைப் படிப்பதற்கு இதுவரையிலும் நமக்குக் கிடைத்திருக்கும் ஆதாரபூர்வமான அறிக்கைகளில் இவை தலைசிறந்தது என்பது அவரது அபிப்பிராயம். இந்த அறிக்கைகளை எழுதிய அதிகாரிகளை அவர் வானளாவப் புகழ்ந்திருக்கிறார். "இவ்வளவு ஆற்றலும், பாரபட்சமற்ற மனோபாவமும் தனிப்பட்ட நபர்களுக்குப் பயப்படாத அஞ்சாநெஞ்சமும் படைத்த இங்கிலாந்து பாக்டரி இன்ஸ்பெக்டரைப் போன்ற சிறந்த மனிதர்களை, வேறு எந்த நாட்டிலும் காணவே முடியாது" என்று என்னிடம் கூறினார். 'மூலதன'த்தின் முதல் பாகத்தில் எழுதியுள்ள முகவுரையில், குறிப்பிடத்தக்க இந்தப் பாராட்டுதலைக் காணலாம்.

சர்க்காரின் இந்தப் புத்தகங்களிலிருந்து மார்க்ஸ் ஏராளமான உண்மைகளைத் திரட்டினார். இந்த அறிக்கைகள் பிரிட்டனிலுள்ள மேல்சபை, கீழ்சபை ஆகிய இரு சபைகளிலும் உள்ள அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்டன. இவர்கள், இவைகளை இலக்குகளாகத்தான் பாவித்தனர்; அதாவது தாங்கள் ஏவிய குண்டுகள், எவ்வளவு தூரம் ஆழ ஊடுருவிப் பாய்ந்திருக்கிறது என்பதையும், தங்க

ளது ஆயுதம் எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதைத் தெரிந்துகொள்வதற்காகவும் மாத்திரம், அவைகளின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தனர். ஏனையவர்கள் அவைகளைத் தொட்டுக்கூடப் பார்க்காமல், பழைய காகிதங்களோடு சேர்த்துக் கடைக்காரர்களுக்கு விற்றுவிட்டார்கள். அவர்கள் பயன்படுத்திக்கொண்டது அவ்வளவுதான். அதனால் தான், லாங் ஏக்கர் என்ற இடத்தில்; பழைய காகிதங்களை விற்கும் ஒரு வியாபாரியிடமிருந்து, மார்க்ஸ் அவைகளை மலிவான விலைக்கு வாங்க முடிந்தது. பேராசிரியரான பீஸ்லியின் அபிப்பிராயப் படி, அதிகார தோரணையில் செய்யப்பட்ட அதிகாரிகளின் விசாரணைக்கு மார்க்ஸ் மாத்திரம்தான் அதிக மதிப்புக் கொடுத்தார்; மார்க்ஸ் ஒரேயொருவர்தான் அவைகளை உலகம் அறியும்படி செய்தார். ஆனால், "**1844-ம் வருடத்தில் இங்கிலாந்திலுள்ள தொழிலாளர் வர்க்கத்தின் நிலைமை**" என்ற புத்தகத்தை எழுதியபோது, "1845-ம் வருடத்திலேயே ஏங்கல்ஸ் அவைகளிலிருந்து ஏராளமான விஷயங்களைத் திரட்டி உபயோகித்திருக்கிறார்" என்ற உண்மையை பீஸ்லி அறியார்!

## 2

தோலுக்கும் சதைக்கும் கீழே மெதுவாக இயங்கிக்கொண்டிருக்கும் பேராசிரியரின் கருணை பொங்கிவழியும் இதயத்தை நன்கு அறிந்தவர்களும், அதை நேசிப்பவர்களும், ஞாயிற்றுக்கிழமைகளில் சாயங்கால வேளைகளில் அவருடைய வீட்டிற்கு வந்து உள்ளத்தைப் பறிகொடுக்கும் காட்சி

ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும். தம்முடைய புத்தகங்களையும் கையெழுத்துப் பிரதிகளையும் அறவே ஒதுக்கித்தள்ளிவிட்டு, குடும்பத்தினரோடும் நண்பர்களோடும் அளவளாவிக்கொண்டு, சந்தோஷமாகக் காலங்கழிக்கும்பொழுது, மார்க்ஸைப் பார்க்கத்தான் வேண்டும்! இத்தகைய சமயங்களில், மார்க்ஸைப்போல் மனதிற்கு இன்பமூட்டும் நண்பரைக் காண்பது அரிது. நகைச்சுவை ததும்பப் பேசி, குடல் குலுங்கச் சிரிக்க வைப்பார் அவர். ஹாஸ்யமாகப் பேசுவதைக் கேட்டு, அவரும் வாய்விட்டுச் சிரிப்பார்; ஆம், அவருடைய அந்தச் சிரிப்பு, அடித்தளத்திலிருந்து பொங்கிவரும் சிரிப்பு ஆகும். யாராவது தமாஷாகப் பேசினால், அல்லது, யாராவது திருப்பிக் கேலி செய்தால், உடனே அடர்ந்த புருவங்களின்கீழ் அவரது நேத்திரங்கள் நடனமாடும்.

கருணை உள்ளமும், சாதுவான குணமும், பிறரை மரியாதையோடு நடத்தும் உயர்ந்த பண்பும் படைத்த தந்தை அவர். "குழந்தைகள்தான் பெற்றோருக்கு அறிவூட்ட வேண்டும்" என்பது அவருக்கு ரொம்பவும் பிரியமான வாக்கியங்களில் ஒன்று. அவருடைய பெண் குழந்தைகள் அவரை மனப்பூர்வமாக நேசித்தார்கள். குழந்தைகளோடு அவர் எப்படி யெப்படியெல்லாம் உறவாடினார் தெரியுமா? தந்தை என்ற நிலையில், குழந்தைகள்மீது ஒருபோதும் அவர் அதிகாரம் செலுத்தியதே கிடையாது. ஏதேனும் ஒரு வேலையைச் செய்யும்படி குழந்தைகளை உத்தரவிடவே மாட்டார். தமக்கு உதவி செய்யும்படி வினயமாகவே அவர்களைக்

வேண்டிக்கொள்வார் அல்லது, ஏதேனும் தவருன காரியத்தைச் செய்தால், அதைச் செய்யக் கூடாதென்று கெஞ்சிக் கேட்பார். மார்க்ஸ் தம் குழந்தைகளிடம் நடந்துகொண்ட விதம் இது. அவரது குழந்தைகளோ? தந்தையின் யோசனைகளையும், உபதேசங்களையும் கவனமாகக் கேட்டு நடந்தவர்கள் அவர்களைப்போல் வேறு யாரும் கிடையாதென்றே துணிந்து கூறலாம். மார்க்ஸை அவருடைய குழந்தைகள் நண்பராகவும் விளையாட்டுத் தோழராகவும் பாவித்தார்கள். "அப்பா" என்று மார்க்ஸை அவர்கள் அழைத்ததே கிடையாது. "மூர்" என்றுதான் அழைத்தார்கள். ஏனெனில், கறுத்த முகமும், இருண்ட தலை மயிரும் தாடியும் இருந்ததால் அவரை "மூர்" என்று அழைப்பது வழக்கம். ஆனல், 1848-ம் வருடத்திலேயே இன்னும் முப்பது வயதுகூடப் பூர்த்தியாகாத தருணத்தில், கம்யூனிஸ்டுக் கட்சியைச் சார்ந்த எங்கள் அங்கத்தினர்கள் அனைவரும் "மார்க்ஸ் அப்பா" என்றுதான் அன்பாக அவரை அழைத்தார்கள்.

தமது குழந்தைகளோடு, அவர் மணிக் கணக்காக விளையாடுவார். யுத்தக் கப்பல்களுக்கிடையே பயங்கரமான போராட்டம் நடக்கும்; குழந்தைகளுக்காகச் செய்திருந்த ஏராளமான காகிதக் கப்பல்களின் போராட்டம் உக்ரமாக நடக்கும் பொழுது எரிக்கப்படும்; குழந்தைகளின் அந்தக் கேலி ஆரவாரத்திற் கிடையே, காகித்தால் செய்யப்பட்ட யுத்தக் கப்பல்களை ஒரு வாளி ஜலத்துக்குள் மிதக்கவிட்டு, அவற்றை எரித்துவிடுவார். இந்தச்

சம்பவத்தை, அவரது புதல்விகள் இன்னும் மறக்கவே யில்லை. மார்க்ஸின் புதல்விகள், ஞாயிற்றுக் கிழமைகளில், அவரை ஒரு வேலையும் செய்யவிட மாட்டார்கள். ஞாயிற்றுக் கிழமைகள் முழுதும், குழந்தைகளுக்குத்தான் சொந்தம்! காலநிலை நேர்த்தியாக இருந்தால், குடும்பம் முழுதும் நாட்டுப் புறத்திற்கு உலாவச் செல்வது வழக்கம். போகும் வழியில், சாலை ஓரத்திலுள்ள சிறு ஹோட்டலில் தங்கி, சிறிது வெண்ணை தடவிய ரொட்டியைப் புசித்து, சிறிது "இஞ்சி பீரும்" பருகுவார்கள். புதல்விகள், சின்னஞ்சிறு குழந்தைகளாக இருந்தகாலத்தில், தூரம் தெரியாமலிருக்கும் பொருட்டு, நீண்ட நீண்ட கதைகளைச் சொல்லிக் கொண்டே போவார். கதை கேட்கும் குழந்தைகள் களைப்பை உணராமலிருக்கும் பொருட்டு, தூரத்திற்குத் தக்கபடி, கட்டுக் கதைகளைப் புதிது புதிதாகச் சொல்லிக்கொண்டே போவார். ஒரு கவிக்குரிய கற்பனுசக்தி, மார்க்ஸிடம் அபரிமிதமாக இருந்தது. இலக்கியத் துறையில் ஈடுபட்ட பொழுது, முதன் முதலில், காவியங்களை எழுதிக் குவித்தார். இளம் பிராயத்தில் எழுதிய இந்தப் பாட்டுக்களை அவரது மனைவியார் கடைசி வரையிலும் பொக்கிஷத்தைப்போல் பாதுகாத்துவந்தார். ஆனால், வேறு யாரிடத்திலும், அவைகளைக் காட்டவே மாட்டார். மார்க்ஸின் பெற்றோர் அவர் ஒரு பெரிய ஆசிரியராக வேண்டும் அல்லது, ஒரு கலாசாலைப் பேராசிரியராக வேண்டும் என்று விரும்பினார்கள். ஆனால், அவர்களது எண்ணத்தில் மண் விழுந்தது. சோஷலிஸ்டுக் கிளர்ச்சியில்

ஈடுபட்டதன் மூலமாகவும், அரசியல் பொருளாதார நூல்களைப் படிப்பதில் மூழ்கிக்கிடந்ததனாலும், தம்மைச் சிறுமைப்படுத்திக்கொண்டாரென்று அவரது பெற்றோர் கருதினார்கள். வாஸ்தவம் தான்—அக் காலத்தில், அரசியல் பொருளாதார சாஸ்திரத்திற்கு ஜெர்மனியில் மதிப்பே கிடையாது!

"கிராஷீ" என்ற ஒரு நாடகத்தை எழுதிக் கொடுப்பதாக, மார்க்ஸ் தமது புதல்விகளுக்கு வாக்குறுதி கொடுத்திருந்தார். "வர்க்கப் போராட்ட வீரன்" என்ற நாடகத்தில் "கிராஷீ" என்பவன் தான் கதாநாயகன். புராதன காலத்தில் நடந்த பயங்கரமான வர்க்கப் போராட்டத்தைப்பற்றிய ஒரு நாடகம் அது. துரதிர்ஷ்ட வசமாக, பல திட்டங்களைப்போல், இந்தத் திட்டமும் நிறைவேருது போயிற்று. உதாரணமாக தர்க்க சாஸ்திரத்தைப்பற்றியும், யௌவன இயத்தைப் பெரிதும் கவர்ந்திருந்த தத்துவ சாஸ்திரத்தின் சரித்திரத்தைப்பற்றியும் புத்தகம் எழுத வேண்டுமென்று திட்டம் போட்டிருந்தார். மார்க்ஸ் திட்டம் போட்டிருந்த புத்தகங்களையெல்லாம் எழுதி முடிக்க வேண்டுமானால், அல்லது, அவரது மூளையில் குவிந்துகிடந்த மலைபோன்ற அறிவுக் களஞ்சியத்தின் ஒரு பாகத்தையாவது உலகிற்கு அளிக்க வேண்டுமானால், நூறு வருடங்கள் வரையிலும் ஜீவித்திருந்தால், ஒரு சமயம் அந்தத் திட்டங்களையெல்லாம் ஒருவாறு நிறைவேற்றச் சந்தர்ப்பம் வாய்த்திருக்கக் கூடும்.

வாழ்க்கைத் துணை என்ற வார்த்தைக்குப் பரிபூரண இலக்கு ஆக, வாழ்க்கை முழுதும், மார்க்ஸின் மனைவி ஓர் உண்மையான துணைவியைப்போலவே, தோழியைப்போலவே நடந்துகொண்டாள். குழந்தைப் பருவம் முதலே ஒருவரையொருவர் நன்கு அறிவர். இத்துடன், இருவரும் மலரும் மணமும் போல் இணைபிரியாது, ஒன்றாகவே வாழ்ந்து வந்தார்கள். திருமணம் செய்துகொள்வதென உறுதி செய்து கொடுத்த காலத்தில், மார்க்ஸுக்கு வயது பதினேழுதான். ஒன்பது நீண்ட வருடங்கள் வரையிலும் காத்திருந்து, பிறகு, 1843-ம் வருடம் இருவரும் கலியாணம் செய்துகொண்டார்கள். அதற்குப் பின்னர், அவரது மனைவி பிரா மார்க்ஸ் இறக்கும்வரை இருவரும் இணைபிரிந்து வாழ்ந்ததே கிடையாது. மனைவி இறந்த பின்பு, மார்க்ஸும் நீண்ட காலம் உயிரோடிருக்கவில்லை. பெரிய ஜெர்மானியப் பிரபுக் குடும்பத்தில் பிறந்தவராயினும், அந்த அம்மையைப்போல் பிறரைச் சமத்துவமாக நடத்தக் கூடிய மனநிலை படைத்தவர்கள் வேறு யாருமே இதுவரை இருந்திருக்க முடியாது என்று துணிந்து கூறலாம். உயர்வு தாழ்வு என்ற சமூக வித்தியாச உணர்ச்சியையும், பெரியவன் சின்னவன் என்ற வேற்றுமைஉணர்ச்சியையும் அந்தஅம்மையாரிடம் இம்மியளவேனும் நாம் காண முடியாது. இளவரசனுக்கோ, அல்லது, கோமகனுக்கோ செலுத்தும் மரியாதையைப் போன்ற மரியாதையுடன் தம் வீட்டிற்கு வரும் ஏழைத் தொழிலாளிகளையும் அந்த அம்மையார் வரவேற்று உபசரித்துப் பேரன்புடன் நடந்துகொள்வார்.

பல்வேறு நாடுகளிலிருந்தும் வந்த ஏராளமான தொழிலாளர்கள் பிரா மார்க்ஸின் விருந்தோம்பலைக் கண்டு அகமகிழ்ந்தனர். சூதுவாதற்ற தூய உள்ளத்தோடு, இவ்வளவு அன்பாக விருந்தாளிகளை வரவேற்ற அம்மை, ஜெர்மானிய தேசத்து ஆர்கில் ராஜ வம்சத்தைச் சேர்ந்தவளென்றும், பிரஷ்ய அரசருடைய சர்க்காரில், பிரதம மந்திரியாக இருந்தவரின் சகோதரி யென்பதையும் ஒருவராலும் அறியமுடியவில்லை. இத்தகைய பெருமைகளையெல்லாம், அந்த அம்மையும் பொருட்படுத்தினதே கிடையாது. மார்க்ஸைப் பின்பற்றி நடக்க விரும்பிய அந்த அம்மை வரட்டு கௌரவத்தை யெல்லாம், தூரவென்று தள்ளிவிட்டார். இத்தகைய சுக போகங்களை உதறித்தள்ளியதற்காக, அந்த அம்மை ஒரு கணமேனும் வருத்தப்பட்டதே கிடையாது. வறுமை பிய்த்துத் தின்றபோதுங்கூட, அந்த அம்மையின் மனத்தில் இத்தகைய எண்ணங்கள் தலைகாட்டியதே கிடையாது.

குதூகலமான சாந்த குணம் படைத்தவள் அந்த அம்மை. தமது நண்பர்களுக்கு எழுதிய கடிதங்களில், ஆழ்ந்த கருத்துக்கள் நிறைந்திருந்தன; அந்த அம்மையின் அறிவுக்களஞ்சியத்தையும், செயல் ஆற்றலையும் அவை படம்பிடித்துக் காட்டின. அம்மையாருடைய கடிதங்களைப் பெற்றவர்கள், கடிதங்கள் கிடைத்த தினத்தை ஒரு பெரிய திருவிழாபோலக் கருதி மகிழ்ந்தார்கள். ஜோஹான் பிலிப் பெக்கர் இந்தக் கடிதங்களில் பலவற்றைத் திரட்டி, புத்தகமாகப் பிரசுரித்திருக்கிறார். ஹெயின் என்ற ஈவிரக்கமற்ற சரள கவி, மார்க்ஸின் கேலி

யைக் கண்டு பயந்து நடுநடுங்கினான்; ஆயினும், பிரா மார்க்ஸின் நுண்ணிய பேரறிவைப் பெரிதும் பாராட்டினான். மார்க்ஸ் தம்பதிகள் பாரிஸில் வாழ்ந்தபொழுது, ஹெயின் அவர்களது வீட்டிற்கு அடிக்கடி செல்வதுண்டு. தமது மனைவியின் பேரறிவையும், விமர்சனம் செய்யும் ஆற்றலையும் மார்க்ஸ் பெரிதும் மதித்துவந்ததால், [அவர் என்னிடம் 1866-ல் கூறியதுபோல்] தமது கையெழுத்துப் பிரதிகள் அனைத்தையும், அவளிடம் சமர்ப்பிப்பது வழக்கம். அவளுடைய தீர்ப்புக்குப் பெரு மதிப்புக்கொடுத்தார். அவை அச்சாபீஸுக்குச் செல்லு முன்பு, அவைகளுக்கு நகல் எடுப்பது வழக்கம்.

பிரா மார்க்ஸுக்கு ஏராளமான குழந்தைகள் இருந்தன. 1848-ம் வருடம் நடந்த புரட்சிக்குப் பின்பு, வறுமையில் சிக்குண்டு தேசம் தேசமாக அலைந்து திரிந்து, இறுதியில் லண்டனில் அபயம் தேடி, ஸோஹோ ஸ்கொயரிலுள்ள இரண்டு சிறிய அறைகளில் வசித்துவந்த காலத்து, மூன்று குழந்தைகள் பால்யத்திலேயே இறந்து போயின. ஆம், வறுமைக்குப் பலியாயின என்று சொன்னாலும் குற்றமில்லை! எனக்கு மூன்றே மூன்று புதல்விகளைத்தான் தெரியும். 1865-ம் வருடம் மார்க்ஸுக்கு என்னை அறிமுகப்படுத்தியபொழுது, எலானோர் என்ற கடைசிப் புதல்வியைக் [இப்பொழுது ஆவலிங்கின் மனைவி] கண்டேன். உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் அழகான குழந்தையாக அவள் விளங்கினாளே யன்றி, பெண் குழந்தை போல அவள் தோற்றம் அளிக்கவில்லை. ஆண்

குழந்தையாகவே தோற்றமளித்தாள். “இவளைப் பெற்றபொழுது, தாய் ஏதோ தவறிழைத்துவிட்டாள்; அதனால்தான், ஆணாகப் பிறக்க வேண்டிய பிள்ளை, பெண்ணாகப் பிறந்திருக்கிறது” என்று கூறி, மார்க்ஸ் அடிக்கடி கேலி செய்வார். ஏனைய இரு குழந்தைகளும் வசீகரமாக இருந்ததோடு, குணத்திலும் தோற்றத்திலும் வேறுபட்டவர்களாகவும் இருந்தனர். மூத்த பெண்ணுக்கு [இப்பொழுது லாங்கெட்டின் மனைவி] தங்கையைப் போல், மங்கலான நிறமும், கறுத்த கண்களும், கார் இருளே உருவெடுத்து வந்தால்போன்ற கரிய கூந்தலும் இருந்தன. அவளுக்கு இளையவள் [இப்பொழுது லவார்க்கின் மனைவி] தாயைப்போல், அழகாக இருந்தாள். நேர்த்தியான சரீரம், ரோஜாப் புஷ்பங்களைப் போன்ற அழகிய கன்னங்கள்; அந்தி வானத்தில் தோன்றும் ஆதவனை ஒளித்துவைத்திருப்பதுபோல் தோன்றும் அடர்ந்த தங்கக் கம்பிகளைப்போன்ற கூந்தல்.

மேலே கூறியவர்களைத் தவிர, மார்க்ஸ் குடும்பத்தில் ஹெலன் டெமூத் என்ற மற்றொரு முக்கியமானவளும் இருந்தாள்; விவசாய குடும்பத்தில் பிறந்தவள் இவள்; யௌவன மங்கையாக இருக்கும்பொழுதே, ஜென்னி வான்வெஸ்ட்பேலன் கார்ல் மார்க்ஸை மணம்புரிந்துகொண்டதற்கு வெகு காலம் முன்பே, அவள் வெஸ்ட்பேலன் குடும்பத்தில் ஒரு பணிப்பெண்ணாக வேலைசெய்து வந்தாள். விவாகமான பின்னர், ஹெலன் டெமூத் பிரா மார்க்ஸைவிட்டு ஒரு கணமேனும் பிரிந்து வாழ்ந்ததே கிடையாது. மார்க்ஸ் குடும்பத்திற்காக, சர்வ

சங்கப் பரித்தியாகம் செய்வதே, தனது வாழ்க்கையின் இலட்சியம் என அவள் கருதினுள். அந்தக் குடும்பத்தின் சுகதுக்கங்களில் அவளும் பங்கெடுத்துக்கொண்டாள். மார்க்ஸும் அவரது தர்ம பத்தினியும் ஐரோப்பா கண்ட முழுதும் தேசம் தேசமாக நாடோடிகளைப்போல் அலைந்து திரிந்த காலத்து, ஹெலன் டெமூத்தும் கூடவே, ஊர் ஊராகச் சென்ருள். அவர்கள் பல நாடுகளிலிருந்து நாடு கடத்தப்பட்டபொழுது, ஹெலன் டெமூத்தும் தேசப்பிரஷ்டத்தை அனுபவித்தாள். வீட்டுக் காரியங்கள் அனைத்திற்கும் அவளே நடுநாயகமாக விளங்கினுள். மலைபோன்ற கஷ்டநஷ்டங்கள் வந்து மார்க்ஸ் குடும்பத்தை ஆட்டி அலைத்த நெருக்கடியான சமயங்களில், ஹெலன் டெமூத் அவைகளையெல்லாம் திறமையாகச் சமாளித்து வந்தாள். காரியங்களை முறையாகவும் கிரமமாகவும் செய்யும் திறன், சிக்கனம், தாய்மை ஆகிய நற்குணங்கள் அவளிடம் மலிந்து கிடந்ததால், உதவிசெய்வாரற்று, அநாதைகள்போல் மார்க்ஸ் குடும்பத்தினர் தவியாய்த் தவித்த காலத்தில், ஹெலன் டெமூத் குடும்ப விஷயங்களைத் திறமையாகப் பராமரித்து வந்தாள். எனவே, மார்க்ஸ் குடும்பம் கஷ்ட நஷ்டங்களை உணரவேயில்லை. குடும்பத்தைப் பராமரிக்கும் கலையில் தேர்ச்சி பெற்றவள் அவள். சமையல்காரியாகவும், பணிப் பெண்ணுகவும் வேலைபார்த்துவந்ததோடு, குழந்தைகளுக்கு ஆடை அணிவது போன்ற காரியங்களையும் செய்துவந்தாள். பிரா மார்க்ஸின் உதவிகொண்டு குழந்தைகளின் சட்டைகளையும் தைத்துவந்தாள். துணிமணிகளைச் செம்மையாகப்

பராமரித்து வந்ததோடு, கூடவே குடும்பத் தலைவி யாகவும் திகழ்ந்தாள். குழந்தைகள் அவளைத் தாயைப்போல் நேசித்தார்கள். அவளும், குழந்தை களை மனப்பூர்வமாக நேசித்து, தாயைப்போல் அன்பாக நடந்துகொண்டாள். மார்க்ஸும் அவ ரது மனைவியும், அவளை ஒரு ஆருயிர்த் தோழி யாகவே கருதினார்கள். மார்க்ஸும், ஹெலன் டெ மூத்தும் சதுரங்கம் விளையாடுவது வழக்கம். சில சமயங்களில், மார்க்ஸை ஹெலன் டெமூத் தோற் கடித்துவிடுவாள். ஹெலன் மார்க்ஸ் குடும்பத்தி னரை நேசித்ததற்கு எல்லையே கிடையாது; அவர் கள் என்ன செய்தாலும் அது நியாயமானதாகத் தான் இருக்க வேண்டும்; நல்ல காரியங்களைத் தவிர கெட்ட காரியங்களை ஒரு காலத்திலும் அவர்கள் செய்யவே மாட்டார்கள் என்பது, அவளது அசைக்கமுடியாத உறுதியான நம்பிக்கை. யாரா வது மார்க்ஸைக் குறைகூறினால்,பின்பு ஹெலன் டெ மூத்திடமிருந்து தப்பவே முடியாது. அக்கு அக் காக அவர்களைப் பிய்த்துவிடுவாள். மார்க்ஸ் குடும் பத்தாரோடு நெருங்கிய தொடர்புகொண் டிருந்த வர்களையும், ஹெலன் டெமூத்து நன்கு பராமரித்து வந்தாள். சுருங்கச் சொன்னால், அந்தக் குடும்பத் திற்கும் அதன் நண்பர்களுக்கும் அவள்தான் தாய். அவளுக்கு முன்பே மார்க்ஸும், அவரது மனைவியும் இறந்துவிட்டார்கள். பின்னர் எங்கல்ஸின் குடும் பத்தைக் கண்ணும் கருத்துமாகப் பராமரிப்பதில் பெரிதும் ஈடுபட்டிருந்தாள். இளம் பருவத்திலேயே, எங்கல்ஸின் நட்பு, அவளுக்குக் கிடைத்திருந்தது.

மார்க்ஸ் குடும்பத்தினரைப்போலவே, ஏங்கல்ஸின் குடும்பத்தினரையும் அவள் நேசித்துவந்தாள்.

ஏங்கல்ஸ்கூட, மார்க்ஸ் குடும்பத்தில் ஓர் அங்கத்தினராகவே விளங்கினர் என்பதை இங்கு குறிப்பிடாம லிருக்க முடிய வில்லை. மார்க்ஸின் புதல்விகள், அவரைத் தங்களது இரண்டாவது தந்தையாகவே பாவித்தார்கள். ஏங்கல்ஸை அவர்கள் மார்க்ஸின் மற்றொரு உருவமாகவே கருதினர். பல வருடங்கள் வரையிலும், ஜெர்மனியில் மார்க்ஸையும் ஏங்கல்ஸையும் ஒன்ருக இணைத்துத்தான் பேசுவது வழக்கம். சரித்திராசிரியர்களும் இருவரையும் ஒன்ருகவே குறிப்பிட்டு எழுதுவார்கள். ஏனெனில் மார்க்ஸின்றி ஏங்கல்ஸ் இல்லை; ஏங்கல்ஸ் இல்லாமல் மார்க்ஸ் இல்லை. புராதன காலத்துப் பண்டிதர்கள், கற்பனையில் சித்தரித்த உண்மையான நட்பை, நவீன யுகத்தில் இவர்கள் இருவரும் நடைமுறையில் நடத்தி மெய்ப்பித்துக்காட்டினர். இருவரும் இளம் பருவத்திலேயே சிநேகிதர்களானுர்கள்; சம ரீதியில் வளர்ச்சியடைந்தார்கள்; ஒரேவிதமாகச் சிந்தனை செய்தார்கள்; ஒரேவிதமான புரட்சிகரமான கிளர்ச்சியில் பங்கெடுத்துக்கொண்டார்கள். இருவரும் ஒரே இடத்தில் வசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தபொழுதெல்லாம், ஒன்று சேர்ந்து செயலாற்றி வந்தார்கள். சந்தர்ப்பங்கள் அவர்கள் இருவரையும் இருபது வருடங்கள் வரையிலும் தனித் தனியே பிரிந்து வாழும்படி செய்யவில்லை யென்ருல், வாழ்நாள் முழுதும் இவ்வாறே ஒன்றுசேர்ந்து செயல் ஆற்றியிருப்பார்கள். 1848-ம் வருடம், புரட்சி தோல்வியடைந்த பின்பு,

ஏங்கல்ஸ் மான்செஸ்டருக்குப் போகவேண்டி வந்தது. அதே சமயத்தில், மார்க்ஸ், லண்டனில் தங்கியிருக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். ஆயினும் கூட, கடிதங்கள் மூலமாக, இருவரும் அறிவுத் துறையில் ஒன்ருகவே வாழ்ந்துவந்தார்கள். அரசியல் சம்பவங்களைப்பற்றியும், விஞ்ஞான சம்பந்தமான சம்பவங்களைப்பற்றியும், தாங்கள் ஈடுபட்டிருந்த அலுவல்களைப்பற்றியும், அனேகமாக, இருவரும் தினசரி கடிதப் போக்குவரத்துக்களை நடத்தினுர்கள். மான்செஸ்டரில் தம்மீது சுமத்தப்பட்டிருந்த பொறுப்புக்களிலிருந்து விடுபட்டவுடனேயே, ஏங்கல்ஸ் லண்டனுக்கு வந்து, வசிக்கத் தொடங்கினுர். தமது ஆருயிர்த் தோழரான மார்க்ஸின் வீட்டிவிருந்து, பத்து நிமிஷம் நடந்தால், ஏங்கல்ஸ் வீட்டை அடையலாம். அவருடைய வீடு, அவ்வளவு சமீபத்திலிருந்தது. 1870-ம் ஆண்டிலிருந்து, 1883-ம் வருடம் மார்க்ஸ் இறக்கும்வரையிலும், மார்க்ஸ் வீட்டிலோ, அல்லது, ஏங்கல்ஸின் வீட்டிலோ, ஒருவரை யொருவர் சந்தித்துப் பேசாத நாளே கிடையாது.

லண்டனுக்கு வரப்போகிறேன் என்று ஏங்கல்ஸ் மான்செஸ்டரிலிருந்து கடித மெழுதினுல் போதும். அந்தத் தருணத்திலிருந்து, மார்க்ஸ் குடும்பம் ஆனந்தக்கடலில் மூழ்கிவிடும். அவர் வந்து சேர்வதற்குப் பல நாட்கள் முன்பே, மார்க்ஸ் குடும்பத்தினர் அவரது விஜயத்தைப்பற்றியே சதா சர்வ காலமும் பேசிக்கொண் டிருப்பார்கள். ஏங்கல்ஸ் வந்த தினத்தன்று, மார்க்ஸ் ஒரு வேலையும் செய்ய மாட்டார். அமைதியின்றி அவரது மனம்

அவ்வளவு தூரம் அலைமோதிக்கொண் டிருக்கும். மலரும் மணமும் போன்ற இரு நண்பர்களும் ஒன்று கூடினால் கேட்கவாவேண்டும்! சுருட்டுக் குடித்துக் கொண்டும், பானங்களைக் குடித்துக்கொண்டும் இரவு முழுதும் மூச்சுவிடாமல் பேசிக்கொண்டே யிருப்பார்கள். கடந்த சந்திப்பிற்குப் பின்பு, என் னென்ன சம்பவங்கள் நடந்தனவோ, அவற்றை யெல்லாம், ஒன்றுகூட விடாமல் இருவரும் பேசிக் கொண்டே யிருப்பார்கள்.

ஏங்கல்ஸின் அபிப்பிராயத்திற்குப் பெரு மதிப் புக் கொடுத்தார் மார்க்ஸ். தம்மோடு ஒத்துழைப்ப தற்கு அருகதையுள்ளவர் ஏங்கல்ஸ் ஒரே ஒருவர் தான் என்று மார்க்ஸ் கருதிவந்தார். பொது ஜனங்களும், பொதுஜன அபிப்பிராயமும் ஒருங்கே உருவெடுத்தாற்போல் ஏங்கல்ஸ் திகழ்ந்தார் என்று மார்க்ஸ் நினைத்தார்.

மார்க்ஸின் தோழர்களில் பலர் தலைசிறந்த அறி ஞர்கள் என்பது உண்மையே. ஆயினும் ஏங்கல் ஸின் அபிப்பிராயங்களைத்தான் மார்க்ஸ் பெரிதும் மதித்தார். ஏங்கல்ஸ் ஒரே ஒருவர்தான் தம்மோடு ஒத்துழைப்பதற்கு அருகதை யுள்ளவர் என்று மார்க்ஸ் கருதினார். வாஸ்தவத்தில், பொதுஜனங் கள் அனைவரும் ஒருங்குதிரண்டு ஏங்கல்ஸ் என்ற பெயர் பெற்று விளங்குவதாக மார்க்ஸ் கருதினார். ஏங்கல்ஸின் சந்தேகங்களை நிவர்த்திசெய்து, தமது கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும்படி செய்வதைப் போல, சிரமமான காரியம் வேறு எதுவுமே கிடையாதென்று மார்க்ஸ் கருதினார். உதாரணமாக, ஆல்பிஜீன்ஸ்களின் அரசியல், மதம் சம்பந்தமான

போராட்டங்களைப்பற்றி, ஏங்கல்ஸ் மனதில் குடி கொண்டிருந்த சந்தேகங்களை அகற்ற [அவை என்ன என்பது இப்பொழுது எனக்கு நினைவு இல்லை.] பல புத்தகங்களை மார்க்ஸ் திரும்பத் திரும்பப் படித்துக்கொண் டிருந்ததை நான் நேரில் பார்த்திருக்கிறேன். தமது கருத்துக்களை ஏங்கல்ஸ் ஏற்றுக்கொண்டால், அதைப் பெருத்த வெற்றி யாகக் கருதினார் மார்க்கஸ்.

ஏங்கல்ஸை நண்பராகப் பெற்றிருப்பதை நினைத்து மார்க்ஸ் பெருமை யடைந்தார். தமது நண்பரின் புத்திகூர்மையையும், நற்குணங்களை யும் என்னிடம் அடிக்கடி எடுத்துரைத்து, மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தார். ஏங்கல்ஸை எனக்கு அறிமுகப்படுத்தும் பொருட்டு, பிரத்தியேகமாக மான்செஸ்டருக்கு மார்க்ஸ் என்னை அழைத்துச் சென்றார். ஏங்கல்ஸின் பெருமிதமான அறிவாற்றலைக் கண்டு மார்க்ஸ் பேரானந்த மடைந்தார். ஏங்கல்ஸுக்கு ஏதேனும் அபாயம் நேரிட்டுவிடுமோ வென்று சதா சர்வகாலமும் விசனப்பட்டுக் கொண்டே யிருப்பார். "வயல்களுக்கு நடுவே, நாலுக்கால் பாய்ச்சலில், குதிரைமீது சவாரி செய்யும்பொழுது, தடுமாறி ஏங்கல்ஸ் விழுந்து விடுவாரோ என்று எப்பொழுதும் என் மனது கவலைப் பட்டுக்கொண்டே யிருக்கிறது" என்று ஒரு நாள் என்னிடம் கூறினார்.

அன்பு பொங்கித் ததும்பும் தந்தையாகவும், கணவராகவும் இருந்ததுபோல், மார்க்ஸ் ஆருயிர்த் தோழராகவும் திகழ்ந்தார். அவரைப்போலவே, அவரது மனைவியும், புதல்விகளும், ஹெலன்

டெஸ்த்தும், பிரடரிக் ஏங்கல்ஸும் அன்பிற்கு உறைவிடமாகவே திகழ்ந்தார்கள்.

## 3

முற்போக்கு உளம்படைத்த முதலாளிகளின் தலைவர்களில் ஒருவராக மார்க்ஸ் அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார். ஆனால், அவருடைய மனப்போக்கு துலக்கமாகவும் வெளிப் படையாகவும் தெரிய ஆரம்பித்ததும், அவரது சகாக்கள் அவரை உதறித்தள்ளி விட்டார்கள். சோஷலிஸ்டாக மாறியபொழுது, அவரை ஒரு பரம வைரியாகவே அவர்கள் கருதினார்கள். மார்க்ஸை வன்மையாக எதிர்த்தார்கள். நாக்கில் நரம்பில்லாமல் பொய்ப்பிரசாரம் செய்தார்கள்; கீழ்த்தரமான பாஷையில் நிந்தித்தார்கள். இறுதியில், ஜெர்மனியைவிட்டு வெளியே துரத்தினார்கள். பின்னர், கட்டுப்பாடாக மார்க்ஸைப்பற்றியோ அவரது நூல்களைப்பற்றியோ ஒரு வார்த்தைகூடப் பேசாமலிருப்பது என்று முடிவு கட்டினார்கள். "லூயி போனபார்ட்டின் பதினெட்டாவது புரூமேர்" என்ற அரிய நூலை மார்க்ஸ் எழுதினார்; 1848-ம் வருடம் உயிரோடிருந்த சகல சரித்திராசிரியர்களிலும், எழுத்தாளர்களிலும் மார்க்ஸ் ஒருவர் தான் 1851-ம் வருடம் டிசம்பர் மாதம் 2-ந்தேதி நடந்த திடீர் அரசியல் மாற்றத்தின் காரண காரியங்களின் உண்மையான தன்மையை அறிந்துகொண்டார் என்பதோடு, மார்க்ஸ் மாத்திரம்தான் அதைப் பற்றிய தெளிவான விவரத்தையும் கொடுத்தார்.

இந்த அரியநூலை அறவே புறக்கணித்துவிட்டார்கள். அந்தப் புத்தகத்தை யாவரும் படிப்பதைக் கண்கூடாகக் கண்டும்கூட, ஒரு முதலாளித்துவப் பத்திரிகையாவது அதைப்பற்றி ஒரு வரிகூட எழுதவேயில்லை! "**தத்துவத்தின் வறுமை**" என்ற புத்தகத்தையும் [பிரௌதான் எழுதிய "**வறுமையின் தத்துவம்**" என்ற புத்தகத்திற்கு மறுப்பு] "**அரசியல் பொருளாதாரத்தின் விமர்சனம்**" என்ற நூலேயும் உதாசீனம் செய்துவிட்டார்கள். "சர்வ தேச தொழிலாளர்களின் சங்கம்" ஸ்தாபிக்கப் பட்ட பின்பு, "**மூலதனம்**" என்ற நூலின் முதல் பாகம் பிரசுரமான பின்னர் பதினைந்து வருட காலமாக நிலவியிருந்த இந்த மௌனம் கலைந்தது. ஏனெனில் மார்க்ஸை இனிமேல் உதாசீனம் செய்ய முடியாது என்ற நிலைமை ஏற்படலாயிற்று.

இண்டர்நாஷனல் வளர்ந்து வலிமை பெற்றது. அதன் செயல்களின் புகழ் பாரெங்கும் பரவிற்று. மார்க்ஸ் பகிரங்கமாக அரங்கத்தில் தோன்ருமல், ஏனையவர்களை நடிக்கச் செய்துவிட்டாரென்ருலும், வெகு விரைவில், திரை மறைவிலிருந்த மானேஜர் யாரென்பது வெளிப்படையாகவே தெரிய ஆரம்பித்தது. ஜெர்மனியில் சமூக ஜனநாயகக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது; விரைவில் அது வலிமை பெற்றது. ஸ்தாபனமாக வளர்ந்தது. அதைத் தாக்கு முன்பு, பிஸ்மார்க் அதன் நண்பனைப்போல் நடித்தான். லாஸேயின் சிஷ்யரான ஷீலிஸர் தொடர்ச்சியாகப் பல கட்டுரைகள் வரைந்தார். [இந்தக் கட்டுரைகளில் பல முக்கிய அம்சங்கள் அடங்கியிருப்பதாகவே மார்க்ஸ் கருதினர்.] இதனுல்,

தொழிலாளர் வர்க்கத்திடையே "மூலதனம்" பிரா பல்யமடைந்தது. முதல் இண்டர்நாஷனலின் மகாநாட்டில், ஜொஹான் பிலிப் டெக்கர், " தொழிலாளர் வர்க்கத்தின் வேதப் புத்தகமாக "மூலதனம்" என்ற நூலை அனைவரும் கருத வேண்டும் " என்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்; இதை எல்லோரும் ஆதரித்தனர்.

1871-ம் வருடம் மார்ச் மாதம் 18-ந் தேதி பாரிஸில் நடந்த புரட்சிக்குப் பின்பு, முதல் இண்டர்நாஷனல் அதில் எத்தகைய பங்கெடுத்துக் கொண்டது என்பதைத் தெரிந்துகொள்ளும் ஆவல் பெருகிற்று ; சர்வதேசங்களிலும் உள்ள முதலாளித்துவப் பத்திரிகைகள் " கம்யூனை " வன்மையாகத் தாக்கியபொழுது, இண்டர்நாஷனலின் மத்திய கமிட்டி, புரட்சியை ஆதரித்து, வன்மையாக எதிர்வாதம் செய்தது. எனவே, "பாரிஸ் கம்யூன்" முறியடிக்கப்பட்ட பின்பு, மார்க்ஸ் உலகப் பிரசித்திபெற்றார்.

விஞ்ஞான சோஷலிசத்தின் தலைசிறந்த தத்துவ ஞானி யென்றும், சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தை ஸ்தாபித்த மாபெரும் தலைவரென்றும் மார்க்ஸை யாவரும் போற்றிப் புகழ்ந்தார்கள். அவருடைய அறிவு ஆற்றலை உலகம் அங்கீகரித்தது. ஒவ்வொரு தேசத்திலும் உள்ள சோஷலிஸ்டுகள் " மூலதனத்தை " ஒரு முக்கியமான பாடப் புத்தகமாகக் கருதினார்கள். தொழிலாளர் பத்திரிகைகளும், சோஷலிஸ்டுப் பத்திரிகைகளும் அவருடைய தத்துவங்களைப் பாரெங்கும் பரப்பின. நியூயார்க் நகரத்தில் ஒரு பிரமாண்டமான

வேலைநிறுத்தம் நடந்தது; தொழிலாளர்களின் கோரிக்கைகளில் நியாயம் இருக்கிறது என்பதை நிரூபித்துக்காட்டும் பொருட்டும், தொழிலாளர்களுக்கு உத்வேக மூட்டும் பொருட்டும், "மூலதனத்திலிருந்து" சில முக்கியமான பகுதிகளைத் திரட்டி, துண்டுப்பிரசுர வடிவத்தில் அவற்றைப் பிரசுரித்தனர். ஜர்மானிய பாஷையிலிருந்த "மூலதனம்" ஏனைய ஐரோப்பிய பாஷைகளிலும்—ரஷ்ய, பிரஞ்சு, ஆங்கில பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது. "மூலதன"த்திலுள்ள முக்கியமான விஷயங்களைத் திரட்டி, ஜர்மானிய, இத்தாலிய, பிரஞ்சு, ஸ்பெயின், டச்சு பாஷைகளில் பிரசுரித்தனர். ஐரோப்பாவிலோ, அல்லது அமெரிக்காவிலோ யாரேனும் மார்க்ஸின் தத்துவங்களை எதிர்த்தால், உடனே அவர்களுக்கு ஆணித்தரமாகப் பதில் கூற, சோஷலிஸ்டுப் பொருளாதார வாதிகளுக்கு 'மூலதனம்' பேருதவிபுரிந்தது. முதல் இண்டர்நாஷனலின் காங்கிரஸ் கூறியதுபோல், இன்று உண்மையாகவே "மூலதனம்" தொழிலாளர் வர்க்கத்தின் வேத நூலாகத் திகழ்கிறது.

சர்வ தேச சோஷலிஸ்டு இயக்கத்தில் மார்க்ஸ் தீவிரமாகப் பங்கெடுத்துக்கொண்டதால், விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபடப் போதிய அவகாசம் இல்லாது போயிற்று. இதற்குச் சிகரம் வைத்தால் போல், தமது அருமை மனைவியும் மூத்த மகளான மதாம் லாங்கட்டும் இறந்துபோனது அவரது ஆராய்ச்சியைப் பெரிதும் பாதித்தது.

மார்க்ஸும் அவரது மனைவியும் ஒருவரையொருவர் சார்ந்திருந்தனர். அவளது பேரழகு

அவருக்கு ஆனந்தத்தையும் பெருமையையும் அளித்தது. சோஷலிஸ்டுப் புரட்சிக்காரராக இருந்ததால், தவிர்க்க முடியாத வறுமையும், கஷ்டநஷ்டங்களும் அவரைச் சதா சர்வ காலமும் ஆட்டி யலைத்தன. ஆனால், பிரா மார்க்ஸின் கருணை உள்ளமும், சிரத்தையும் அவைகளை யெல்லாம் சகித்துக் கொள்ளப் பேருதவி புரிந்தன. பிரா மார்க்ஸைச் சுடு காட்டிற்கு இழுத்துச் சென்ற துன்பங்கள், கணவரது உயிரையும் வெகுவிரைவில் கபளிகரம் செய்தன. பிரா மார்க்ஸுக்குச் சகிக்கமுடியாத வேதனையைக் கொடுத்து, நீண்ட காலமாகப் படுத்த படுக்கையாக வைத்திருந்த பிணி, மார்க்ஸையும் உருக்கி, எலும்பும் தோலுமாகச் செய்துவிட்டது. மனோவேதனை ஒருபுறம்; மற்றொரு புறம், நித்திரையின்மையாலும் சுத்தமான காற்றைப் பருகாததனாலும், தேகப் பயிற்சி யின்மையாலும் அவரது உடல்நலம் குன்றிப்போயிற்று. அவரது ஜீவன் என்ற விளக்கை அணைத்த வியாதி தலைதூக்கியதற்கு [சுவாஸப்பை சம்பந்தமான வியாதியே] மூல காரணம் ஆகும்.

கம்யூனிஸ்டாகவும், லோகாயதவாதியாகவும் கடைசி வரையிலும் வாழ்ந்து, 1881-ம் வருடம், டிசம்பர் மாதம் 2-ந் தேதி, பிரா மார்க்ஸ் இயற்கையோடு கலந்தார். சாவைக் கண்டு அந்த வீராங்கனை, கொஞ்சம்கூட அஞ்சவில்லை; இறுதிக் காலம் நெருங்கிவிட்டதை உணர்ந்த பொழுது "கார்ல்! எனது பலம் நொறுங்கிப்போய் விட்டது" என்று கூறினாள். இறுதியில், அவள் பேசிய வார்த்தைகள் இவைதான். டிசம்பர் மாதம்

5-ந் தேதி யன்று, ஹைகேட் புதைகுழியில், எந்த விதமான ஆடம்பரங்களுக்குமின்றி, சர்வ சாதாரணமான முறையில் அடக்கம் செய்யப்பட்டாள். அந்த மாதர் திலகம் வாழ்நாள் முழுதும் விரும்பியவாறும், அவரது கணவர் விரும்பியவாறும் ரகசிய முறையில் பிரேதம் அடக்கம் செய்யப்பட்டது. இந்த விஷயத்தை யாருக்கும் தெரிவிக்காததால், தமது நிரந்தரமான இடத்திற்குச் சென்ற பிரேதத்திற்குப் பின்னால், நெருங்கிய சில நண்பர்கள் மட்டும்தான் போனார்கள்.

சமாதியினருகில் பிரடரிக் ஏங்கல்ஸ் பின் வருமாறு பேசினார் :

" நண்பர்களே! இங்கு நாம் அடக்கம் செய்யும் உன்னதமான குணங்கள் படைத்த மாதர் திலகம், 1814-ம் வருடம் ஸால்ஸ் வீடல் என்ற நகரத்தில் பிறந்தவர். விரைவில், அவர்களது தந்தை பாரன் வான் வெஸ்ட்பேலன் ஸ்டேட் கௌன்ஸிலராக டிரவஸ் என்ற இடத்திற்கு மாற்றப்பட்டார். இந்த இடத்தில்தான் மார்க்ஸ் குடும்பத்தோடு நட்பு ஏற்பட்டது. இரு குழந்தைகளும் ஒன்றாகவே வளர்ந்தன. அபூர்வ புத்திசாலிகளான இருவரும், இரண்டறக் கலந்தனர். மார்க்ஸ் கலாசாலையில் பிரவேசித்தபொழுது, இருவரும் ஒன்றாகவே வாழ்வது என்று ஏற்கெனவே முடிவு செய்துவிட்டனர்.

"சிறு காலம் மார்க்ஸ் நடத்திவந்த " ரீனிஷ் ஜீடங்" என்ற பத்திரிகையை நசுக்கிய பின்பு, 1843-ம் வருடம் இருவருக்கும் கலியாணம் நடந்தது. அதற்குப் பின்னர், இன்றுவரையிலும்

ஜென்னி மார்க்ஸ் தமது கணவரோடு சகல அலு வல்களிலும், போராட்டங்களிலும் பங்கெடுத்துக் கொண்டார்; கஷ்ட நஷ்டங்களை உணர்ச்சி பூர்வ மாகவும், ஆர்வத்தோடும் ஏற்று அனுபவித்தார்.

"இந்த இளம் தம்பதிகள் பாரிஸுக்கு தேசப் பிரஷ்டர்களாகச் சென்றனர்; முதலில் தாங்க ளாகவே சென்றாலும், பின்பு, ஜெர்மானிய சர்க்கார் நாடு கடத்தும் உத்தரவைப் பிரகடனம் செய்தது. பிரஷ்ய சர்க்காரின் ரத்தக்கறை தோய்ந்த கொடிய கரங்கள் பாரிஸிலுள்ள தம்பதிகளைத் தீண்டின. அலெக்ஸாண்டர் வான் ஹம்போல்ட் போன்ற ஒரு மனிதரே, மார்க்ஸை நாடுகடத்த உடந்தை யாக இருந்தார் என்பதை வருத்தத்துடன் தெரி வித்துக்கொள்கிறேன். பின்னர், பிரஸ்ஸல்ஸுக்குத் துரத்தப்பட்டனர். அச் சமயத்தில்தான் "பிப்ரவரி புரட்சி" நடந்தது. பிரஸ்ஸல்ஸிலும் புரட்சி வெடித்தது. மார்க்ஸை மாத்திரம் கைது செய்வ தோடு, பெல்ஜிய சர்க்கார் திருப்தி யடையவில்லை. எந்த வித காரணமுமின்றி, பிரா மார்க்ஸையும் சிறையில் அடைத்தார்கள்.

"1848 ம் வருடம் ஆரம்பமான புரட்சிப் புயல், அடுத்த ஆண்டு அடங்கிப்போயிற்று. திரும்பவும் நாடு கடத்தப்பட்டார்கள். பிரஞ்சு சர்க் காரின் வற்புறுத்தலால், லண்டனுக்கு நாடுகடத் தப்பட்டார்கள். தேசப் பிரஷ்டத்தால் ஏற்படும் சகல கொடுமைகளையும், இந்த முறை ஜென்னி மார்க்ஸ் அனுபவித்தாள். இரண்டு ஆண் குழந்தை களும், ஒரு பெண் குழந்தையும் பூமிக் கடியில் நிரந் தரமான நித்திரைக்குச் சென்றனர். இதனால் ஏற்

பட்ட சகிக்கமுடியாத வேதனையைஜென்னிமார்க்ஸ் பொறுத்துக்கொண்டாள். ஆனால், ஒரு விஷயம் அவளைப் பெரிதும் பாதித்தது. சர்க்கார்முதல் முதலாளிகள்வரையிலும் மிதவாதவாதிகள்முதல் ஜனநாயகவாதிகள்வரையிலும்-ஓர்ஐக்கியமுன்னணியை நிறுவி, மார்க்ஸைத் தாக்கிவந்தனர். வெறுக்கத்தக்க, இழிவான பாஷையில் மார்க்ஸைத் தூற்றிவந்தனர். மார்க்ஸைச் சிறுமைப்படுத்துவதற்காக இத்தகைய சதியாலோசனை நடந்தது! முதலாளித்துவப் பத்திரிகைகள் அனைத்தும்,ஒருவரிகூட எழுத அவருக்கு அனுமதி கொடுக்கவில்லை. எனவே, ஏராளமான எதிரிகள் மார்க்ஸை வன்மையாகத் தாக்கியபொழுது, எதிர்வாதம் செய்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள யாதொரு கதியுமின்றி மார்க்ஸ் தவியாய்த் தவித்தார். இந்தப் பரம வைரிகளை, மார்க்ஸும் அவரது மனைவியும் வேப்பங்காய் போல் வெறுத்தனர். ஆனால், செயலாற்ற வழி இல்லாதிருந்தபடியால், இத்தகைய நிலைமை நீண்ட காலம் நீடித்திருந்தது.

" ஆனால், இது நிரந்தரமாக நிலைத்திருக்கவில்லை. ஐரோப்பாவிலுள்ள பாட்டாளி மக்கள், திரும்பவும் புத்துயிர் பெற்று, கிளர்ந் தெழுந்தனர். சுயேச்சையாகச் செயலாற்றத் துவங்கினார்கள். இண்டர்நேஷனல் ஸ்தாபிக்கப்பட்டது. தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டங்களின் ஒவ்வொரு தேசத்திலும் பரவிவந்தது. கணவர் மார்க்ஸ் முன் அணியில் நின்று வெஞ்சமர் புரிந்தார். கடந்த காலத்தில் யார் யார் தீங்கிழைத்தார்களோ, அவர்கள் யாவரும் அவைகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்கும்

காலம் வந்ததை, பிரா மார்க்ஸ் கண்கூடாகக் கண்டாள். மார்க்ஸ்மீது சரமாரியாகப் பொழிய ப்பட்ட பொய் புரட்டுக்கள், சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கி மறைந்துவிட்டன. சகல பிற்போக்காளர்களும்-நிலச்சுவான்தார்களி லிருந்து முதலாளித்துவ ஜனநாயகவாதிகள் வரையிலும் பெருமுயற்சி செய்து நசுக்க முயன்ற மார்க்ஸின் தத்துவங்கள் நாகரிக நாடுகளிலும் [இயந்திர சாத னங்கள் மூலமாக பொருள்களை உற்பத்தி செய்கிற முதலாளித்துவ நாடுகளில்] காட்டுத் தீபோல் பரவி வருவதை - கோபுரத்தின் உச்சியிலிருந்து பிர காசிப்பதை - பிரா மார்க்ஸ் கண்டாள். தம்மு டைய எலும்போடு எலும்பாக, சதையோடு சதை யாக இரண்டறக் கலந்திருந்த பாட்டாளி மக்களின் இயக்கம், ரஷ்யாமுதல் அமெரிக்காவரையிலும், பழைய உலகத்தின் அஸ்திவாரத்தையே ஒரு உலுக்கு உலுக்கி, பெருத்த எதிர்ப்புக்கிடையே, வெற்றி பெறுவது திண்ணம் என்பதை மேன் மேலும் ஊர்ஜிதம் செய்துகொண்டு, கம்பீரமாக முன்னேறிச் செல்லும் கண்கொள்ளாக் காட்சியை இந்த மாதரசி கண்டாள். கடந்த ரீச்ஸ்டாக் தேர்த லின்போது, ஜெர்மானியத் தொழிலாளர்கள் தமது இயக்கத்தின் வற்றாத சக்தியைக் காட்டியது, இறு திக் காலத்தில் அவளைக் குதூகலப்படுத்திய ஒருசில சம்பவங்களில் ஒன்று.

“நுண்ணிய அறிவும், விஷயங்களை அலசி ஆராய்ந்து பார்க்கும் பேராற்றலும், ராஜ தந்திர மும், வற்றாத ஆர்வமும் படைத்த மாதர் திலகத்தை - தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டிருக்

கும் தோழர்களிடம் மிதமிஞ்சிய அன்பும் மரியாதை யும் காட்டும் வீர மாதை - பத்திரிகைகளெல்லாம் அறவே புறக்கணித்துவிட்டன! நாற்பது வருட காலமாக, பிரா மார்க்ஸ் செய்துவந்த பொதுஜன சேவையைப்பற்றி ஒரு வரிகூட எழுதவில்லை! பிரா மார்க்ஸோடு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண் டிருந்தவர்களுக்குத்தான், இந்த உண்மைகள் தெரி யும். ஆனால், இது மாத்திரம் மறுக்க முடியாத உண்மை; "பாரிஸ் கம்யூன்" முறியடிக்கப்பட்ட பின்பு, லண்டனுக்கு ஓடிவந்தவர்களின் மனைவிமார் கள், அவளை மறக்கவே மாட்டார்கள். அவளுடைய துணிச்சலான, புத்திசாலித்தனமான உபதேசங்களை நாம் இனிப் பெற முடியாது. பிரா மார்க்ஸ் மிகவும் தைரியசாலி, ஆனால் தற்பெருமையற்றவள்; கெட் டிக்காரி. ஆனால், சிறிதும் நேர்மை பிசகாதவள். இத்தகைய தைரியமும் நேர்மை பிசகாத அறி வுரையையும் இந்த அம்மையாரின் பிரிவால் நாம் இழக்க நேர்ந்தது மிகமிக வருந்தத்தக்கதே யாகும்.

"அவருடைய சொந்த குணாதிசயங்களைப்பற்றி நான் பேச வேண்டிய அவசியமே கிடையாது. அவ ருடைய நண்பர்களுக்கு அவை நன்ருகத் தெரியும். ஒரு காலத்திலும், அவைகளை அவர்கள் மறக்கவும் மாட்டார்கள். பிறரைச் சந்தோஷப்படுத்துவ தையே தமது பேரின்பமாக நினைத்த பெண் எந்த தேசத்திலாவது, எந்தக் காலத்திலாவது இருந்திருந் தால், அந்த மாதர் திலகம் பிரா மார்க்ஸ்தான்."

மனைவி இறந்த பிறகு, மார்க்ஸ் துன்பக்கட லில் ஆழ்ந்தார். சரீர, மானசீக வேதனைகள் அவரை உருக்கி, எலும்பும் தோலுமாகச் செய்துவிட்டன.

அடுத்த வருடம், அவரது மூத்த மகள் மதாம் லாங்கட் திடீரென இறந்துபோனபொழுது, அவரது மனோவேதனை இன்னும் பன்மடங்கு அதிகரித்தது. உடலும், உள்ளமும் சுக்குநூருகத் தகர்ந்து போயின. இந்தத் துக்ககரமான சம்பவங்கள் அவரது உயிருக்கே உலை வைத்தன. இறுதிக் காலமும் அணுகியது; 1883-ம் வருடம் மார்ச் மாதம் 14-ந் தேதி, தமது அறுபத்து ஏழாவது வயதில், தாம் வழக்கமாக எழுதும் மேஜையில் இருந்தபடியே நிரந்தரமான நித்திரையில் ஆழ்ந்துவிட்டார் மார்க்ஸ்.

# கார்ல் மார்க்ஸ்

## வாழ்க்கைக் குறிப்புகள்

### வில்லியம் லீப்னெட்*

### முதல் சந்திப்பு

ஆயிரத்தி எண்ணூற்றி ஐம்பதாம் வருடம் கோடை காலத்தில் ஸ்விட்ஜர்லாந்திலிருந்து லண்டனுக்குச் சென்றேன். வந்து சில நாட்கள் சென்ற பிறகு, மார்க்ஸின் புதல்விகளுடன் - ஒரு புதல்விக்கு வயது ஏழு, மற்றொரு புதல்விக்கு வயது ஆறு - எனக்கு நட்பு ஏற்பட்டது. "சுதந்திர ஸ்விட்ஜர்லாந்தின்" சிறையிலிருந்து நான் விடுதலையானேன். பிறகு, அங்கிருந்து என்னை நாடு கடத்தினார்கள். பிரான்ஸ் வழியாக லண்டனுக்கு வந்தேன். "கம்யூனிஸ்டு தொழிலாளர்களின் கல்வி மன்றத்தில்", கோடை கால விடுதியில் மார்க்ஸின் குடும்பத்தைச் சந்தித்தேன். இந்தக் கழகம் லண்டனுக்குச் சமீபத்தில் இருந்தது. இது கிரீன்விச்சில்

---

* [வில்லியம் லீப்னெட் (1826 - 1900) ஜெர்மன் சோஷல் டெமாக்ராடிக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர்; அதன் ஒப்பற்ற தலைவர்; மார்க்ஸியத்தை ஜெர்மனியில் பரப்ப இடைவிடாது உழைத்தவர். அவர் எழுதின இந்தக் குறிப்புகள் 1896-ஆம் வருடம் வெளிவந்தது.]

இருந்ததா, அல்லது ஹாம்ப்டன் கோர்ட்டில் இருந்ததா என்பது சரியாக நினைவில்லை. இங்குதான் முதன்முதலாக " தந்தை மார்க்ஸைக் " கண்டேன். கண்டதும், அவர் என்னைக் கூர்ந்து கவனித்தார்; எதையோ தேடுபவர்போல, என் தலையை நுணுக்கமாகப் பரிசீலனை செய்தார். இது எனக்குப் புதிதல்ல. என் " மனோவலிமையைப் " பெரிதும் சந்தேகித்த குஸ்டாவ் ஸ்ட்ரூவ், என்னைப் பலமுறை இதைப்போல் உற்றுநோக்கிச் சோதித்திருக்கிறார். சாமுத்திரிகா லக்ஷணத்தைப் பயின்றுவந்த காலமாதலால், தம்முடைய ஆராய்ச்சிக்கு என்னை அவர் ஒரு கருவியாகவைத்து ஆராயவிரும்பினார் போலும். எது எப்படியானாலும், சோதனையில் நான் வெற்றி பெற்றேன். அடர்த்தியான கரிய பிடரி மயிருடன் கூடிய சிங்க முகம் ஒன்று, என்னை உற்றுநோக்கிய பொழுது, நான் நிலைகுலைந்துபோகவில்லை. இந்தப் பரிசோதனைக்குப் பிறகு, ஜீவகளை ததும்பும் உல்லாசமான பேச்சு ஆரம்பமாயிற்று. அதிவிரைவில் நாங்கள் நகைச்சுவை ததும்பும் பேச்சில் மூழ்கினோம். மார்க்ஸ் தங்குதடையின்றி ஹாஸ்யமாகப் பேசினார். இளமையிலிருந்தே பிரா மார்க்ஸ் குடும்பத்திற்குச் சேவை செய்துவரும் லென்சன், பிரா மார்க்ஸ், மார்க்ஸின் குழந்தைகள் ஆகியோரிடமும் எனக்குப் பழக்கம் ஏற்பட்டது.

அன்றுமுதல் மார்க்ஸ் வீட்டை சொந்த வீடு போல் நான் பாவித்தேன். ஒரு நாள்கூட மார்க்ஸ் வீட்டிற்கு நான் போகாமல் இருந்ததில்லை. அவர் வீடு பின் தெருவில் இருந்தது. அதற்கு அருகிலிருந்த சர்ச்சுத் தெருவில் நான் வசித்தேன்.

## முதல் சம்பாஷணை

"கம்யூனிஸ்டு தொழிலாளர்களின் கல்வி மன்றத்தில்" மார்க்ஸைச் சந்தித்த மறு நாள், நானும் மார்க்ஸும் நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தோம். எனினும், விஷயங்களை விரிவாக விவாதிக்க அவகாசம் கிடைக்கவில்லை. எனவே, மறு நாள் சங்கக் கூட்டம் நடக்கும் இடத்திற்கு வரும்படி மார்க்ஸ் என்னை அழைத்தார். அந்தக் கட்டத்தில் ஏங்கல்ஸும் கலந்துகொள்ளக் கூடும் என்று கூறினர். குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே நான் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தேன், மார்க்ஸ் இன்னும் வரவில்லை. பழைய நண்பர்களைச் சந்தித்து அவர்களுடன் அளவளாவிக்கொண் டிருந்தபொழுது, என் தோள்மீது கைபோட்டு, சகோதர வாஞ்சையுடன் மார்க்ஸ் என்னை வரவேற்று உபசரித்தார். தனிமையான சம்பாஷணை அறையில் ஏங்கல்ஸ் இருப்பதாகவும், அங்கே பேச வசதியாக இருக்குமென்றும் அவர் சொன்னர். தனிமையான சம்பாஷணை அறை என்பதற்கு என்னல் பொருள் தெரிந்துகொள்ள முடிய வில்லை. ஆனல், கடுமையான சோதனை நடக்கப்போகிறது என்பது மட்டும் ஏதோ எனக்குப் புலப்பட்டது. ஆயினும், நான் நம்பிக்கையை இழக்க வில்லை. மார்க்ஸைப் யின் தொடர்ந்து சென்றேன், எல்லோரிடமும் சகோதர வாஞ்சையுடன் நடப்பவர் மார்க்ஸ் என்ற எண்ணம் நேற்று என் மனதில் பதிதந்து; பிறர் மனதில் நம்பிக்கையை வளர்க்கும் அருங் குணமும் அவரிடம் குடிகொண் டிருப்பதை இன்று கண்

டேன். என் கையைப் பிடித்துக்கொண்டு, அந்தத் "தனிமையான சம்பாஷணை அறைக்கு" என்னை அழைத்துச் சென்றார் தனிமையான அறையா? அது யாருடையது? பிரபுவின் அறையா? சீமாட்டி யின் அறையா? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அந்த அறையில், ஒரு ஈயக் கோப்பையில் 'ஸ்டௌட்' என்னும் மது சகிதமாக, உட்கார்ந்தி ருந்த ஏங்கல்ஸ், நகைச்சுவை ததும்ப என்னை வர வேற்றார். மறு கணம் "ஆமி" என்ற பணிப் பெண் ணிடம் [தேசப் பிரஷ்டம் செய்யப்பட்ட நாங்கள் "ஆமி" என்ற சொல் ஜெர்மன் ஓசையைப் போன் றிருந்தால், அவளுக்கு 'எம்மா' என்னும் பெயர் சூட் டினோம்.] சிற்றுண்டி கொண்டுவரச் சொன்னோம். வயிற்றுப் பிரசினை எங்களுக்குப் பெரும் பிரசினை யாக இருந்தது. விரைவில் அவள் பீர் கொண்டுவந் தாள். மேஜையின் ஒரு புறத்தில் நானும், மறு புறத்தில் மார்க்ஸும் ஏங்கல்ஸும் உட்கார்ந்தோம். கனமான "மஹாகனி" மரத்தால் செய்யப்பட்ட மேஜையும், மின்னும் ஈயக் கோப்பைகளும், நுரை பொங்கி வழியும் "ஸ்டௌட்டும்" ஆங்கிலேயர் களின் சிற்றுண்டி சம்பிரதாயத்தை ஞாபகமூட்டின. ஜோடனைகள் ஆங்கில பாணியில் இருந்தன. நீண்ட களிமண் குழாய்கள் "புகைகுடிக்க வா, வா!" என்று அழைத்தன. இந்த அழகிய காட்சி, முன்பு ஆங்கிலப் பத்திரிகையில் நான் கண்ட ஒரு படத்தை ஞாபகமூட்டிற்று. ஆயினும் என்ன? அது பரீட்சை! அது ஏன் சுமுகமாக முடியக் கூடாது? பேச்சின் விறுவிறுப்பு மேலும் மேலும் அதிகரித்தது. ஒரு வருடத்திற்கு முன்பு, ஏங்கல்ஸை நான் ஜினிவாவில்

சந்தித்து இருக்கிறேன். ஆயினும், அவருடன் அப்பொழுது நான் நெருங்கிப் பழகவில்லை. பாரிசிலிருந்து வெளிவந்த "யாழ்பூஷர்" என்னும் பத்திரிகையில் மார்க்ஸ் எழுதின கட்டுரைகள் மூலமும், **"தத்துவத்தின் வறுமை"** என்ற புத்தகத்தின் மூலமும்தான் மார்க்ஸை அறிந்திருந்தேன் **"ஆங்கிலத் தொழிலாளர்களின் நிலைமை"** என்ற புத்தகத்தின் ஆசிரியர் என்ற முறையில் ஏங்கல்ஸை எனக்குத் தெரியும். 1846-ஆம் வருடத்திலிருந்தே நான் கம்யூனிஸ்டு ஆயினும், அரசியல் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்பதற்காக நடந்த கிளர்ச்சிக்குப் பிறகுதான், நான் ஏங்கல்ஸைச் சந்தித்ததற்குச் சிறிது காலத்திற்கு முன்புதான், "கம்யூனிஸ்டு மானிபெஸ்டோ" எனக்குக் கிடைத்தது. நான் அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன்; அதில் அடங்கியிருக்கும் விஷயங்கள் என்ன என்பதும் எனக்கு ஓரளவு தெரியும். "நியூ ரீனிஷ்ஜீடங்" எப்பொழுதுதாவது எனக்குக் கிடைக்கும். ஏனெனில் அப் பத்திரிகை வெளிவந்துகொண்டிருந்தபொழுது, 11 மாதங்களாக நான் வெளிநாடுகளிலோ, சிறையிலோ, இருந்தேன்; அல்லது, சண்ட மாருதத்தில் அகப்பட்டு அலையும் சருகைப் போன்று, தொண்டன் வாழ்க்கையை மேற்கொண்டு அங்குமிங்கும் அலைந்துகொண் டிருந்தேன்.

மத்திய தர வகுப்பு ஜனநாயகவாதி யென்றும், தெற்கு ஜெர்மனியிலுள்ள மிதவாதிகளின் இனத்தைச் சேர்ந்தவன் என்றும் இரு பரிசோதகர்களும் என்னை மதித்தார்கள். பல விஷயங்களைப் பற்றியும், பல நபர்களைப்பற்றியும் என் அபிப்பிரா

யத்தை நான் தெரிவித்தபொழுது, என் அபிப்பிரா யத்தைக் கடுமையாகக் கண்டித்தார்கள். சுருங்கக் கூறின், சம்பாஷணை எனக்குச் சாதகமாக முடிந் தது. பேச்சு படிப்படியாக விரிவடைந்தது. விரை வில், நாங்கள் இயற்கை விஞ்ஞானத்தைப்பற்றி விவாதிக்க ஆரம்பித்தோம். அந்தக் காலத்தில் தற் காலிகமாக வாகைமாலை சூடிய பிற்போக்காளர் களை மார்க்ஸ் எள்ளி நகையாடினார். புரட்சியை நசுச்கிவிட்டதாகப் பிற்போக்காளர்கள் மனப்பால் குடித்தனர். இயற்கை விஞ்ஞான சாஸ்திரம் புரட் சிக்கு அடிகோலுகிறது என்பதைப் பிற்போக்காளர் கள் நம்பவே இல்லை. கடந்த நூற்றாண்டில் "நீராவி அரசன்" உலகில் பிரம்மாண்டமான புரட்சியை உண்டுபண்ணினான். அவன் ஆட்சி முடிவுக்கு வரு கிறது. அவனுடைய ஸ்தானத்தை அவனைவிடப் பெரிய புரட்சிக்காரன் "மின்சாரப் பொறி" கைப் பற்றப் போகிறான். ரிஜன்ட் தெருவில் மின்சார யந்திரம் ரயிலை இழுத்துச் செல்லுவதை ஜனங் களுக்குக் காட்டி வருகிறார்கள் என்னும் செய்தியை மார்க்ஸ் சந்தோஷத்தோடும், உற்சாகத்தோடும் என்னிடம் சொன்னார். "இப்பொழுது பிரசினை தீர்ந்துவிட்டது. அதன் பலாபலன்களைப்பற்றி இப் பொழுது ஏதும் சொல்ல முடியாது. பொருளா தாரப் புரட்சியும் நடந்தே தீரும். ஏனெனில், அரசியல் புரட்சியின் முன்னோடி பொருளாதாரப் புரட்சி" என்றார். மார்க்ஸ் விஞ்ஞானத்தின் வளர்ச் சியைப்பற்றியும், யந்திர சாதனங்களின் அபி விருத்தியைப்பற்றியும், உலகத்தைப்பற்றி தம் மனதில் குடிகொண்டிருந்த கருத்துக்களைப்பற்றி

யும் தெளிவாக விவரித்தார்; சரித்திரத்தைப் பற்றி லோகாயதவாதிகள் கொண்டிருக்கும் கருத்தை அவர் வெகு அழகாக விளக்கினார். இது வரை என் மனதில் குடிகொண் டிருந்த சந்தேகங் கள் நிவர்த்தியாயின. அன்று மாலையில், நான் வீடு திரும்ப வில்லை. இரவு முழுவதும் பேச்சிலேயே கழித்தோம்; மறு நாள் காலைவரை விஷயங்களை விவாதித்தோம்; வேடிக்கையாகப் பேசினோம்; குடித்தோம். நான் படுக்கப்போன சமயம் சூரிய உதயம் ஆகி வெகு நேரம் ஆகிவிட்டது. வெகு நேரம்வரை தூக்கமே வரவில்லை. நான் கேள்வி பட்ட விஷயங்கள் மூளை நிறைய இருந்தது. இறுதி யில், என் மனதில் அலைமோதிக்கொண் டிருந்த புதிய எண்ணங்கள் என்னை வெளியில் துரத்தின. அந்த நவீன யந்திரத்தைப் பார்க்க நான் ரீஜன்ட் தெருவுக்கு விரைந்து சென்றேன். தற்கொலைக்குச் சமமான, வலிமை பொருந்திய அந்த 'ட்ரோஜன்' குதிரையைச் சந்தோஷ ஆரவாரத்துடன் முதலா ளித்வ சமூகம் மனித சமூகத்திற்குச் சமர்ப்பித்தது. ட்ரோஜன் வாசிகள் தங்கள் நாட்டிற்கு மகிழ்ச்சி யுடன் கொண்டுவந்த மாயக் குதிரை எவ்வாறு அவர்களை முறியடித்ததோ, அதே போன்று, இந்த யந்திரம் முதலாளித்வத்தைச் சர்வ நாசம் செய்யும் என்பது திண்ணம்; முதலாளித்வ சமூக அமைப்பு இடிந்து தகரும் நாள் வந்தே தீரும்.

இந்த மின்சார யந்திரத்தைப் பொதுஜனங் களுக்குக் காட்டிக்கொண் டிருந்த இடத்தை நான் எளிதில் கண்டு பிடித்தேன். ஏனெனில், ஏராளமான ஜனங்கள் கூட்டம் கூட்டமாக அங்கே

கூடியிருந்தனர். முட்டி மோதிக்கொண்டு, நான் அந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். மின்சார யந்திரத்தையும், ரயிலையும் நான் கண்டேன். சுற்றிச் சுற்றி உல்லாசமாக அவை ஓடிக்கொண்டிருந்தன.

1850-ஆம் வருடம் ஜூலை மாத ஆரம்பத்தில் இது நடந்தது.

## புரட்சிக்காரர்களின் குரு

"கற்றுக் குட்டிகளாகிய" எங்களைவிட மூர் ஐந்து அல்லது ஆறு வயது பெரியவர். தாம் பக்குவமடைந்த மனிதர் என்பது மார்க்ஸுக்கு நன்ருகத் தெரியும். எனவே, எங்களை, குறிப்பாக என்னை, பரிசோதனை செய்ய அவர் கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் பயன்படுத்திக்கொண்டார். ஏராளமான புத்தகங்களைப் படித்திருந்தாலும், அற்புதமான ஞாபகசக்தி அவருக்கு இருந்தாலும் எங்களைப் பல கேள்விகள் அவர் கேட்டுத் திக்குமுக்கடாச் செய்தார். "இளைஞர்களாகிய பள்ளி மாணவர்களை" சுழல்கள் நிறைந்த ஆழமான இடத்திற்கு அழைத்துச் சென்று, சொந்த உதாரணத்தின் மூலம் இன்றைய சர்வகலாசாலைகளின் பயனற்ற தன்மையை நிரூபித்துக்காட்டுவதில் அவருக்குக் கரைகடந்த இன்பம்.

அதே சமயத்தில், முறையாக விஷயங்களை அவர் போதித்தார். இரண்டு விதத்தில் - குறுகிய, விசாலமான அர்த்தத்தில் - அவரை எனது குரு என்று துணிந்து கூறலாம். ஒவ்வொரு துறையிலும் எல்லோரும் அவரைப் பின்பற்ற வேண்டும். பொருளாதார சாஸ்திரத்தைப்பற்றி நான் ஒன்றும் சொல்

வதற்கு இல்லை. கொல்லன் தெருவில் யாரும் ஊசி விற்க மாட்டார்களல்லவா? கம்யூனிஸ்டு லீகில் பொருளாதார சாஸ்திர சம்பந்தமாக மார்க்ஸ் நிகழ்த்தின சொற்பொழிகளைப்பற்றி, பிறகு பிரஸ்தாபிப்பேன். மார்க்ஸுக்குப் புராதன பாஷைகளும் நவீன பாஷைகளும் நன்ருகத் தெரியும். நானும் பல பாஷைகள் கற்றவன். அரிஸ்டாட்டில், அல்லது ஆகிலஸ் எழுதின நூல்களிலிருந்து கடினமான வாக்கியங்களை அவர் படிப்பார். அதைப் புரிந்து கொள்ளாமல் நான் விழிப்பதைக் கண்டு சிறு குழந்தைபோல, அவர் ஆனந்தம் அடைவார். ஸ்பெயின் பாஷையை நான் கற்காததற்காக ஒரு நாள் என்னை எவ்வளவு கடுமையாகத் திட்டினுர் தெரியுமா! கண நேரத்தில் மலைபோல் குவிந்திருந்த புத்தகக் குவியலிலிருந்து டான் குக்ஸாட் என்ற நூலை எடுத்து, எனக்கு ஸ்பெயின் பாஷையைக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார். லத்தீன் பாஷைகளின் இலக்கணத்தைப்பற்றி டீஸ் ஒரு நூல் எழுதியிருக்கிருர். அந்த இலக்கண நூலிலுள்ள சில சூத்திரங்களை நான் ஏற்கெனவே அறிவேன். எனவே, மார்க்ஸை ஆசிரியராகக் கொண்ட நான் கல்வியில் தேர்ச்சி பெற்றேன். நான் ஏதாவது தவறு செய்தால், அல்லது மேலே செல்ல முடியாமல் விழித்தால், அவர் எனக்கு உதவி புரிவார். வேறு எல்லா விஷயங்களிலும் சண்டமாருதம்போல் குமுறிக்கொண்டிருப்பவர், கல்வி புகட்டும் விஷயத்தில் மட்டும் அசாதாரண பொறுமை காட்டினுர்! புதிதாக யாராவது வந்தால் போதனை உடனே நின்றுவிடும். நாள் தோறும் பரீட்சை நடக்கும்.

டான் குக்ஸாட்டிலிருந்து, அல்லது வேறு ஸ்பானிய நூல்களிலிருந்து சில வாக்கியங்களை மொழி பெயர்ப்பேன். ஸ்பெயின் பாஷையில் போதிய பாண்டித்தியம் ஏற்படும்வரையில் நான் படித்தேன்.

மார்க்ஸ் பல பாஷைகளைக் கற்ருர். புராதன பாஷைகளைவிட நவீன பாஷைகள்தான் அவருக்கு அதிகம் தெரியும் என்பது உண்மைதான். கிரிம் என்பவர் எழுதிய ஜெர்மானிய இலக்கணத்தை அவர் நன்கு பயின்று இருந்தார். பாஷை நிபுண ஞை என்னைவிட, கிரிம் சகோதரர்கள் எழுதின ஜெர்மானிய அகராதியை அவர் அதிகமாகக் கற்றிருந்தார். ஆங்கிலேயனைப்போல் ஆங்கில பாஷையையும், பிரெஞ்சுக்காரனைப்போல் பிரெஞ்சு பாஷையையும் அவரால் சரளமாக எழுத முடியும். ஆனல், அவரால் இந்தப் பாஷைகளைத் தங்குதடையின்றிப் பேச முடியாது. "நியூயார்க் டிரிபியூன்" என்ற பத்திரிகைக்கு ஆங்கிலத்தில், உயர்ந்த நடையில் கட்டுரைகள் எழுதினர். பிரௌதான் எழுதின "**வறுமையின் தத்துவம்**" என்ற புத்தகத்திற்கு "**தத்துவத்தின் வறுமை**" என்னும் பெயரில் ஒரு புத்தகம் மறுப்பாக எழுதியிருக்கிருர். இந்த நூலை பிரெஞ்சு பாஷையில் எழுதினர். இதைப் பிரசுரிக்குமுன், கையெழுத்துப் பிரதியைப் படித்துப் பார்க்க ஒரு நண்பரிடம் கொடுத்தார். திருத்துவதற்கு ஒன்றுமில்லை என்ருர் அந்த பிரெஞ்சு நண்பர்.

பாஷையின் அடிப்படையான தன்மைகளை மார்க்ஸ் அறிந்திருந்தமையாலும், அதன் பிறப்பு, வளர்ச்சி, அமைப்பு ஆகியவற்றைப்பற்றி அவர்

நன்கு தெரிந்துகொண் டிருந்தமையாலும் எந்தப் பாஷையையும் அவரால் எளிதில் கற்றுக்கொள்ள முடியும்; முடிந்தது. லண்டனில் இருக்கும் பொழுது அவர் ரஷ்ய பாஷையைக் கற்ருர்; கிரிமியா யுத்தம் நடைபெற்ற காலத்தில் துருக்கி பாஷையையும் அராபிய மொழியையும் கற்க விரும்பினுர். ஆனுல், இந்த எண்ணம் நிறைவேற வில்லை. ஒரு பாஷையைக் கற்க விரும்புகிறவன், அந்த பாஷையில் உள்ள பலதிறப்பட்ட நூல்களை யும் படிப்பது அவசியமாகும் என்று அவர் அடிக்கடி வற்புறுத்திக் கூறுவார். மார்க்ஸுக்கு அசாதா ரணமான ஞாபகசக்தி இருந்ததால், ஒரு தரம் படித்தது அவர் மனதைவிட்டு அகலவே அகலாது. ஞாபகசக்தி உள்ளவன் படிப்பதால் பயன் பெறு வான்; தான் படித்த நூல்களிலுள்ள சொற்களின் பொருளையும் சொற்ருெடர்களையும் அவன் எளிதில் கற்பான்.

1850-51-ஆம் வருடங்களில் பொருளாதார சாஸ்திரத்தைப்பற்றி மார்க்ஸ் பல சொற்பொழிவு கள் நிகழ்த்தினுர். அரை மனதுடன் மார்க்ஸ் இதற்கு இசைந்தார். முதலில், ஒருசில நண்பர் களுக்கு மாத்திரம் வகுப்புகள் நடத்தினுர். இந்த வகுப்பில் ஏனையவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தினேம். எங் கள் வேண்டுகோளை மார்க்ஸ் அங்கீகரித்தார். இந்த வகுப்பில் பங்கெடுத்துக்கொண்டவர்கள், தங்களுக்கு இத்தகைய அரிய சந்தர்ப்பம் கிடைத் ததை எண்ணி மகிழ்ந்தார்கள். இந்தப் பிரசங்கங் களில் பொருளாதார சாஸ்திரத்தின் அடிப்படை

யான தமது தத்துவங்களை அவர் எங்களுக்கு விளக்கினர். இவைதான் பிறகு "மூலதனம்" என்ற பெயரில் புத்தகமாக வந்துள்ளது. அப்பொழுது கிரேட் வின்ட்மில் தெருவிலிருந்த கம்யூனிஸ்டு லீக், அல்லது கம்யூனிஸ்டுத் தொழிலாளர்களின் கல்வி மன்றத்தின் காரியாலயத்தில் நடந்த மாபெரும் கூட்டத்தில் மார்க்ஸ் சொற்பொழிவாற்றினர். தமது கொள்கையை ஜனங்கள் ஏற்கும்படி பேசும் திறமை தமக்கு உண்டு என்பதை மார்க்ஸ் அன்று நிரூபித்துக் காட்டினர். இரண்டு வருடங்களுக்கு முன் அதே இடத்தில் நடந்த கூட்டத்தில்தான் "**கம்யூனிஸ்ட் மானிபேஸ்டோ**" பிரதிநிதிகளால் அங்கீகரிக்கப்பட்டது. விஞ்ஞான சாஸ்திரத்தைத் திரித்துக் கூறுவதையும், நுணுக்கமாக ஆராயாமல் அதை உருக்குலைப்பதையும், அதை உற்சாகம் ஊட்டமுடியாத நடைப்பிணமாக்குவதையும் மார்க்ஸ் வன்மையாகக் கண்டித்தார். தெளிவாக, பசுமரத்தாணிபோல், மனதில் பதியும்படி விஷயங்களை விளக்கும் பேராற்றல் அவருக்கு உண்டு. பக்குவம் அடைந்த, தெளிந்த எண்ணத்திலிருந்துதான் தெளிவான பேச்சுப் பிறக்கும். தமது கருத்தைத் தெளிவாக எடுத்துச்சொல்ல வேண்டுமானல், சிந்தனை குழப்பமற்றதாக இருக்க வேண்டும்.

மார்க்ஸ் முறையாக, ஒழுங்காக வேலை செய்வார். முதலில் ஒரு சிறிய வாசகத்தை வாசிப்பார்; பிறகு அதை விரிவாக விளக்குவார். தொழிலாளர்களுக்கு விளங்காத வார்த்தைகளைக் கூடுமான வரையில் உபயோகிக்க மாட்டார். கேள்விகள்

கேட்கும்படி அவர் மாணவர்களைத் தூண்டுவார். ஒருவரும் கேள்வி கேட்கவில்லையென்றால், தாமே இந்த வேலையில் ஈடுபடுவார். ஓர் ஆசிரியருக்கு இருக்கும் பேராற்றலுடன் அவர் மாணவர்களின் தவறுகளைக் கண்டுபிடிப்பார். மார்க்ஸின் பேராற்றலை நான் ஏற்றிப் போற்றினேன். புருஸ்ஸல்ஸ் தொழிலாளர் யூனியனில் அரசியல் பொருளாதார சாஸ்திரத்தைப்பற்றி அவர் பல சொற்பொழிவுகள் முன்பு நிகழ்த்தினதை இப்பொழுது தெரிந்து கொண்டேன். எது எப்படியானாலும், ஒரு உபாத்தியாயருக்கு இருக்க வேண்டிய சகல குணங்களும் அவரிடம் குடிகொண்டிருந்தன. வகுப்புகள் நடத்தும்பொழுது அவர் கறுப்புப் பலகையை உபயோகிப்பார். "மூலதனத்தின்" முற்பகுதியிலுள்ள சூத்திரங்களை நாங்கள் அறிவோம். அவைகளை முதலில் கறுப்புப் பலகையில் எழுதுவார்; பிறகு அவற்றைப்பற்றி விரிவாக வியாக்கியானம் செய்வார்.

இந்த வகுப்பு சுமார் ஆறு மாத காலம்வரை நடந்தது. இது பெரிதும் வருந்தத்தக்கது. கம்யூனிஸ்டு லீகுக்குப் பலர் வந்தார்கள்; அவர்களில் பலரை மார்க்ஸ் அவ்வளவாக விரும்பவில்லை.

சொந்த நாட்டைவிட்டு, அயல் நாடுகளில் குடியேறி வந்தவர்களின் தொகை வரவரக் குறைந்தது; எனவே, லீகின் எண்ணிக்கையும் குறையலாயிற்று. லீகிலும், குறுகிய மனப்பான்மை தலைதூக்கலாயிற்று. வெட்லிங், காபட் ஆகியவர்களின் சீடாகள் திரும்பவும் முன்னணிக்குவரத் துவங்கினார்கள். இத்தகைய சின்னஞ்சிறு கூட்டம், மார்க்ஸுக்குச்

சிறு துரும்பு போன்றது. இந்தப் பழைய நூலாம் படையை ஓட்டடை அடிப்பதில் பொன்னுன காலத்தை விரையம் செய்வதைவிட, வேறு முக்கிய மான அலுவல்களில் ஈடுபட விரும்பினுர். ஆகவே, கம்யூனிஸ்டு லீகைவிட்டு விலகி நின்ருர்.

அனேகமாக, பண்டிதரைப்போன்று பரிசுத்த மாகப் பேசுவார். மேற்கு ஹெஸ்ஸியான் பாஷை என்னிடம் விடாப்பிடியாக ஓட்டிக்கொண்டிருந் தது; அல்லது, நான் அதைப் பிடிவாதமாகப் பற்றிக்கொண் டிருந்தேன் என்றும் சொல்லலாம். இதன் பலனுக, ஏராளமான அறிவுரைகளை நான் மார்க்ஸிடம் இருந்து கேட்க நேர்ந்தது.

இத்தகைய அற்ப விஷயங்களைப்பற்றி யெல் லாம் நான் ஏன் குறிப்பிடுகிறேனென்ருல், "கற்றுக் குட்டிகளாகிய" எங்களுக்கு மார்க்ஸ் எவ்வளவு தூரம் சகல விஷயங்களிலும் குருவாக விளங்கினுர் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவேதான்.

ஆம், இந்த உண்மை, வேறொரு வழியிலும் நிரூபணமாயிற்று. அவர் எங்களிடமிருந்து பல விஷயங்களை அறிந்துகொள்ள முயன்ருர். எங்களது அறிவில் ஏதேனும் குற்றங்குறைகள் தென்பட்டால் அதாவது விஷயங்களைப் புரிந்துகொள்ளாமல் நாங்கள் உளறிக்கொட்டினுல் - அதை எங்களுக்கு எடுத்துக்காட்டித் திருத்த முயல்வார். வெறும் உபதேச மல்ல. உருப்படியான வழி வகைகளை அவரே வகுத்துக் கொடுப்பார். அவரோடு யாரே னும் தனிமையாக இருந்தால், அவர்களை முறை யாகப் பரிசோதனை செய்வார். பரீட்சைகள் சர்வ சாதர்ரணமானவையாய் இரா. கடுமையாகவே

இருக்கும். ஆதாரமில்லாமல், எதையேனும் கூறி மார்க்ஸை ஏமாற்றிவிட முடியாது. சிரமப்பட்டு, அறிவு புகட்டுவதில் பலன் கிடைக்காது என்று கருதினால், உடனே நட்பும் அதோடு முடிந்துவிடும். அவரை ஆசிரியராகப் பெற்றதுபற்றி எங்களுக்கு அளவு கடந்த பெருமித உணர்ச்சி உண்டு. அவரோடு இருக்கும்பொழுது, அவரிடமிருந்து நான் ஏதேனும் விஷயங்களைக் கற்றுக்கொண்டே இருப்பது வழக்கம்; சும்மா இருந்ததே கிடையாது......

அச்சமயத்தில்; சோஷலிஸத்தை ஏற்றுக் கொண்டவர்கள் தொழிலாளர் வர்க்கத்தில் ஒரு சிறு கூட்டத்தினரே ஆவர்; இவர்களில்கூட மார்க்ஸின் "கம்யூனிஸ்டு அறிக்கை" போதித்தான விஞ்ஞான ரீதியான சோஷலிஸத்தை ஏற்றுக் கொண்டவர்கள் ஒருசிலரே யாவர். தொழிலாளர்களிடையே அரசியலில் விழிப்பு ஏற்பட்டிருந்தது உண்மையே; ஆனால், 1848-ம் வருடத்திற்கு முன்பும் பின்பும் நடந்த இயக்கத்தில் மல்கிக் கிடந்த மானசீக ஜனநாயகக் கொள்கைகளிலும், வார்த்தைகளிலும் அவர்கள் அதிக நம்பிக்கை வைத்திருந்தார்கள். பொதுஜனங்கள் கைகொட்டி ஆர்ப்பரிப்பதும், பொதுஜனங்களிடையே பிராபல்யமடைந்திருப்பதும் ஒருவன் தவறான பாதையில் செல்கிறான் என்பதைத்தான் சுட்டிக் காட்டுகின்றன என்று மார்க்ஸ் அபிப்பிராயப்பட்டார். "உன்னுடைய பாதையில் நீ சென்றுகொண்டிரு; தங்களுக்கு விருப்பமானதை ஜனங்களைச் சொல்லவிடு" என்ற தாந்தேயின் அமுத வாக்குகளை

மார்க்ஸ் அடிக்கடி மேற்கோளாக எடுத்துக் கூறுவர்.

இந்த வார்த்தைகளை எத்தனை தடவை சொல்லி யிருக்கிறார் தெரியுமா? "மூலதனம்" என்ற புத்தகத்திற்கு எழுதிய முகவுரையின் இறுதியில்கூட, இந்த மேற்கோளைக் குறிப்பிட்டிருக்கிறார். அடியும், உதையும், கொசுக் கடியும், மூட்டைப் பூச்சிக் கடியும், யாவரையும் பாதித்தன. மார்க்ஸும் இதற்கு விலக்கு விதியல்ல. மார்க்ஸ் தமது பாதையில் செல்லும்பொழுது, சகல திசைகளிலிருந்தும் அவரைப் பலர் வன்மையாகத் தாக்கினார்கள். தினசரி உணவுக்கு என் செய்வது என்ற கவலை அவரைப் பிய்த்துத் தின்றது. பலர் அவரைச் சந்தேகப்பட்டார்கள். எந்தத் தொழிலாளர் வர்க்கத்தின் விடுதலைக்காக அல்லும் பகலும் சலியாது உழைத்து, ஆயுதங்களைத் தயார் செய்து வந்தாரோ, அதே தொழிலாளர்கள் அவரைப் பலமாக எதிர்த்தனர். இத்துடன் நிற்காமல், வானளாவப் பேசி "வெத்து வேட்டு" விடும் "காற்றுப் பைகளை" கண்மூடித்தனமாகப் பின்பற்றி வந்தார்கள்; பாசாங்கு செய்துவரும் துரோகிகளையும் பரம வைரிகளையும் ஆதரித்தார்கள். உண்மையான பாட்டாளியின் சிறிய அறையில், சர்வ சாதாரணமான எளிய வீட்டில், தனிமையாக ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார் மார்க்ஸ். அங்குதான் தைரியத்தையும் புத்துயிரையும் அவர் பெற்றிருக்க வேண்டும்.

தம்மைத் தாமே வழிதவறிப் போகும்படி, திக்கற்ற நிலைமையில் அமிழ்ந்து போகும்படிவிட

வில்லை. ஆயிரத்து ஒன்று என்ற அராபியக் கதைகளிலுள்ள அரசகுமாரன் வெற்றியைக் காணமுடியாது போயிற்று; வாகைமாலை சூட முடியாது-போயிற்று. ஏனெனில், ஆரவாரமும் தம்மைச் சுற்றியிருந்த பயங்கரமான காட்சிகளும் அவரைத் திரும்பிப் பார்க்கும்படி தூண்டின. அவனைப் போலல்ல மார்க்ஸ். எப்பொழுதும் முன்னேக்கி நடந்தார். தமது கண்கள், எப்பொழுதும் முன்னுல் பிரகாசித்துக்கொண்டிருக்கும் தமது சிறு இலக்கின்மீது பதிந்திருந்தன. "ஜனங்கள் என்ன வேண்டுமானுலும் சொல்லட்டும்" என்ருர். "உலகமே தலைகீழாகக் கவிழ்ந்தாலும்கூட", அவர் தமது பாதையில் முன்னேறிச் செல்வதை ஒருவராலும் தடுத்து நிறுத்த முடியாது. வெற்றி கிடைத்தது. ஆனுல், வெற்றிப் பதக்கம் கிடைக்கவில்லை.

சர்வ சக்தி வாய்ந்த மரணம் அவரை வெட்டி விழ்த்து முன்பு, தாம் விதைத்த விதைகள் தளிர் விட்டு தழைத்தோங்கியதையும், அறிவாளால் அறுத்தெடுக்கக் கூடிய நிலைமைக்குக் கதிர்கள் முற்றிவருவதையும் கண்கூடாகக் காணும்வரை உயிரோடிருந்தார். ஆம், வெற்றி அவரதுதான்; ஆனுல் வெற்றியின் பலன் நமக்குக் கிடைத்திருக்கிறது.

அவர் செல்வாக்கை வெறுத்ததோடு நிற்கவில்லை; பொதுஜனங்களிடையே செல்வாக்கைத் தேடித் திரிவதையும் கண்டு அவர் உக்ரமாகக் கோபமடைந்தார். யாவரையும் திருப்திப்படுத்தும் வண்ணம் இனிமையாகப் பேசுகிறவர்களை அவர் வேப்பங்காய்போல் வெறுத்தார். விஷயம்

கொஞ்சமேனும் இல்லாமல் வெறும் அடுக்கு வார்த்தைகளைச் சரமாரியாகக் கொட்டி அளக்கிற வர்களை அவர் வன்மையாகக் கண்டித்தார். யாரை யாவது கடுமையாகக் குறை கூறுவதானால் "அடுக்கு வார்த்தைகள் கொட்டி வெத்து வேட்டு விடுகிறவன்" என்று கூறியே, அவர்களைக் கண்டிப் பார். யாரேனும் ஒருவன் இந்த ரகத்தைச் சேர்ந் தவன் என்று முடிவுகட்டிவிட்டால், அத்துடன் அவனுடைய தொடர்பும் முடிந்துவிடும்; அவனைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார். "தர்க்கரீதியாக, காரண காரியங்களை ஆராய்ந்து வைத்திருக்க வேண்டும்; தெளிவாக விஷயங்களை எடுத்துரைக்க வேண்டும்" என்று "கற்றுக் குட்டிகளாகிய" எங்களுக்கு அடிக்கடி உபதேசித்து வந்ததோடு, இந்த ரீதியில் பழகும்படியும் வற்புறுத்தி வந்தார்.

அச் சமயத்தில், பிரிட்டிஷ் மியூசியத்திற்கு என அற்புதமான வாசகசாலை யொன்றைக் கட்டி முடித்தார்கள். கணக்கிலடங்காத ஏராளமான புத்தகங்கள் அந்த வாசகசாலையில் உண்டு. தினசரி அங்கு சென்று, பல புத்தகங்களைப் படித்து வந் தார். "அங்கு சென்று படித்து, பல விஷயங்களை அறிந்துகொள்ளுங்கள்" என்று கூறி, எங்களையும் வாசகசாலைக்குச் செல்லும்படி தூண்டிக்கொண்டே இருப்பார். இத்துடன் எங்களுக்கு முன் உதாரண மாகவும் அவர் விளங்கினார். ஓய்வொழிச்சலின்றி சதா சர்வ காலமும் செயலாற்றிக்கொண்டே யிருக் கும் இந்தக் கல்விமானைக் கண்டவுடனேயே, எங் களுக்கும் செயலாற்ற வேண்டும் என்ற உணர்ச்சி ஏற்பட்டுவிடும்.

சொந்த நாட்டிலிருந்து துரத்தப்பட்டு, வெளி நாடுகளில் வாழ்ந்துவந்த ஏனையோர், உலகத்தையே கவிழ்க்கத் திட்டங்கள் வகுத்துக்கொண் டிருந்தார்கள்; ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மாலையிலும் "நாளைக்குப் புரட்சி ஆரம்பமாகும்" என்ற போதையில் மூழ்கிக் கிடந்தார்கள். "கொள்ளி வைப்பவர்கள்", "கொள்ளைக்காரர்கள்", "மனித சமுதாயத்தின் கீழ்" என்று நிந்திக்கப்பட்ட நாங்களோ, பிரிட்டிஷ் மியூஸியத்தில் உட்கார்ந்துகொண்டு, எங்களுடைய அறிவை அபிவிருத்தி செய்துவந்தோம். எதிர்காலத்தில் நடத்தப் போகும் போராட்டத்திற்கு வேண்டிய குண்டுகளையும் தளவாடங்களையும் தயார்செய்து கொண்டிருந்தோம்.

பசியைத் தணித்துக்கொள்ளப் போதிய உணவு பெரும்பாலும் கிடைக்காது. ஆயினும் என்ன, மியூஸியத்திற்குப் போவதைப் பசி தடுத்து நிறுத்தவில்லை. அங்கு சுகமாக உட்காருவதற்கு நாற்காலிகள் இருந்தன; குளிர் காலத்தில், குளிரைப்போக்கக் கனலும் இருந்தது. "வீடு" என்று சொல்லக் கூடிய தங்குமிடம் யாருக்காவது இருந்தால்,—அதை வீடு என்று சொல்லவே முடியாது—அதில் இத்தகைய வசதிகள் கிடையவே கிடையாது. ரொம்பவும் பொல்லாத, கடுமையான உபாத்தியாயர் மார்க்ஸ். பிறரைப் படிக்கும்படி நிர்ப்பந்தித்ததோடு நிற்காமல், பிறர் படித்தார்களா இல்லையா என்பதைத் தாமே கண்காணித்து வந்தார்.

உபாத்தியாயர் என்ற நிலையில், மாணவர்களை அதைரியப்படுத்தாமல் அதே சமயத்தில்

கண்டிப்பாக நடந்துகொள்ளும் அபூர்வ குணம் படைத்தவர் மார்க்ஸ்.

ஒரு உபாத்தியாயர் என்ற நிலையில் மார்க்ஸிடம் மற்றொரு அற்புதமான குணமும் இருந்தது. ஒவ்வொருவரும் தம்மைத் தாமேபரிசீலனை செய்து, அதை நடைமுறையில் கடைப்பிடித்து ஒழுக வேண்டு மென்று மார்க்ஸ் பெரிதும் வற்புறுத்துவார். இதுவரை தமக்குக் கிடைத்த வெற்றியோடு மட்டும் போது மென்று ஒருவன் திருப்தியடைந்துவிடக் கூடாது என்று மார்க்ஸ் உபதேசித்தார். கஷ்டப்பட்டு விஷய ஞானத்தை அபிவிருத்தி செய்யாமல் வெத்துவேட்டு விடுகிற சுகஜீவிகளைக் கேலி செய்வது என்ற சாட்டையால், அபாரமாகத் தாக்கிவந்தார்.

## மார்க்ஸின் நடை

சிலர் மார்க்ஸுக்குத் திறமையாக எழுதும் ஆற்றல் கிடையா தென்றும், வேறு சிலர் அவரது நடை படுமோசமான தென்றும் குறைகூறினார்கள். நடையென்றால் என்ன என்பதை அறியாத ஆஷாடபூதிகள்தான் இவ்வாறு பிதற்றினார்கள். அதாவது, மார்க்ஸை அறிந்துகொள்ளாதவர்களும், அறியும் சக்தி இல்லாதவர்களும்—விஞ்ஞான சாஸ்திரத்தின் மனோ எழுச்சிகளின் சிகரத்திற்கு மார்க்ஸின் அறிவு வேகமாகத் தாவும்பொழுது அதைப் பின் தொடரச் சக்தியற்றவர்களும், மனித சமூகத்தின் சீர்கெட்ட, துன்பம் நிறைந்த கொடிய கடலுக்கடியில், அடித்தளம் வரையிலும் மார்க்ஸின் சிந்தனை மூழ்கிச் செல்லும்பொழுது அதைப் பின்தொடர

முடியாதவர்களும்தான்—இனிமையாகப் பேசுகிற வர்களும் வெற்றுரை வீரர்களும்தான்—மார்க்ஸின் நடையைப் பழித்தார்கள். "நடை ஆசிரியரைப் பிரதிபலிக்கிறது" என்று பப்பன் கூறுவது உண்மையானல், அது மார்க்ஸுக்கு முற்றும் பொருத்த மானதுதான். மார்க்ஸின் நடைதான் மார்க்ஸ். அவர் நேர்மையானவர்; சத்தியத்தைத் தவிர வேறு கோட்பாட்டை அறியாதவர். மிகச் சிர மப்பட்டு உருவாக்கின சித்தாந்தம்—தம்மால் மனப்பூர்வமாகப் போற்றப்படும் சித்தாந்தம்—தவ றுடையது என்று தெரிந்தால், அதை உடனே நிராகரிக்கும் ஆற்றல் பெற்றவர். இத்தகைய மகோன்னதமான மனிதரின் பிரதிபிம்பம் அவர் எழுத்தில் நிச்சயமாகப் பிரதிபலிக்கும். கபடத் தையோ, பாசாங்கையோ, எல்லாம் தெரிந்தவர் என்ற மனோபாவத்தையோ அவர் அறியார். தீய வழிகளில் பிரவேசிக்கும் ஆற்றலும் அவருக் கில்லை. இந்தக் குணங்களை அவர் எழுத்துக்களில் காண லாம். ஆனல், ஒன்று மாத்திரம் உண்மை. நாளு விதமான, விரிந்த, பல்வேறு குணங்கள் படைத்த ஒருவர் நடை ஒரே விதமானதாகவும், வித்தியாச மில்லாததாகவும், சலிப்பற்றதாகவும் இருக்க முடி யாது. குறுகிய மனப்பான்மை படைத்தவர்களும் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளாதவர்களும் தான் ஒரே மாதிரியாக எழுத முடியும். "மூல தன"த்திலும், "பதினெட்டாவது புரூமரி"லும், "ஹெர்வாக்டி"லும் நாம் மூன்று மார்க்ஸ்களைப் பார்க்கிறோம். இவ்வாறு வெவ்வேறு ரூபத்தில் மார்க்ஸ் தோன்றினாலும் மார்க்ஸ் அதே மார்க்ஸ்

தான்; திருமூர்த்திகளாகத் தோன்றினாலும் மார்க்ஸ் மார்க்ஸ்தான்; ஒரு மகா புருஷர், வெவ்வேறு துறைகளில், பல்வேறு துறைகளில் தோன்றுகிறார்—அவ்வளவுதான். "மூலதன"த்தின் நடை கடினமானது என்பது உண்மைதான்; அந்த நடை எளிதில் புரியாது. ஆயினும், அதில் அடங்கியிருக்கும் விஷயங்கள் அவ்வளவு எளிதானதா? நடை ஆசிரியரை மாத்திரம் பிரதிபலிக்க வில்லை? அதில் பொதிந்து கிடக்கும் விஷயத்தையும் அது, பிரதி பலிக்கிறது. எனவே, விஷயத்திற்கு உகந்த நடை இருக்க வேண்டும். விஞ்ஞான சாஸ்திரத்திற்கு ராஜ பாட்டை கிடையாது. தலைசிறந்த ஆசிரியர் இருந்தால்கூட மாணவன் சிரமப்பட்டு முன்னேற வேண்டும். "மூலதன"த்தின் நடை கடினமானது, புரிந்து கொள்ள முடியாதது, கரடு முரடானது என்று புகார் செய்வது, சிந்திக்க மறுப்பதை, அல்லது சிந்திக்கும் சக்தியின்மையை ஒப்புக்கொள்வதாகும்.

"பதினெட்டாவது புரூமர்" படித்துப் புரிந்துகொள்ள முடியாத புத்தகமா? இலக்கை நோக்கிப் பாய்ந்து, எதிரியின் சதையில் பாயும் அம்பைப் பார்க்க முடியாதா? ஒரு திறமை சாலி குறிபார்த்து எறியும் ஈட்டி, எதிரியின் நெஞ்சில் பாய்வதைப் பார்க்க முடியாதா? "பதினெட்டாவது புரூமரில்" உள்ள வார்த்தைகள் அம்பையும், ஈட்டியையும் போன்றவை; எதிரியைக் குத்திக் கொலை செய்கிற நடை அது. கனல் கக்கும் வார்த்தைகளில் வெறுப்பையும், சர்வ நாசம் செய்கிற நடையில் அருவருப்பையும், உன்னதமான வார்த்தைகளில் சுதந்திர ஆர்வத்தையும்

யாராவது இதுவரையிலும் தலைசிறந்த நடையில் எழுதியிருக்கிறார்கள் என்றால், அதை "பதினெட்டாவது புருமயரில் தான்" காண முடியும். **டாஸிடஸின்** உக்ரமான கோபத்தையும், **ஜுவேனலின்** குத்திக்கொல்வது போன்ற சரள காவியத்தையும் **தாந்தேயின்** ரௌத்ராகாரமான சினத்தையும் அதில் பரக்கக் காணலாம். ரோமானியர்கள் குத்துவதற்கும், எழுதுவதற்கும் உபயோகித்த "ஸ்டிலஸ்" என்ற கூரிய எஃகு ஆயுதத்தைப்போல் இருக்கிறது மார்க்ஸின் நடை. எதிரியின் ஹிருதயத்தைக் குறிபார்த்து குத்துவதற்காக உபயோகித்த கூரிய வாள் போன்றது அவரது நடை.

நகைச்சுவை என்ற ஆயுதச்சாலைக்கு வேண்டிய பொருள்களை அளிக்கும் வல்லமை பெற்ற சுரங்கத்தை **பால்ஸடாபிடம்** ஷேக்ஸ்பியர் கண்டுபிடித்தார்; அதேபோல், **ஹெர்வாக்டிடம்** ஹாஸ்யமும், குதூகலமும் மலிந்துகிடந்தன. போதும், இனிமேல், மார்க்ஸின் நடையைப்பற்றி எழுதப் போவதில்லை. மார்க்ஸின் நடை மார்க்ஸின் நடைதான். ஏராளமான விஷயங்களை மிகமிகச் சுருக்கமாக எழுதியிருக்கிறார் என்று குறைகூறுகிறார்கள்; ஆனால், மார்க்ஸின் பேராற்றல் அதுதான் என்பதை அறியார் போலும்!

தெளிவாகக் கருத்துக்களை எடுத்துரைக்கும் திறமைக்கு, மார்க்ஸ் அசாதாரணமான மதிப்புக் கொடுத்தார். **கோத்தே, லெஸ்ஸிங், ஷேக்ஸ்பியர், தாந்தே, ஸேர்வாண்டேஸ்** ஆகியவர்களின் நூல்களை அவர் தினசரி படித்துவந்தார். இத்தகைய பேராசிரியர்களின் நூல்களைத்தான் அவர்

பொறுக்கியெடுத்தார். தெளிவாக, பிறர் புரிந்து கொள்ளும் வண்ணம் பேச அவர் பெரிதும் சிரமப் பட்டுப் பழகினர்,

விஷயங்களைத் தெளிவாக எடுத்துரைப்பதில் தலைசிறந்தவர். அன்னிய மொழிச் சொற்களை அனுவசியமாக உபயோகிப்பதை வெறுத்தார். ஆயினும், தேவையில்லாத இடத்தில், அன்னியச் சொற்களை அவரே கையாண்டிருந்தால், நீண்ட காலமாக அன்னிய நாடுகளில் - முக்கியமாக இங்கிலாந்தில் - வசித்து வந்ததே அதற்குக் காரணம் என்பதை மறந்துவிடக் கூடாது. மார்க்ஸ் தமது வாழ்நாளில் மூன்றில் இரண்டு பாகத்தை அன்னிய் நாடுகளிலேதான் கழித்தார். ஆயினும் தமது தாய் பாஷையில் - ஜெர்மானிய பாஷையில் - நிபுணர். வியக்கத்தக்க முறையில், உயர்ந்த நடையில் ஜெர்மானிய பாஷையில் எழுதும் ஆற்றல் பெற்றிருந்தார். ஜெர்மானிய பாஷையைச் சிருஷ்டித்துவந்த ஜெர்மானிய பண்டிதர்களுக்கு அவர் மாபெரும் தொண்டு புரிந்துள்ளார்.

## அரசியல்வாதி, குரு, மனிதர்

அரசியலைக் கிள்ளுக் கீரையாகக் கருதவில்லை மார்க்ஸ்; ஆராய்ந்து கற்கவேண்டிய ஒரு விஷயம் என்பது அவர் தீர்மானம். விஷயஞான மில்லாத வெறும் அரசியல் பேச்சுக்களையும், பேச்சாளர்களையும் விஷம்போல் வெறுத்தார். இந்த அறிவு சூன்யங்களிடமிருந்து அறிவீனத்தைத் தவிர வேறு எதை எதிர்பார்க்க முடியும்? மனித சமாஜத்திற்குள்ளும், இயற்கைக்குள்ளும் செய

லாற்றிக்கொண் டிருக்கும் சக்திகளின் சிருஷ்டிதான் "சரித்திரம்' ; மனித சமாஜத்தின் சிந்தனையின் மனோ எழுச்சியின், தேவைகளின், சிருஷ்டிதான் "சரித்திரம்." "காலம்" என்ற தறியில் நூற்கப் பட்டும் கோடான கோடி மூலசக்திகளின் அறிவு தான் தத்துவரீதியாக "அரசியல்." இந்த அறிவு நிர்ணயிக்கும் செயல்தான் அனுஷ்டான ரீதியில் "அரசியல்". எனவே, அரசியல் என்பது, தத்துவ ரீதியான, அனுஷ்டான ரீதியான ஒரு சாஸ்திரம்.

ஒரே மாதிரியான, மலடுதட்டிய ஒரு சில சொற்றொடர்களை உபயோகித்து, சகல முக்கிய மான விஷயங்களுக்கும் தீர்ப்புக்கூறிவந்த அறிவு சூன்யங்களை நினைத்த மாத்திரத்தில், மார்க்ஸுக்குக் கோபம் பொங்கியெழும். இந்தப் பேர்வழிகள் தான், குழப்பம் நிறைந்த கருத்துக்களையும், புள்ளி விவரங்களையும், சொந்த ஆசைகளையும் ஆதார மாகக்கொண்டு, சிற்றுண்டிசாலை, பத்திரிகைகள், பொதுக்கூட்டங்கள், பார்லிமெண்டுகள் ஆகிய இடங்களில் உலகத்தின் கதியை நிர்ணயித்து வந் தார்கள், அதிர்ஷ்டவசமாக, உலகம் இவர்களைக் கொஞ்சமேனும் பொருட்படுத்த வில்லை. இந்த அறிவு சூன்யங்களின் கும்பலில், பிரசித்திபெற்ற, வானளாவப் புகழப்பட்ட, "மகா புருஷர்களும்" இருந்தார்கள்.

மார்க்ஸ் காரண காரியமின்றிக் குறை கூற வில்லை. ஆதாரத்துடன் உதாரணங்களையும் கொடுத்திருக்கிறார். முக்கியமாக, சமீபத்தில் பிரான்ஸில் நடந்த பல சம்பவங்களைப்பற்றியும், நெப்போலியன் திடீரென அரசியல் அதிகாரத்தைக்

கைப்பற்றியதுபற்றியும் எழுதிய கட்டுரைகளிலும் "நியூயார்க் டிரிபியூன்" என்ற பத்திரிகைக்கு எழுதிய கடிதங்களிலும் அரசியல்ரீதியில் சரித்திரத்தை எவ்வாறு எழுதுவது என்பதற்குப் போற்றுதற்குரிய முன்உதாரணங்களைக் காணலாம்.

இதோ, ஒரு விஷயம் எனது ஞாபகத்திற்கு வருகிறது. நெப்போலியன் போனபார்ட் திடீரென அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியது பற்றி, "பதினெட்டாவது புரூமயர்" என்ற புத்தகத்தில் மார்க்ஸும் எழுதியிருக்கிறார். கதைகள் எழுதுகிறவரும், வார்த்தைகளைச் சரளமாக அடுக்கி எழுதுகிறவரும், பிரன்சு ஆசிரியர்களில் தலை சிறந்தவருமான விக்டர் ஹியூகோவும் இதே விஷயத்தை அடிப்படையாகக்கொண்டு ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். இரண்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள்! என்ன வித்தியாசம்! ஒரு புறத்தில் வெறும் சொற்றொடர்கள்; ஆம், சொற்றொடர்கள் மயம். மற்றொரு புறத்தில், புள்ளிவிவரங்களும் உண்மைகளும் கோர்வையாக இருக்கின்றன. விஞ்ஞான சாஸ்திரத்தையும், அரசியலையும் அமைதியாக ஆராய்ச்சி செய்த மனிதர் கடும் கோபம் அடைகிறார். ஆனால், கோபம் அவர் அறிவைத் திரையிட்டுமூட வில்லை. காய்தல் உவத்தலின்றி, அவர் பல விஷயங்களை அலசி அலசி ஆராய்ந்தார்.

ஒரு புறத்தில் நுனிப் புல் மேய்வதுபோன்ற, மேலே படிந்திருக்கும் நுரையைப் போன்ற, பரிதாபகரமான சொல் அலங்காரம்; பிரகாசமான

வர்ணனைகள். மற்றொரு புறம் குறிபார்த்து எய்த அம்புகளைப் போன்ற வார்த்தைகள்; ஆதார பூர்வ மான உண்மைகள்; பசுமரத்தாணிபோல் படிப் போர் மனதில் பதியும் விஷயங்கள். ஆத்திரங் கொண்ட எழுத்தல்ல; ஆனால், உண்மையை உறுதிப்படுத்தும் எழுத்து. யதார்த்த நிலையைப் படம் பிடித்துக்காட்டும் நடை. விக்டர் ஹியூகோ வின் "சிறிய நெப்போலியன்" என்னும் நூல் பத்துப் பதிப்புகள் வெளிவந்தன. ஆனால், இன்று அந்த நூலை மக்கள் மறந்துவிட்டார்கள். மார்க் ஸின் "பதினெட்டாவது புரூமர்" என்னும் நூல் சிரஞ்சீவத்வம் பெற்றது; ஆயிரம் வருடங்களுக் குப் பிறகுகூட, ஜனங்கள் இந்த நூலை வியப்புடன் படிப்பார்கள். விக்டர் ஹியூகோவின் "சிறிய நெப்போலியன்" என்னும் நூல் வாணவேடிக்கை போன்றது; ஆனால், மார்க்ஸின் "பதினெட்டாவது புரூமர்" சரித்திர சம்பந்தமான நூல். மனித சமூகத்தின் சரித்திராசிரியர்களுக்கு—எதிர்காலத் தில் இந்தச் சரித்திரத்தைத் தவிர வேறு சரித்திரம் இருக்க முடியாது—தூசிடைடின் பிலோபொனீ ஷியாவின் யுத்த சரித்திரத்தைப் போன்று ஒரு இன்றியமையாத சரித்திர நூலாக இருக்கும்.

வேறொரு சந்தர்ப்பத்தில் நான் கூறியதைப் போல், மார்க்ஸ் இங்கிலாந்தில் வசித்ததால் அவர் அறிவு விரிவடைந்தது. பத்தொன்பதாவது நூற் றாண்டின் முற் பாதிவரை, ஜெர்மனி, பொருளா தாரத் துறையில் அபிவிருத்தி அடையவில்லை. அந் தச் சூழ்நிலையில் வசித்தால் முதலாளித்வ உற்பத்தி முறையின் தன்மையைத் தெளிவாக, பரிபூரண

மாக அறியமுடியாது; முதலாளித்வப் பொருளாதார சாஸ்திரத்தை அலசி அலசி ஆராய்ந்திருக்கவும் முடியாது. பொருளாதாரத் துறையில் அமோகமான வளர்ச்சி அடைந்த இங்கிலாந்தில் நிலவியிருந்த அரசியல் முறையை, பொருளாதாரத் துறையில் அபிவிருத்தி அடையாத ஜெர்மனி எவ்வாறு மேற்கொள்ள முடியாதோ, அதேபோன்று, மார்க்ஸூம் புதிய ஆராய்ச்சியை மேற்கொண் டிருக்க முடியாது. மற்றவர்களைப்போன்று மார்க்ஸூம் சூழ்நிலைகளையும், தமது காலத்தில் நிலவியிருந்த நிலைமைகளையும் சார்ந்திருந்தார். அத்தகைய சுற்றுச்சார்புகளிலும், நிலைமைகளிலும் மார்க்ஸ் வாழ்ந்திருக்க வில்லையென்றால், அவர் பேரறிஞராக வளர்ந்திருக்க முடியாது. இந்த உண்மைக்குச் சிறந்த உதாரணம் மார்க்ஸ்.

இத்தகைய அறிஞர் சுற்றுச்சார்புகளையும், இயற்கையையும், சமூகத்தையும் நுணுக்கமாக ஆராய்வதை உற்றுக் கவனித்துக்கொண் டிருப்பது அறிவுக்கு இன்னமுதூட்டிற்று. அனுபவமற்ற என்னை - அறிவுத் தாகத்தால் தவியாய்த் தவித்த என்னை - மார்க்ஸிடம் ஒப்படைத்து, அவருடைய மாணுக்கனுக்கிய எனது அதிர்ஷ்டத்தை நான் என்றும் மறக்க முடியாது.

எந்த விஷயத்தையும் உதாசீனம் செய்யாமல், பிரபஞ்சத்திலுள்ள சகல விஷயங்களையும் ஆராய்ந்த அறிஞரிடம் மாணுக்கனுக இருந்த ஒருவன், நானுவிதமான விஷயங்களைக் கற்றுக் கொள்ளவேண்டி யிருந்தது என்பதைக் குறிப்பிடாம லிருக்க முடிய வில்லை.

டார்வினுடைய சரித்திரப் பிரசித்திபெற்ற ஆராய்ச்சிகளின் முக்கியத்துவத்தை முதன்முதலில் அறிந்துகொண்டவர்களில் மார்க்ஸூம் ஒருவர். டார்வினுடைய "உயிர்களின் உற்பவம்" என்ற நூல் 1859-ஆம் வருடத்தில் பிரசுரிக்கப்பட்டது. இது பிரசுரமாகு முன்பே, டார்வினுடைய பரிணாம தத்துவம் ஒரு புதிய சகாப்தத்தை உண்டுபண்ணி யிருக்கிறது என்பதை மார்க்ஸ் உணர்ந்தார். டார்வினுடைய புத்தகம் பிரிசுரிக்கப்பட்ட அதே வருடத்தில், "அரசியல் பொருளாதார சாஸ்திரத்தின் விமர்சனம்" என்ற மார்க்ஸின் புத்தகமும் பிரசுரமாயிற்று. சண்டமாருதம் உக்ரமாக வீசியடிக்கும் உலகத்தின் நடு மையத்தில், மார்க்ஸ் புரட்சிக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தார். அதே மாதிரியாக, நகர ஆரவாரமில்லாத, சாந்தமான தமது கிராமத்தில் டார்வினும் ஒரு புரட்சிக்கு அடிகோலிக்கொண் டிருந்தார். இருவருக்கு மிடையே யுள்ள வித்தியாசம், இருவரும் வெவ்வேறு முனைகளில் நின்றுகொண்டு, புரட்சித் தீயை மூட்டிக்கொண் டிருந்தார்கள் என்பதே.

பௌதிக சாஸ்திரம், ரசாயன சாஸ்திரம் உள்பட இயற்கை சாஸ்திர சம்பந்தமாகவும், சரித்திர சம்பந்தமாகவும் புதிது புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட உண்மைகளையும், அவைகளின் அபி விருத்தியையும் மார்க்ஸ் கூர்ந்து கவனித்து வந்தார். போல்ஷாட், லீபிக், ஹக்ஸ்லி ஆகியவர்களின் பிரசங்கங்களை மார்க்ஸ் ஆர்வத்தோடு கேட்டு வந்தார். ரிக்கார்டோ, ஆடம் ஸ்மித், மாக்குல்லாக்

ஆகியோரைப்போலவும் ஸ்காட்லந்து, இத்தாலிய நாட்டு அரசியல் பொருளாதாரவாதிகளைப்போலவும் விஞ்ஞான சாஸ்திரிகளைப்பற்றி நாங்கள் அடிக்கடி பேசி வந்தோம். அவர்களுடைய தத்துவங்களை விவாதித்து வந்தோம். டார்வின் தமது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆராய்ச்சிகளின் முடிவுகளை உலகத்திற்கு வெளிப்படுத்தியதும், அவரைப் பற்றியும், அவரது விஞ்ஞான ஆராய்ச்சியின் வெற்றியில் பொதிந்து கிடக்கும் புரட்சிகரமான அம்சங்களைப்பற்றியும் மாதக் கணக்காகப் பேசிக் கொண்டிருந்தோம். நான் இந்த விஷயத்தை ஏன் எடுத்துரைக்கிறேனென்றால், மார்க்ஸ் பொறாமை காரணமாக டார்வினுடைய யோக்கியதாம்சங்களை மாத்திரம்தான் வேண்டா வெறுப்போடு அங்கீகரித்தார் என்றும், அதுவும்கூட ஒரு குறிப்பிட்ட அளவுதான் முக்கியத்துவம் கொடுத்தாரென்றும் "தீவிரவாதிகள்" என்று தங்களைக் கூறிக்கொண்ட சில எதிரிகள் பொய்க்கதை கட்டிவிட்டார்கள்.

ஏனையவர்களின் யோக்யதாம்சங்களை ஏற்றுக் கொள்ளும் விஷயத்தில், மார்க்ஸ் பரந்த உள்ளம் படைத்தவர். பொறாமையும் வீண் டாம்பீகமும் மார்க்ஸிடம் எள்ளளவும் கிடையாது. அவைகளுக்குப் புறம்பான உயர்ந்த மனிதர் அவர். கையாலகாத்தனம், அற்பத்தனம் ஆகிய கேடான குணங்களுக்குத்தான் அவர் அருகதையற்றவர். இத்தகைய கீழான குணங்கள் படைத்தவனே "தான்தான் நிபுணன்" என்று பெருமையடித்துக்கொள்வான்; செயற்கையான பிரபல்யத்தை நாடுவான். மார்க்ஸ் இவைகளை வேப்பங்காய்போல் வெறுத்தார்.

எனக்குத் தெரிந்த கர்வமில்லாத ஒருசில பெரிய மனிதர்களில் மார்க்ஸூம் ஒருவர். இத்தகைய சில்லரைச் சுழலில் அவர் சிக்கவேமாட்டார். ஏனெனில், உறுதியான மனம் படைத்தவர். இதை நினைத்து அவர் உண்மையாகவே பெருமையடைந்தார். தம்மைப் பெரிய மனிதராகப் பாவித்து நடித்ததும் கிடையாது; எப்படி ஒரு சிறு குழந்தையால் தமதுணர்ச்சிகளை மறைத்து வைத்துக் கொள்ளமுடியாதோ, அதே மாதிரியாக, மார்க்ஸூக்கும் சுய சொரூபத்தை மறைத்துவைத்துக் கொள்ளும் திறமை கிடையாது. சமூக, அரசியல் விஷயங்கள் சம்பந்தமாக தேவையேற்பட்டால் மாத்திரம் தம்முடைய கருத்துக்களை ஒளிவுமறைவின்றி எடுத்துரைப்பார். மாசுமறுவற்ற உள்ளத்தை அவர் முகம் பிரதிபலித்தது. எதையாவது மறைத்து வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால், அப்பொழுது சிறு குழந்தைபோல் அவற்றை மறைத்துவைக்க அவர் வெட்கப்படுவார்; இதைக் கண்டு அவருடைய நண்பர்கள் வாய்விட்டுச் சிரிப்பார்கள்.

மார்க்ஸைப்போல் உண்மை பேசுபவரைக் காண முடியாது. சத்தியம் மார்க்ஸாக உருவெடுத்திருந்தது. மார்க்ஸின் முகத்தை ஒரு முறை பார்த்தால் போதும், அவர் யாரென்பது தெளிவாகத் தெரிந்துவிடும். நிரந்தரமாக யுத்தங்கள் நடந்துகொண்டிருக்கும் நமது 'நாகரிக' சமூகத்தில், ஒருவன் எப்பொழுதும் உண்மையைப் பேச முடியாது. அப்படிப் பேசினால், அவன் தன்னைத்தானே எதிரியின் கையில் ஒப்படைப்பதற்குச் சமம். அல்லது சமுதாயம் அவனைத்

தனியே விலக்கிவிடும், ஆனால், ஒருவன் அடிக்கடி உண்மையைப் பேச முடியவில்லையென்றால், அந்தக் காரணத்தைச் சாக்காக வைத்துக்கொண்டு, ஒருவன் பொய் கூறவேண்டிய அவசியமும் கிடையாது. நான் என்ன நினைக்கிறேன், என்ன உணர்கிறேன் என்பதை எப்பொழுதும் பகிரங்கமாகக் கூறமுடியவில்லை என்றால், அதைச் சாக்காக வைத்துக்கொண்டு நான் எதை நினைக்கவில்லையோ, எதை உணரவில்லையோ, அதையெல்லாம் சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. ஒன்று புத்திசாலித்தனமானது; மற்றொன்று வெறும் பித்தலாட்டம். மார்க்ஸ் வேஷதாரியாக நடித்ததே கிடையாது. கெட்டுக் குட்டிச்சுவராகப் போகாத குழந்தையைப் போல், அத்தகைய தில்லுமுல்லுகளை மார்க்ஸ் அறியவே அறியார். அவருடைய மனைவி "மூத்த குழந்தை" என்று அவரை அழைப்பது வழக்கம். ஏங்கல்ஸ் உள்பட, மார்க்ஸை நன்றாக அறிந்துகொண்டவர்கள், அவர் மனைவியைத் தவிர வேறு யாருமே கிடையாதென்று கூறலாம். இந்த நவீன "சமுகத்தில்" ஒருவன் வெளிவேஷதாரியாக இருக்க வேண்டும். இத்தகைய சமூகத்தின் மத்தியில் மார்க்ஸ் ஒரு பெரிய குழந்தைபோல் திகழ்ந்தார், நவீன டாம்பிக சம்பிரதாயங்கள் தெரியாத மார்க்ஸ், கலக்கமடைந்து மேலும் கீழும் குழந்தை போல் முழிப்பார்.

வேஷதாரிகளை அவர் வெறுத்தார். லீயிபிளாங்கை முதன்முதலில் எப்படிப் பேட்டி கண்டார் என்ற ருசிகரமான தகவலை எங்களிடம் சிரித்துக் கொண்டே தெரிவித்தார். அவருடன் தெருவில்

வசித்தபொழுது இந்தச் சம்பவம் நடந்தது. இரண்டு அறைகளுள்ள சிறு வீடு. முன்னுலிருந்த அறையில்தான் நண்பர்களை வரவேற்றுச் சம்பாஷணை செய்வார். அங்குதான் எழுத்து வேலைகளும் நடந்தன. பின்னுலிருந்த இரண்டாவது அறை ஏனைய விஷயங்களுக்காக உபயோகிக்கப்பட்டது. தாம் வந்திருப்பதை மார்கஸிடம் தெரிவிக்கும்படி லென்சனிடம் லீயிபிளாங்க் கூறினர். அவரை முன்னுலிருந்த அறையில் அமரும்படி லென்சன் கூறினன். பின்னுலிருந்த அறையில் வேகமாக உடுப்புகளை அணிந்துகொண்டிருந்தார் மார்க்ஸ். சிறு அறைகளை இணைக்கும் கதவு சிறிது திறந்திருந்தது. அதனூடே, முதல் அறையில் நடந்த நாடகத்தைப் பார்க்க முடிந்தது, சரித்திராசியரும், அரசியல்வாதியுமான இந்தப் பெரிய மனிதர், எட்டு வயது சிறுவனைவிடக் குட்டையானவர். ஆயினும் டாம்பீகம் என்ற விஷம் தலைக்கேறியவர். நடுத்தரவர்க்கத் தொழிலாளியின் எளிய வீட்டைப்போன்ற சிறிய அறையை முதலில் பார்வையிட்டார். ஒரு மூலையில், பத்தாம் பசலி முகம்பார்க்கும் கண்ணுடி தென்பட்டது. உடனே, அதன் முன்னுல் நின்று கொண்டு தம்மைச் சிங்காரித்துக்கொள்ளத் துவங்கினர். குட்டையாக இருந்ததால் உயரமான பூட்ஸ்களை அணிந்துகொண்டார். முடிந்த அளவு குதிகாலைத் தூக்கி நிமிர்ந்து நின்ருர். காதலியைச் சந்திக்கப்போகும் காதலனைப்போல், தம்மை அலங்காரம் செய்துகொண்டார். செயற்கையாக முகத்தை அப்படியும் இப்படியும் சுளித்துக்கொண்டு, கம்பீரமான தோற்றத்தை வரவழைத்துக்கொண்

டார். இந்தக் கோமாளித்தனமான காட்சியை பிரா மார்க்ஸ௺ம் பார்த்துக்கொண்டிருந்தாள். பொத்துக் கொண்டுவரும் சிரிப்பை அவளால் அடக்க முடிய வில்லே. பொதுஜனங்களால் அற்ப மனிதர் எனக் கருதப்பட்ட இவர் அறைக்குள்ளிருந்து கெம்பீர மான நடையோடு தான் வரும்போது தம்மை வர வேற்க லீயிபிளாங்கிற்கு சந்தர்ப்பமளிக்கும் பொருட்டு அலங்காரம் முடிந்தவுடன், மார்க்ஸ் கனைத்துக்கொண்டு வெளியே வந்தார். இந்த மாதிரி கபட நாடகத்தை நடிப்பதன் மூலமாக மார்க்ஸை ஏமாற்ற முடியாது. இவருக்கு, பாரிஸ் தொழிலாளர்கள் “ குட்டி லீயி ” என்ற பட்டத் தைச் சூட்டியிருந்தார்கள். விரைவில் தமது உண்மையான சக்தியைப் பிரதிபலிக்கும் முறை யில், லீயி பிளாங்க் நடந்துகொண்டார்.

## மார்க்ஸ் எழுதும்பொழுது

“ கஷ்டப்பட்டு உழைக்கும் எல்லேயற்ற சக்தி யாரிடம் இருக்கிறதோ, அவர் தான் மகா மேதாவி” என்று யாரோ ஒருவர் கூறினர். இந்த அமுதவாக்கு அநேகமாக உண்மைதான்.

அசாதாரணமாக வேலேசெய்ய வில்லேயென் ருல் - அசாதாரணமாக வேலே செய்யும் ஆற்றல் ஒருவனுக்கு இல்லே யென்ருல் - ஒருவன் மேதாவி யாகத் திகழ முடியாது. இந்த இரு குணங்களும் இல்லாதவன், தன்னேத்தானே மேதாவி என்று கூறிக்கொண்டால், அவன் நீர்க்குமிழிக்குச் சமம். அவனுடைய மேதாவிலாசம் ஆகாயக்கோட்டைக் குச் சமம். ஒருவனிடம் அதிகமாக உழைக்கும்

திறன் இருந்தால் அவன் மேதாவியாகத் திகழ்வதைக் காணலாம். தங்களைத் தாங்களே மேதாவி யென்று தம்பட்ட மடிக்கிறவர்களையும், பிறரால் ஏற்றிப் போற்றப்படுகிறவர்களையும் நான் பார்த்திருக்கிறேன். ஆனால், அவர்களிடமோ ஒரு மேதாவியிடம் காணப்படும் அருங் குணங்கள் மருந்துக்குக்கூடக் கிடையாது. பேச்சு வல்லமையும், தங்களைத் தாங்களே விளம்பரப்படுத்திக் கொள்ளும் கெட்டிக்காரத்தனமும் இவர்களிடம் இருந்தனவே தவிர, வேறொன்றும் கிடையாது. எனக்குத் தெரிந்த சகல மேதைகளும், விடாமுயற்சி உடையவர்களாயும், ஒய்வொழிச்சலின்றி சலியாது உழைப்பவர்களாயும் இருந்திருக்கிறார்கள். இவை யாவும் மார்க்ஸிடம் பொதிந்து கிடந்தன. மார்க்ஸ் இரவு பகலும் சலியாது உழைத்தார். நாடுகடத்தப் பட்ட சமயத்தில் [ஆரம்பகாலத்தில்] அவருக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டதால், பகலில் வேலைசெய்ய முடியவில்லை. எனவே, இரவு முழுவதும் கண்மூடாமல் வேலைசெய்து வந்தார். ஏதேனும் பொதுக்கூட்டம், அல்லது வேறு அலுவல்களிலிருந்து வெகு நேரம் கழித்து நாங்கள் வீட்டிற்கு வருவோம். அப்பொழுதுகூட, சில மணி நேரம்வரையும் எழுதவோ, படிக்கவோ செய்த பின்புதான் உறங்கப்போவார். இந்தச் சில மணி நேரம் வர வர அதிகரித்து, இறுதியில் இரவு முழுவதும் வேலை செய்யத் துவங்கி, அதிகாலையில் உறங்கி வந்தார். அவருடைய மனைவி இதைக் கடுமையாக ஆட்சேபித்தாள்; சிரித்துக் கொண்டே, “இது எனது இயற்கையான வழக்கமாகிவிட்டது” என்று பதிலிறுப்பார். நான் பள்ளிக்

கூடத்தில் படித்துக்கொண் டிருந்த சமயத்தில், எனது மூளை சுறுசுறுப்பாக இருக்கும்பொழுது, நானும் இரவு வெகு நேரம்வரையிலும் படிப்பது வழக்கம். எனவே, பிரா மார்க்ஸ் கண்ணோட்டத் தோடு, நான் இந்த விஷயத்தைப் பார்க்கவில்லை. ஆயினும் அவள் கூறுவதிலும் உண்மையிருக்கிறது. மார்க்ஸ் அசாதாரணமாக உடல் உறுதிபெற்றிருந் தாலும், ஐம்பதாவது வயதிலேயே, உடல் சம்பந்த மான பல வியாதிகள் அவரைப் பிடித்துக்கொண் டன. வைத்திய பரிசோதனை நடந்தது; இரவில் வேலை செய்யக்கூடா தென்றும், உலாவுதல், குதிரை சவாரி முதலிய தேகப்பயிற்சி அவசிய மென்றும் டாக்டர்கள் கூறினார்கள். லண்டனுக்கு அருகே யுள்ள கிராமங்களிலும், குன்றுகளிலும், மார்க்ஸ உலாவச்சொல்லும்பொழுது, நானும் கூடவே போ வது வழக்கம். விரைவில், உடல்நலம் பெற்றார். ஏனெ னில் மிதமிஞ்சி உழைப்பதைச் சகித்துக்கொள் ளும் உறுதியான உடலைப்பெற்றிருந்தார் மார்க்ஸ். ஆனால், தேகாரோக்யத்தைப் பெற்றதுதான் தா மதம். உடனே திரும்பவும் இரவு முழுவதும் உழைக் கத் துவங்கினார். இவ்வாறு, திரும்பவும் நோய் வாய்ப்படுவது வரையிலும் இரவு முழுவதும் வேலை செய்து வந்தார். அவருடைய உடல்நிலை வர வர படுமோசமாயிற்று. கல்லீரல் சம்பந்தமான வியாதி முற்றிற்று. கல்லீரலில் கொடிய கட்டிகள் தோன் றின. எஃகு போன்ற உடல், எலும்பும் தோலு மாகப் போயிற்று. டாக்டர்களும், நானும் அபிப் பிராயப்பட்டது இதுதான். இயற்கையான வாழ்க் கையை நடத்தியிருந்தால், தமது உடலுறுதிக்குத்

தகுந்தாற்போல் வேலை செய்திருந்தால், மார்க்ஸ் இன்று (1896) உயிரோடு இருந்திருப்பார். கடைசி காலத்தில்தான், அதாவது வெள்ளம் அணைகடந்து போனபின்பு, இரவு நேரத்தில் வேலை செய்வதை நிறுத்தினார். அப்பொழுதுகூட, பகல் வேளையில் முன்னைவிட அதிகமாக உழைத்துவந்தார். உலாவச் செல்லும்பொழுதுகூட, கையில் ஒரு நோட்டுப் புத்தகத்தைக் கொண்டுவருவார்; எப்பொழுதும் ஏதேனும் எழுதிக்கொண்டே யிருப்பார். எந்த வேலையையும் அரை குறையாகச் செய்ததே கிடையாது. பரிபூரணமாகவே செய்து முடிப்பார். ஏதோ ஒரு சிறிய விஷயத்தைப்பற்றி குறிப்பெழுதும்பொருட்டு அந்த விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்த நீண்ட கட்டுரை ஒன்றை அவர் மகள் எலானோர் என்னிடம் கொடுத்தாள். மார்க்ஸுக்கு எந்த விஷயமும் அற்பமானதல்ல. சகல விஷயங்களையும் நுணுக்கமாக ஆராய்ச்சி செய்தார்.

அபூர்வமான சகிப்புத்தன்மையோடு ஓய்வொழிச்சலின்றி செயலாற்றிக்கொண்டே யிருந்ததைக் கண்டு நான் வியப்புற்றேன்! சோர்வு என்றால் என்ன என்பது அவருக்குத் தெரியாது. சோர்வுற்று வீழ்ந்தால்கூட, வேலை செய்வதைக் குறைக்க மாட்டார்.

ஒரு பொருளில் மனித உழைப்புச் சக்தி எவ்வளவு பொதிந்துகிடக்கிறது என்பதை அளவிட்டுப் பொருளை மதிப்பிடுகிறோம். அதே மாதிரியாக, எவ்வளவு உழைத்திருக்கிறார் என்பதைக் கணக்கெடுத்து ஒரு மனிதரின் மதிப்பை அளவிடுவதென்றால், மார்க்ஸின் உழைப்பை மதிப்பிடவே

முடியாது. மதிப்பிட முடியாத அளவு உழைத்திருக்கும் ஒருசிலரில் மார்க்ஸும் ஒருவர்.

பிரம்மாண்டமான உழைப்பிற்குக் கைம்மாருக முதலாளித்துவ சமூகம் மார்க்ஸுக்கு என்ன கொடுத்திருக்கிறது? நாற்பது வருடங்களுக்குமேல் சலியாது உழைத்து, "மூலதனம்" என்ற புத்தகத்தை எழுதிஞர். எப்படி உழைத்தார் தெரியுமா? அவரைப்போல் வேறு யாரும் வேலை செய்ய முடியாது. மார்க்ஸுக்கு இணை மார்க்ஸ்தான். ஜெர்மனியிலுள்ள ஒரு சாதாரண தொழிலாளி இந்த நாற்பது வருட காலத்தில் எவ்வளவு சம்பாதித்திருப்பாரோ, அதைவிடக் குறைவான ஊதியத்தைதான் மார்க்ஸ் பெற்ருர். இந்த நூற்ருண்டில் இருந்த இரு மேதாவிகளில் [மற்றவர் டார்வின்] ஒருவரான மார்க்ஸுக்கு இந்த அற்ப ஊதியம்தான் கிடைத்தது என்று சொல்வது மிகையாகாது.

"விஞ்ஞானத்திற்கு" மார்க்கெட் மதிப்பு கிடையாது. அதிலும் முக்கியமாக, முதலாளித்துவத்திற்குத் தூக்குத் தண்டனை விதிக்கவந்துள்ள "மூலதன"த்திற்கு முதலாளித்துவ சமுதாயம் நியாயமான ஊதியத்தைக் கொடுக்குமா?

## மார்க்ஸும் குழந்தைகளும்

உறுதியான, தூய குணம் படைத்த சகல மக்களைப்போல், மார்க்ஸும் குழந்தைகளை அசாதாரண முறையில் நேசித்தார். குதூகலமாகத் தமது குழந்தைகளோடு மணிக் கணக்காகக் காலம் கழிக்கும் தந்தை அவர். அத்துடன், வெளியே

போகும்பொழுது, முன்பின் தெரியாத குழந்தைகளைக் கண்டால்—முக்கியமாக ஏழைக் குழந்தைகளைக் கண்டால்—உடனே, காந்தம்போல், அந்தக் குழந்தைகளால் மார்க்ஸ் இழுக்கப்படுவார். வறுமை கோர தாண்டவமாடும் பகுதிகளில் சுற்றித் திரியும்பொழுது, பன்முறை, திடீரென மார்க்ஸ் எங்களை விட்டு விலகிச்சென்று, வாசற் படிகளில் கந்தையை உடுத்திக்கொண்டு, எலும்பும் தோலுமாக உட்கார்ந்திருக்கும் ஏழைக் குழந்தைகளின் மெல்லிய கரத்தில் ஒரு பென்னி அல்லது அரைப் பென்னியை அழுத்திவைப்பார். பின்பு அதன் கூந்தலைத் தடவி அக மகிழ்வார். அவர் பிச்சை யெடுப்பவர்களைச் சந்தேகப் பார்வையோடு பார்த்தார். ஏனெனில், லண்டனில் பிச்சையெடுப்பது ஒரு தொழிலாக இருந்தது. செப்புக் காசுகள்தான் கிடைத்த தென்றாலும், மிதமிஞ்சிக் கிடைத்ததால், அவை தங்கக் காசுகளாக மாறின. ஆரம்ப காலத்தில், ஆண்களானாலும் சரி, பெண்களானாலும் சரி, கையிலிருந்த பணத்தைப் பிச்சைக் காரர்களுக்கு அப்படியே கொடுத்துவந்தார். ஆனால், நீண்ட காலம் அவர் ஏமாந்து போகவில்லை. நோயால் கஷ்டப்படுகிறவர்க ளென்றும், ஏழைக ளென்றும் பாசாங்கு செய்து தம்மிடம் பணம் கேட்டவர்களை அவர் வெறுத்தார். ஏனெனில் மனிதனுடைய இளகிய அனுதாபத்தைச் சுரண்டுவது மிகக் கேவலமான செயல் என்றும், ஏழை யென்ற சாக்கைக் கூறி திருடுகிறார்க ளென்றும் மார்க்ஸ் கருதினார். ஆயினும், அழுதுகொண்டிருக்கும் குழந்தையை இடுப்பில் வைத்துக்

கொண்டு, பிச்சை கேட்க மார்க்ஸை அணுகினுல்—பிச்சைக்காரியின் முகத்தில் திருட்டுத்தனம் எவ்வளவு ஸ்பஷ்டமாகப் பிரதிபலித்தாலும் சரி—மார்க்ஸின் உள்ளம் உருகிவிடும். கெஞ்சிக் கேட்கும் குழந்தையின் கண்கள் காந்தம்போல் அவரை ஆகர்ஷிக்கும்.

நாதியற்றவர்களும், நோயாளிகளும், அவர் அனுதாபத்தைப் பெற்றனர். மனைவியைக் கணவன் அடிக்கும் பழக்கம் அந்தக் காலத்தில் லண்டனில் பரவியிருந்தது. இவ்வாறு மனைவிகளை அடிப்பவர்களைக் கட்டிவைத்து, சாட்டைகொண்டு விளாச வேண்டுமென்று மார்க்ஸ் கூறுவார். எங்கேயாவது இத்தகைய சம்பவம் நடக்குமிடத்தில் தற்செயலாக மார்க்ஸ் இருந்தால், கட்டுக்கடங்காமல் ஆத்திரமடைவார். அப்பொழுது, அவரோடு, நாங்களும் தகராறில் மாட்டிக்கொள்வோம். ஒரு நாள் நானும், மார்க்ஸும் பஸ்ஸின் மேல்மாடியில் உட்கார்ந்து பிரயாணம் செய்துகொண்டிருந்தோம். பஸ் நிற்குமிடத்திற்கு அருகில், ஒரு சாராயக் கடை முன்பு, ஜனங்கள் கூட்டமாக நிற்பதைக் கண்டோம். ஒரு பெண் "கொலை, கொலை!" என்று அலறிக்கொண்டு ஓடினுள். மின்னல் போல், திடீரெனக் குதித்து, அந்த இடத்திற்கு மார்க்ஸ் ஓடிவிட்டார். நானும் அவரைப் பின் தொடர்ந்து ஓடினேன். அவரைப் பிடித்து நிறுத்த முயற்சித்தேன். துப்பாக்கியிலிருந்து ஊடுருவிப்பாயும் வெடிக்குண்டை, வெறுங்கையால் பிடித்து நிறுத்தலாம்; ஆனுல் மார்க்ஸை மாத்திரம் நிறுத்த முடியாது! ஒரு கணத்தில் நாங்கள் அந்த ஜனத்திர

ளுக்கு மத்தியில் போய்ச் சேர்ந்தோம். அங்குக் கூடியிருந்தவர்கள் எங்களைச் சூழ்ந்துகொண்டார்கள். "என்ன நடந்தது?" என்று வினவினோம். என்ன நடந்ததா! விரைவில் விஷயம் புரிந்துவிட்டது. மிதஞ்சிக் குடித்திருந்த மனைவியை கணவன் வீட்டிற்கு அழைத்துச் செல்ல முயற்சித்தான். குடித்து மதிமயங்கிய மனைவி வீட்டிற்கு வர மறுத்தாள். எனவே சண்டை; வாயில் வந்தபடி கூக்குரலிட்டாள். இதுதான் நடந்த சம்பவம்! நாங்கள் தலையிட வேண்டிய அவசியமே கிடையாதென்பதை உணர்ந்தோம். சண்டை போட்டுக்கொண்ட தம்பதிகளும் பார்த்துவிட்டார்கள். அவர்களும் அப்படியே நினைத்து, தங்களுக்குள் சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். பின்பு எங்கள் மீது பாயத் துவங்கினார்கள். அங்கு கூடியிருந்த கூட்டமும் எங்களை நெருங்கி, "இந்த வெறுக்கத் தக்க விதேசிகள்" ஏன் தலையிடுகிறார்கள் என்று நினைத்து, எங்களை மிரட்டத் துவங்கினார்கள். அந்தக் குடிகாரப் பெண் மார்க்ஸை வன்மையாகத் தாக்கினாள். முக்கியமாக, மார்க்ஸின் அழகான, கறுத்த தாடிதான் அவளுடைய முக்கியமான இலக்கு. இந்தச் சண்டமாருதத்தை நான் அடக்க முயன்றது வீணாயிற்று. இந்தப் போர்க்களத்திற்கு, ஆஜானுபாகுவான இரண்டு போலீஸ்காரர்கள் வரவில்லையென்றால், எங்களுடைய மனிதாபிமானத்திற்காக நாங்கள் பெரிது கஷ்டப்பட்டிருப்போம்! இந்தக் கொந்தளிக்கும் கடலிலிருந்து, உடலுக்கு எந்தவிதமான பழுதும் ஏற்படாமல் தப்பிப் பிழைத்து, திரும்பவும் பஸ்ஸில் உட்கார்ந்

தோம். ஆம், தப்பிப் பிழைத்ததை நினைத்து நாங்கள் சந்தோஷப்பட்டோம்! இந்த சம்பவத்திற்குப் பிறகு, இத்தகைய விஷயங்களில் தலையிடும் பொழுது, மார்க்ஸ் சிறிது முன்எச்சரிக்கையாகவே இருந்தார்.

விஞ்ஞான சாஸ்திர வீரரின் உணர்ச்சிகளையும் சிறு பிள்ளைத்தனத்தையும் அடித்தளம் வரையிலும் ஊடுருவிப் பாய்ந்து, அவைகளைப் பரிபூரணமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், தமது குழந்தைகளோடு அளவளாவிக்கொண்டிருக்கும்பொழுது அவரைப் பார்க்க வேண்டும். ஓய்வு நேரங்களில், அல்லது உலாவச் செல்லும் பொழுது குழந்தைகளைத் தூக்கிக் கூத்தாடுவார்; பித்துப் பிடித்தவனைப்போல் அவர்களோடு விளையாடுவார். சுருங்கக் கூறின் குழந்தைகளோடு குழந்தையாகத் திகழ்வார். ஹாம்ப்ஸ்டெட் ஹீத்தில், நாங்கள் அடிக்கடி "குதிரைச் சவாரி" விளையாடுவது வழக்கம். மார்க்ஸின் புதல்விகளில் ஒருத்தி என் முதுகிலும், வேறொருத்தி மார்க்ஸின் முதுகிலும் உட்காருவார்கள். பின்பு, இருவரும் குதிரைகளைப்போல் அங்கு மிங்கும் தாவிக் குதித்து ஓடுவோம். சில சமயங்களில், சவாரி செய்கிறவர்களிடையே குட்டிச் சண்டை நடக்கும். ஆண் குழந்தைகளைப்போல், இவர்கள் எதற்கும் அஞ்சாதவர்கள். சில சமயங்களில் குதிக்கும்பொழுது முட்டி மோதினால்கூட அழமாட்டார்கள்!

குழந்தைகள் சமூகம் மார்க்ஸுக்கு அவசியம். ஏனெனில், குழந்தகளோடு கூடிக் குலாவுவதன் மூலமாக, மார்க்ஸ் தமது சோர்வைப் போக்கிக்கொண்

டார்; மனச்சாந்தியையும் பெற்ருர். அவருடைய சொந்தக் குழந்தைகள் பெரியவர்களான பிறகு, சிலர் இறந்து போன பிறகு, அவர்களுடைய ஸ்தானத்திற்குப் பேரப் பிள்ளைகள் வந்தார்கள். பாரிஸ் கம்யூன் அடக்கி ஒடுக்கப்பட்ட பின்பு, லாங்கெட்டைக் கலியாணம் செய்துகொண்ட ஜென்னி லண்டனுக்கு வந்தாள். அவளுடைய சிறிய குழந்தைகளனைத்தும் போக்கிரிகள்; அவர்களில் ஜீன், அல்லது ஜானிஎன்று அழைக்கப்பட்ட பேரப்பிள்ளைதான் மார்க்ஸின் செல்லப்பிள்ளை........மார்க்ஸ் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அவ்வளவு சுதந்திரம். பெற்றோர்கள் ஜானியை அடிக்கடி பாரிஸிலிருந்து லண்டனுக்கு அனுப்புவார்கள். ஒரு நாள் நான் லண்டனில் இருக்கும்பொழுது, ஜானியும் இருந்தான். ஒரு நாள் திடீரென ஜானிக்கு ஒரு யோசனை தோன்றிற்று. "மூரை" ஒரு வண்டியாக மாற்றினுன். அதாவது. மார்க்ஸின் தோள்களில் உட்கார்ந்துகொண்டான். நானும், ஏங்கல்ஸும் குதிரைகள். குதிரைக்கு வேண்டிய சேணம் முதலியன ஒழுங்காகப் பூட்டப்பட்டன. மார்க்ஸின் வீட்டிற்குப் பின்னுல் இருந்த ஒரு சிறிய தோட்டத்தில் வண்டி ஓடத் துவங்கிற்று. ஆம், வாயுவேகத்தில் குதிரைகள் ஓடின...........

சர்வதேச பாஷைகளில்--ஆங்கில, ஜெர்மானிய பிரெஞ்சு பாஷைகளில்—வண்டிக்காரன் "ஓய், ஓடு, இம்" என்று கத்தினுன். மூர் அவனைத் தூக்கிக் கொண்டு ஓடினுர். முகத்திலிருந்து வியர்வை நீரூற்றுப்போல் பெருக்கெடுத்து ஓடிற்று. ஏங்கல்ஸோ, நானோ சிறிது மெதுவாக ஓடினுல், வண்டிக்காரனின் சவு இரக்கமற்ற சாட்டை எங்களுடைய முதுகில்

“பளார், பளார்” என்று விழும். ஏய், போக்கிரிக் குதிரையே! ஓடு வேகமா!.......இவ்வாறு மார்க்ஸ் களைத்துப்போவது வரையிலும் நெடுநேரம் சவாரி நடந்தது. ஜானியோடு சமாதானப் பேச்சுவார்த்தை நடந்தது. பின்பு சமாதானமும் ஏற்பட்டது.

## லென்சன்

மார்க்ஸ் தனிக் குடித்தனம் செய்ய ஆரம்பித்த திலிருந்து, மார்க்ஸின் குழந்தைகளில் ஒருத்தி கூறியதுபோல், லென்சன்தான் குடும்பத்தின் உயிர் நாடி; உன்னதமான அர்த்தத்தில், சகல வேலைகளை யும் செய்துவந்தவள் அவள்தான். அவள் கரங் கள் படாத வேலை ஏதேனும் உண்டா? சந்தோஷ மாக அவள் செய்யாத வேலைதான் ஏதேனும் உண்டா? அவள் எப்பொழுதும் குதூகலமாகவே இருந்தாள். புன்சிரிப்போடு யாருக்கும் உதவிசெய் யத் தயாராக இருந்தாள். இல்லை! சில சமயங்கள் கோபம் வரும்; மூரின் எதிரிகள் அவளை எட்டிக் காய்போல் வெறுத்தனர்.

பிரா மார்க்ஸ் நோய்வாய்ப்பட்டால், அப் பொழுது லென்சன்தான் குழந்தைகளின் தாயாக விளங்கினாள். ஏனைய சமயங்களில், அவள் குழந்தை களின் இரண்டாவது தாயாகத் திகழ்ந்தாள். அவ ளிடம், அவளுக்கே உரிய அலாதியான எஃகு போன்ற மனோஉறுதி இருந்தது. நினைத்ததைச் செய்துமுடிக்கும் பேராற்றல் படைந்தவள் அவள்.

மார்க்ஸ் குடும்பத்தில் லென்சன்தான் சர்வா திகாரி; பிரா மார்க்ஸ் அவளுக்குக்கீழ் அதிகாரி; இந்தச் சர்வாதிகார ஆட்சிக்கு மார்க்ஸ் ஆட்டுக்

குட்டிபோல் அடிபணிந்தார்! இதுதான் குடும்ப உறவு. ஒருவரும் இவளுக்குப் பெரிய மனிதர்களாகத் தென்றவில்லை என்று சொல்கிறார்கள். நிச்சயமாக, மார்க்ஸையும் அப்படியேதான் அவள் பாவித்தாள். தன்னிடமுள்ள அனைத்தையும் மார்க்ஸுக்காக அர்ப்பணம் செய்யத் தயாராக இருந்தாள். தேவையாக இருந்தால், சாத்தியமானால், மார்க்ஸுக்காகவும், பிரா மார்க்ஸுக்காகவும், அவர்களுடைய குழந்தைகளுக்காகவும் தனது இன்னுயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருந்தாள். உண்மையிலேயே மார்க்ஸ் குடும்பத்திற்காகத் தன்னை அர்ப்பணம் செய்தாள். ஆயினும், தாம் ஒரு மேதாவி என்பதை லென்சன் மனதில் மார்க்ஸால் பதியவைக்க முடியாது போயிற்று. மார்க்ஸின் மனோபாவமும் பலஹீனமும் லென்சனுக்குத் தெரியும். தன்னுடைய சுண்டு விரலில் மார்க்ஸை ஆட்டிவைப்பாள். மார்க்ஸ் உக்ரமாகக் கோபமடைந்திருக்கும் பொழுது, சிங்கம்போல் கர்ஜிக்கும்பொழுது, கண்களில் கோபக்கனல் பறக்கும்பொழுது, ஒருவரும் அவரை அணுக மாட்டார்கள். ஆனால், லென்சன் மாத்திரம் சிங்கத்தின் குகைக்குத் தைரியமாகச் செல்வாள். அவள் முன்பு சிங்கக்குட்டி, ஆட்டுக் குட்டியாக மாறிவிடும்!

## மார்க்ஸோடு உலாவுதல்

ஆம், நாங்கள் ஹாம்ஸ்டெட் ஹீத்திற்குச் சென்ற பிரயாணங்களைப்பற்றித்தான்! இன்னும் ஆயிரம் வருடங்கள் வரையிலும் உயிரோடிருந்தாலும், நான் அந்தப் பிரயாணங்களை மறக்கவே மாட்

டேன். பிரைம்ரோஸ் குன்றுக்கு அப்பால் ஹாம்ப்ஸ்டெட் ஹீத் இருக்கிறது. டிக்கன்ஸின் "பிக்விக்" புத்தகத்தின்மூலமாக லண்டனுக்கு வெளியேயுள்ளவர்களுக்கு இந்த இடம் தெரியும். இன்றுகூட, புல்லடர்ந்த காடாகவே இருக்கிறது. மஞ்சள் மலர்களோடு கூடிய முட்செடிகளும், அங்குமிங்கும் மரங்களும் நிறைந்த வளப்புமிக்க சின்னஞ் சிறு குன்றுகளுக்கும், பள்ளத்தாக்குகளுக்கு மிடையே சுயேச்சையாகச் சஞ்சரிக்கலாம். அனுமதியின்றி உள்ளே நுழைந்தால், கண்டிக்கிற அல்லது அபராதம் விதிக்கிற பேர்வழிகள் அங்கு கிடையாது. இப்பொழுதுகூட, லண்டன் வாசிகள் ஹாம்ப்ஸ்டெட் ஹீத்திற்கு உல்லாசமாக உலாவச் செல்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில், எங்கு பார்த்தாலும் ஆண்களின் கறுப்பு உடைகளும், பெண்களின் அழகிய பல வர்ண உடைகளும் ஹாம்ப்ஸ்டெட் ஹீத்தை அலங்கரித்தன. கழுதைகளதும், குதிரைகளதும் பொறுமையைச் சோதனை செய்வதில் பெண்களுக்கு அலாதியான ஆர்வம்! நாற்பது வருடங்களுக்கு முன்பு, ஹீத் விசாலமானதாகவும், சீரமைக்காமலும் இயற்கை எழிலுடன் துலங்கிற்று. ஞாயிற்றுக்கிழமைகளில் அங்கு தங்குவது, எங்களுக்குப் பேரானந்தத்தைக் கொடுத்தது. அங்கு போவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே, குழந்தைகள் அதைப்பற்றியே சதா பேசிக்கொண்டிருப்பார்கள். வயது முதிர்ந்தவர்களாகிய எங்களுக்கோ, அது சந்தோஷத்திற்கு உறைவிடம். அங்கு உல்லாசமாக உலாவப்போவதை, ஒரு திருவிழாவாகவே கருதினோம். சலியாது நடப்பதில் குழந்தைகள் தேர்ச்சிபெற்றவர்கள்;

பூனைபோல் பதுங்கிப் பதுங்கி ஓடுவார்கள். மார்க்ஸ் வீட்டிலிருந்து, அந்த இடத்திற்குப் போக ஒன்றே கால் மணி நேரம் பிடிக்கும். காலையில் பதினொரு மணிக்குப் புறப்படுவது வழக்கம். அதிகாலையில் எழுந்திருக்கும் வழக்கம் லண்டன் வாசிகளிடையே கிடையாது. அதிகாலையில் எழுந்திருந்தாலும் சிறிது தாமதமேற்படும். ஏனெனில், குழந்தைக்கு உடை அணிய வேண்டும்; பிரயாணத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களைக் கூடையில் கட்டிவைக்க வேண்டும். ஆம், அந்தக் கூடையை நான் மறக்கவே முடியாது! லென்சன் கையில் தொங்குவதை நேற்று பார்த்ததுபோல், இன்றும் எனது மனக்கண் முன்பு நிற்கிறது. என்னை அழைப்பதுபோல் அதேச லென்சன் கையில் ஆடுகிறது! என்ன ருசி! அதை நினைத்தால், நாக்கில் ஜலம் சொட்டுகிறது.

அந்தக் கூடைதான் எங்களுடைய போஜனக் களஞ்சியம். நோய் நொடியில்லாதவன், கையில் போதிய பணம் இல்லாதவன். எங்களிடத்தில் எப்பொழுதும் வேண்டிய பணம் இருந்ததே கிடையாது; பணப் பஞ்சம் வாட்டி வதக்கிற்று; வயிற்றுப் பிரசினை ஆட்டி அலைத்தது. கருணை உள்ளம் படைத்த லென்சனுக்கு எங்களுடைய நிலைமை நன்கு தெரியும். எனவே, பசியால் வாடும் எங்களிடம் எப்பொழுதும் அனுதாபம் காட்டுவாள். ஒரு பெரிய மாட்டு இறைச்சித் துண்டை வறுத்துக் கொடுப்பாள். ஞாயிற்றுக்கிழமைகளில் அதுதான் எங்களுடைய மத்தியான உணவு. இவ்வளவு பெரிய கூடையை லண்டனில் பார்க்கவே முடியாது. டிரவெஸ் என்ற இடத்தைவிட்டு மார்க்ஸ் குடும்பம்

வெளியேறியபொழுது, லென்சன் கவனமாக இருந்தக் கூடையையும் கூடவே எடுத்துக்கொண்டு வந்தாள். அதுதான் எங்களுடைய அட்சய பாத்திரம். கடவுள்களில் பெரிய கடவுள் வசிக்கும் தேவாலயமும் அதுதான். இந்த மாட்டிறைச்சித் துண்டோடு தேயிலைப் பானமும் கிடைக்கும். சில சமயங்களில் ஓரிரண்டு பழங்களும் கிடைக்கும். ரொட்டியையும், வெண்ணையையும் ஹீத்திலேயே வாங்குவோம். பெர்லினிலுள்ள ஹோட்டல்களில் கிடைப்பது போல், இங்கும் மட்பாண்டங்களும், வெண்ணீரும், பாலும் கிடைக்கும். ஒவ்வொருவரும் அவரவர்கள் சக்திக்கும் விருப்பத்திற்கும் உகந்த முறையில், வெண்ணை, ரொட்டி, பாலாடை, பீர் முதலியவைகளை வாங்கிக்கொள்ளலாம். அங்கு நத்தை, கடல் மீன், கடற்கீரை முதலியனவும் கிடைக்கும்.

ஹாம்ஸ்டெட் ஹீத்திற்குச் செல்லும்பொழுது நாங்கள் அணிவகுத்துச் செல்வோம். முதலில் நானும் இரண்டு புதல்விகளும் முன்னணிப் படையாக நடந்துசெல்வோம். சில சமயங்களில் கதைகள் சொல்வோம். சில சமயங்களில் தேகப்பயிற்சி நடக்கும்; அல்லது காட்டுப்பூக்களை வேட்டையாடுவோம். இப்பொழுது, அந்தப் பூக்களைக் காண்பதரிது. எங்களுக்குப் பின்னால், சில நண்பர்கள் வருவார்கள். யாவருக்கும் பின்னால், முக்கியமான பின்னணிப் படை வரும். மார்க்ஸ், பிரா மார்க்ஸ், சில நெருங்கிய நண்பர்கள். யாவருக்கும் பின்னால், லென்சன் வருவாள். அவளோடு, பசியால் தவிக்கும் நண்பர்கள், கூடையை மாற்றி மாற்றிச் சுமந்துகொண்டு வருவார்கள். எண்ணிக்கை அதிகமாக இருந்தால்,

இந்தப் படை பல பிரிவுகளாகப் பிரிக்கப்படும். தேவைக்குத் தகுந்தபடி, அணிவகுப்பும், படையின் ஒழுங்கும் மாறிற்று என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

ஹீத்திற்கு வந்தவுடன், டீயும், பீரும் கிடைக்கக்கூடிய இடத்தைத் தேடிப்பார்த்து, அதனருகில் கூடார மடிப்போம்.

உணவு முடிந்த பின்பு, ஓய்வெடுத்துக்கொள்வோம். களைப்பாற உறங்கவில்லையென்றால் அன்றைய பத்திரிகைகளைப் படிப்போம். அரசியல் விஷயங்கள் பற்றிய சம்பாஷணைகள் நடக்கும்.......... குழந்தைகளோ, விரைவில் புதிய சிநேகிதர்களைத் தேடிப்பிடித்து, புதர்களில் ஒளிந்து விளையாடுவார்கள்.........

இளைப்பாறும் சமயத்தில் நாங்களும் விளையாட வேண்டாமா? ஓட்டம், பந்தயம் முதலிய விளையாட்டுகள் ஆரம்பமாகும். சில சமயங்களில் குத்துச் சண்டை, குஸ்தி, குறிபார்த்துஎறிவது முதலியன கூட நடக்கும். ஒரு நாள் ஒரு நாவற்பழ மரத்தைக் கண்டோம். ஏராளமான பழங்கள் பழுத்துத்தொங்கின. யார் அதிகமாகப் பழங்களை வீழ்த்துகிறார்கள் என்று போட்டி ஆரம்பமாயிற்று. மூர் பித்துப்பிடித்தவர்போல் இந்தக் கேளிக்கையில் மூழ்கினார். ஆம், குறிபார்த்து எறிவது, அவரது திறமைகளில் ஒன்றல்ல. இளையவர்களைப்போல், அவரும் சளைக்காது கடைசிவரையிலும் எறிந்தார். பெருத்த வெற்றி ஆரவாரத்துடன் மரத்திலிருந்த கடைசிப் பழம் விழுந்தது. இதற்குப் பின்னர், எட்டு நாட்கள் வரை

யிலும் மார்க்ஸ் வலது கையைத் தூக்கமுடியாமல் கஷ்டப்பட்டார்! என் கையும் அப்படித்தான்.

யாவற்றிலும் அதிக ரசமான விளையாட்டு கழுதைமேல் சவாரி செய்வதுதான். இந்த விளையாட்டு எவ்வளவு சந்தோஷத்தையும், ஆரவாரத்தையும், நகைப்பையும் உண்டுபண்ணிற்று தெரியுமா? தாம் ரசித்ததோடு, மார்க்ஸ் எங்களையும் ரசிக்க வைத்தார். இரண்டு விதத்தால் எங்களுக்கே களிப்பூட்டினார். பழைய பத்தாம் பசலி முறையில், தாறுமாறாகச் சவாரி செய்தார். இந்தக் கலையில் தேர்ச்சி பெற்றவர் என்று பிடிவாதமாக மார்க்ஸ் நினைத்தார். வாஸ்தவத்தில் மார்க்ஸுக்கு சவாரி செய்யவே தெரியாது! பள்ளிக்கூடத்தில் படிக்கும் பொழுது, ஒரு முறை சவாரி செய்வது சம்பந்தமாகப் படித்தாராம்! அவ்வளவுதான், அதுதான் அவருடைய திறனுக்கு ஆதாரம். மூன்றே மூன்று முறைதான் சவாரி செய்திருக்கிறார் என்று ஏங்கல்ஸ் கூறினார். திருவிழாக் காலத்தில் மான்செஸ்டருக்கு வந்திருந்தபொழுது, ஒரு சாதுவான கிழப்பெண் குதிரைமீது ஏங்கல்ஸோடு சவாரி செய்தாராம்!

ஹீத்திலிருந்து திரும்பி வரும்பொழுது சந்தோஷமாகவே வந்தோம். ஆனால், போகும்பொழுதிருந்த குதூகல மில்லை. மனச்சோர்வு என்ற படுகுழியில் எங்களைத் தள்ள, நிலைமைகள் சுறுசுறுப்பாக வேலை செய்தன. ஆனால், எங்களுடைய ரசிகத்தனம் எங்களைப் பிழைக்க வைத்தது. தாய்நாட்டைவிட்டு வெளி நாடுகளில் வாழ்ந்துவந்தவர்கள் பட்ட கஷ்ட நஷ்டங்கள் ஏட்டில் அடங்கா. அவைகள் எங்களைச் சோர்வடையச் செய்ய முடியாது போயிற்று. யாரா

வது கஷ்டங்களைப்பற்றி முனகினல், "சமூகத்திற்கு நீ செய்யவேண்டிய கடமைகளை நினைத்துப்பார்" என்று கூறி, மார்க்ஸ் அவைகளை மறக்கும்படி செய்வார்.

திரும்பி வரும்பொழுது, அணிவகுப்பு முற்றும் மாறிவிடும். அங்குமிங்கும் ஓடி அலைந்ததால், குழந்தைகள் களைத்துப்போய் விடுவார்கள். எனவே, லென்சனும், குழந்தைகளும் இப்பொழுது பின்னணிப்படை. கூடை காலியாக இருந்ததால், குழந்தைகளைப் பராமரிக்கும் பணியை லென்சன் ஏற்றுக்கொள்வாள். நாங்கள் கிராமியப் பாட்டுப் பாடிக்கொண்டே நடப்போம். அரசியல் பாட்டுகளை இப்பொழுதாவது பாடுவோம். அவை உத்வேக மூட்டும் தேசிய கீதங்கள். சிலசமயங்களில், குழந்தைகள் நீக்ரோக்களின் பாட்டுக்களைப் பாடுவார்கள். சோர்ந்துபோன கால்கள் வலுப்பெற்றால், நடனமாடுவார்கள். வெளிநாடுகளுக்கு நாடுகடத்தப்பட்ட நாங்கள் எப்படி எங்களுடைய துன்பத்தைப்பற்றி பேசக்கூடாதோ, அதே மாதிரியாக, திரும்பி வரும்பொழுது, அரசியல் விஷயங்களைப்பற்றிப் பேசவே கூடாது. இலக்கியம், கலை ஆசியவைகளைப்பற்றியே பேசுவோம். தமது அபூர்வ ஞாபகசக்தியைக் காட்ட மார்க்ஸுக்கு இத்தகைய தருணத்தில் அரிய சந்தர்ப்பம் கிடைக்கும். தாந்தேயின் காவியங்கள் அனைத்தும் அவருக்கு மனப்பாடம். அவைகளிலிருந்து நீண்ட பாட்டுக்களைப் பாடுவார். ஷேக்ஸ்பியருடைய நாடகங்களிலிருந்து, சில இனிய பகுதிகளை எடுத்துரைப்பார். பிரா மார்க்ஸும் ஷேக்ஸ்பியருடைய நாடகங்களைக் கரைத்துக் குடித்திருந்

தாள். சில சமயங்களில் மார்க்ஸுக்கு ஓய்வு கொடுத்து, அவளே பாடுவாள்..........

1850-ம் வருடத்திற்கு பிறகு, லண்டனின் வட பகுதியில் வாழ்ந்து வந்தோம்......அப்பொது ஹாம்ப்ஸ்டெட் ஹீத்திற்கும், ஹைகேட்டிற்கும் இடையிலும், பின்னிலும் உள்ள பசுமையான வயல் களிலும், குன்றுகளிலும் உலாவினோம். இங்கு ஏராளமான புஷ்பங்கள் கொத்துக் கொத்தாகப் பூத்துத்தொங்கின. நகரங்களிலுள்ள கற்களையும், ஓடுகளையும் பார்த்துப் பார்த்து அலுத்துபோன குழந்தைகளுக்கு, இவைகள் களிப்பூட்டின. பச்சைப் பசேரென்ற கண்ணூக்கினிய காட்சியைக் கண்டு அவர்கள் அகமகிழ்ந்தார்கள். அங்குமிங்கும் நடக்கும் பொழுது, கரையோரத்திலுள்ள மரங்களின் நிழலால் இருள் சூழப்பட்ட குட்டைகளைக் கண்டால், உடனே அவைகளைக் குழந்தைகளுக்குச் காட்டுவ வதில் எனக்கு அலாதியான பெருமை. வசந்தகால நறுமலர்கள் உள்ள தோட்டத்திற்குள் பிரவேசிக்கு முன்பு, "அனுமதியின்றி உள்ளே வரக்கூடாது" என்ற பலகை இருக்கிறதா என்று கவனமாகப் பார்த்தபின்பே, அந்தக் கண்ணுக்கினிய இடத்திற் குச் செல்வோம்.......

## வியாதியும் மரணமும்

"அல்ஜியர்ஸிலுள்ள முஸ்தாபிவில் மூர் தங்கி யிருந்ததுபற்றி நான் அதிகமாக ஒன்றும் கூற முடியாது. அங்கு காலநிலை படுமோசமாக இருந் தது. வாஞ்சையுள்ள, சாமர்த்தியசாலிகளான டாக்டர்கள் மூருக்கு சிச்ருஷை செய்தார்கள்.

ஹோட்டலிலுள்ளவர்கள் அனைவரும் சிநேகமாக வும் அக்கறையுடனும் மார்க்ஸைப் பாவித்தனர்.

1881-82-ல் இலையுதிர் காலத்திலும் மாரி காலத்திலும் பாரிஸுக்கு அருகாமையிள்ள அர் ஜெண்டூல் என்ற இடத்தில் வாழ்ந்த ஜென்னி வீட்டில், முதலில் மூர் வசித்துவந்தார். அங்கு நாங் கள் இருவரும் சந்தித்து, சில வாரங்கள் தங்கி யிருந்தோம். பின்பு, பிரான்ஸின் தெற்குப் பகுதிக் கும், அங்கிருந்து அல்ஜியர்ஸுக்கும் போனார். ஆனால், கடுமையான வியாதியோடு திரும்பிவந் தார். 1882-83-ல் இலையுதிர் காலத்தையும், மாரி காலத்தையும் விட் தீவிலுள்ள வென்ட்னோரில் கழித்தார். 1883-ம் வருடம் ஜனவரி மாதம் 8-ந் தேதி ஜென்னி இறந்த பின்பு, திரும்பிவந்தார்.

கார்ல்ஸ்பாடு என்ற ஊரைப்பற்றி சிறிது கூற விரும்புகிறேன். 1874-ம் வருடத்தில், 1874-ல் முதன் முதலில் அந்த இடத்திற்குச் சென்றோம். மூருக்கு உறக்கமே கிடையாது; இத்துடன் கல்லீரல் வியாதி யும் முற்றிற்று. எனவே, அங்கு அனுப்பப்பட்டார். அடுத்த வருடம் தனியே திரும்பவும் சென்றார். ஏனெனில், முதலில் அங்கு தங்கியிருந்தபொழுது, அவரது உடல்நலம் சீரடைந்தது. நானும் கூடவே இருக்க வேண்டுமென்று மார்க்ஸ் விரும்பியதால், அடுத்த வருடம் 1876 நானும் சென்றேன். கார்ல்ஸ் பாட்டிலிருக்கும்பொழுது, வைத்தியர்களின் உப தேசப்படி நடந்துகொண்டார், அங்கு பல புதிய நண்பர்களின் உறவு கிடைத்தது. பிரயாணம் செய்யும்பொழுது, மார்க்ஸைப்போன்ற ஒரு தோழ ரைக் காண்பது அரிது. எப்பொழுதும் உற்சாகமாக

வே இருந்தார். கண்ணுக்கினிய இயற்கைக் காட்சியாக இருந்தாலும் சரி, அல்லது ஒரு கோப்பை பீராக இருந்தாலும் சரி, எதையும் அவர் ரசித்தார். ஒவ்வொரு நாட்டையும்பற்றிய சரித்திரஞானம் அவரிடம் மல்கிக் கிடந்ததால், நாங்கள் பார்த்த இடங்களைப்பற்றி யெல்லாம் விஸ்தாரமாக விவரித்தார்......

1874—45-ஆம் வருடங்களில் நாங்கள் திரும்பவும் லிப்ஸிக்கில் சந்தித்தோம். பின்னர், வீட்டிற்குத் திரும்பி வரும்பொழுது, பிங்கனுக்குச் சென்றோம். இந்த நகரத்தை மூர் எனக்குக் காட்ட வேண்டுமென்று விரும்பினர். ஏனென்றால், தந்தையும் தாயும் கல்யாணமான சமயத்தில், உல்லாசமாகக் காலங் கழிக்க இந்த இடத்திற்குத் தான் வந்திருந்தார்களாம். இதைத் தவிர, டிரஸ்டன், பெர்லின், பிராக், ஹாம்பர்க், நியூரென்பர்க் முதலிய நகரங்களுக்கும் விஜயம் செய்தோம்.

1877-ஆம் வருடத்தில், கார்ல்ஸ்பாதுக்குப் போக மூர் திட்டம் போட்டிருந்தார். ஆனல், ஜெர்மானிய சர்க்காரும், ஆஸ்திரிய சர்க்காரும் மார்க்ஸ் வந்தால், உடனே நாடு கடத்தப்போவதாக எங்களுக்குச் செய்தி எட்டிற்று. அது ஒரு நீண்ட பிரயாணம் என்பதோடு, பணத்தையும் ஏராளமாகச் செலவு செய்ய வேண்டும். இவ்வளவு கஷ்டப்பட்டும் கிடைக்கப்போகும் பலன் நாடு கடத்தல்தான். எனவே, பின்பு கார்ல்ஸ்பாதுக்கு மார்க்ஸ் போகவே யில்லை. இது மார்க்ஸுக்கு ஈடு செய்யாத நஷ்டம். ஏனெனில், அந்த நகரத்திற்கு ஓய்வெடுத்துக்கொள்ளச்

சென்ற சமயங்களி லெல்லாம், மார்க்ஸ் தேகா ரோக்கியத்தைப் பெற்ருர்.

எனது மாமாவை, எனது தந்தையின் விசுவாச முள்ள நண்பரை, எட்கார் வான் வெஸ்ட்பேலனை, பார்க்கத்தான் முக்கியமாக நாங்கள் பெர்லினுக்குப் போனோம். சில நாட்கள்தான் அங்கு தங்கி யிருந்தோம். மூன்ருவது நாள், நாங்கள் அந்த இடத்தைவிட்டு வந்த பின்பு, ஒரு மணி நேரத்திற் குப் பிறகு, போலீஸ்காரர்கள் நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு மூரைத் தேடி வந்திருந்தார்கள் என்று கேட்டு, மார்க்ஸ் வயிறு குலுங்கச் சிரித்தார்.

1880-ம் வருடம் இலையுதிர் காலத்தில், எங்கள் அருமைத் தாய், நோய்வாய்ப்பட்டு படுக்கையி லிருந்து எழுந்து உட்காரக்கூடச் சக்தியற்ற நிலை மையில் இருக்கும்பொழுது, சுவாசப் பையில் 'புளு ரஸி' என்ற நோயால் பெரிதும் கஷ்டப்பட்டார் மூர். தமது வியாதியை மூர் முற்றும் உதாசீனம் செய்ததால், வியாதி முற்றிவிட்டது. உயிருக்கே ஆபத்து நேரிடும் போலிருந்தது. எங்களுடைய அருமை டாக்டர் டொங்கின், கையை விரித்துவிட் டார். எங்களுடைய நிலைமை படுமோசமாயிற்று. பயங்கரமான காலம் அது. முன்னுலிருந்த அறை யில் தாய் படுத்திருந்தாள். அதற்குப் பின்னுலிருந்த சிறிய அறையில் மூரும் படுத்திருந்தார். மலரும் மணமும்போல வாழ்நாள் முழுதும் ஒன்ருகவே வாழ்ந்து வந்தவர்கள், இப்பொழுது ஒரே அறை யில் இருக்க முடியாது போயிற்று.

நமது பழைய லென்சனும், [அவள் எவ்வளவு உதவியாக இருந்தாள் என்பது உங்களுக்குத் தெரியும்.] நானும் இருவருக்கும் சிச்ருஷைசெய்யவேண்டியிருந்தது. எங்களுடைய கவனமான பராமரிப்புதான் மூரின் உயிரைக் காப்பாற்றிற்று என்று டாக்டர் கூறினார். ஒரு சமயம் அது உண்மையாகவே இருக்கலாம். ஹெலனோ [லென்சன்] நானோ மூன்று வாரங்கள்வரையிலும் கண்ணை மூடவேயில்லை என்பது எனக்குத்தான் தெரியும். இரவு பகலாக, ஓய்வொழிச்சலின்றி நாங்கள் இருவரும் சிச்ருஷை செய்து வந்தோம். யாராவது ஒருவர் சோர்ந்துபோனால், ஒரு மணி நேரம் ஓய்வெடுத்துக்கொள்வது வழக்கம். இவ்வாறு, மாறி மாறி மூன்று வாரங்கள் வரையிலும் சிச்ருஷை செய்தோம். மூர் திரும்பவும் தேகாரோக்யத்தைப் பெற்றார். திடீரென ஒரு நாள் காலையில், தாயின் அறைக்கு நடந்துபோகச் சக்தியிருக்கிறது என்று கூறியதை நான் ஒரு நாளும் மறக்கவே மாட்டேன். தம்பதிகள் திரும்பவும் இளம் காளைகளானார்கள். தாய் ஒரு கன்னிக்காதலியாகவும், தந்தை ஒரு யௌவனக் காதலராகவும் திகழ்ந்தார்கள்! வியாதியால் தளர்ந்துபோன கிழவராகவும், இறக்கும் தருவாயிலிருக்கும் தாய் இறுதிவிடை பெற்றுக் கொள்பவளாகவும் தோன்றவில்லை. புத்துயிர் பெற்று, புதுவாழ்வைத் தொடங்குகிறவர்கள்போல் தோற்றமளித்தனர் இருவரும்.

மூர் குணமடைந்தார். இழந்த வலிமையை முற்றும் பெறவில்லையானாலும், உறுதியான உடல்

நலம் படைத்தவர்போலவே வெளிப்பார்வைக்குத் தோன்றினர்.

பின்பு, 1881-ம் வருடம் டிசம்பர் மாதம் 2-ந் தேதி தாய் மரணமடைந்தாள். அவளுடைய கடைசி வார்த்தை-ஆம் ஆங்கில வார்த்தை தான்—“கார்ல்” என்பதுதான். எங்கள் அருமை ஜெனரல் வந்தபொழுது [ஏங்கல்ஸ்] “மூர்கூட இறந்து போய்விட்டார்” என்று சொன்னர். ஆம், இந்த வார்த்தைகளைக் கேட்டு எனக்குக் கோபம் வந்தது. அவர் சொன்னது முற்றும் உண்மைதான்.

தாயின் உயிர்போனதோடு, தந்தையின் உயிரும் போய்விட்டது. மரணத்தோடு மூர் உக்ரமாகப் போராடிக்கொண் டிருந்தார். கடைசி வரையிலும் அவர் போராடிக்கொண் டிருந்தவரல்லவா? ஆயினும் உள்ளம் உடைந்து போயிற்று. வர வர அவருடைய உடல் நலம் படுமோசமாய்க் கொண்டே யிருந்தது. ஒரு சுயநலமியாக இருந்திருந்தால், பொது விஷயத்தில் தலையிடாமல் வாழ்ந்திருப்பார். ஆனல், அவரோ ஒரே ஒரு விஷயத்தை — புரட்சியை — பெரிதெனக் கருதினர். இந்த இலட்சியத்திற்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுத்தார். புத்தகங்களை எழுதி முடிக்க வேண்டுமென்று விரும்பினர். எனவே, உடல் நலத்தைத் திரும்பவும் பெற, மற்றொரு கடற் பிரயாணம் செய்ய ஒப்புக்கொண்டார்.

1882-ம் வருடம் வசந்த காலத்தில் பாரிஸுக்கும் அர்ஜெண்டுயிலுக்கும்* சென்றர். இங்கு

* இந்தக் கடிதத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பிரயாணம் இதுதான்—லீப்னெட்.

தான் மூரை நான் சந்தித்தேன். ஜென்னி, நாலைந்து குழந்தைகள், நான் யாவரும் குதூகலமாகக் காலத்தைக் கழித்தோம். பின்னர், பிரான்ஸின் தென் பகுதிக்கும், அல்ஜியர்ஸுக்கும் மூர் சென்றார்.

அல்ஜியர்ஸில் இருக்கும்பொழுது, படுமோசமான காலநிலை அவர் உடல்நலத்தைப் படுமோசமாக்கிற்று. அல்ஜியர்ஸிலிருந்து எனக்குப் பலநீண்ட கடிதங்கள் வரைந்தார். அவைகளில் பல என்னிடம் இல்லை. ஏனெனில், அவைகளை ஜென்னிக்கு அனுப்பும்படி எழுதியிருந்தார். பல கடிதங்களை ஜென்னி என்னிடம் திருப்பிக் கொடுக்கவே யில்லை.

இறுதியில், திரும்பி வந்தபொழுது, மூரின் வியாதி முற்றியிருந்தது. இனிமேல் உயிரோடிருக்க மாட்டாரென்ற எண்ணம் எங்கள் மனதில் அலை மோதிற்று. டாக்டருடைய யோசனைப்படி விட் தீவிலுள்ள வென்ட்னோரில் இலையுதிர் காலத்திலும், மாரி காலத்திலும் வசித்தார். அச் சமயத்தில், மூரின் விருப்பப்படி, ஜென்னியின் கடைசிப் புதல்வனோடு—ஜான் (ஜானி)—இத்தாலியில் சில மாதங்கள் நான் வசித்தேன் என்ற விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். 1883-ம் வருடம், ஜானியை அழைத்துக்கொண்டு, மூரைப் பார்க்கச் சென்றேன். பேரப் பிள்ளைகளில், ஜானியைத்தான் மூர் பெரிதும் நேசித்தார். எனக்கு அவசர வேலையிருந்ததால், நான் திரும்பி வர வேண்டியிருந்தது.

இந்தச் சமயத்தில்தான் பயங்கரமான கடைசி அடி விழுந்தது; ஜென்னி இறந்துபோனாள் என்ற செய்தி எட்டிற்று. மூத்த மகளும், மூரின் செல்லப் பிள்ளையுமான ஜென்னி ஜனவரி மாதம்

8-ந்தேதி யன்று திடீரென மரணமடைந்தாள். மூரிடமிருந்து பல கடிதங்கள் வந்தன; அவைகள் இன்னும் என்னிடம் இருக்கின்றன. அதில், ஜென்னி குணமடைந்து வருகிறாள் என்றும், ஹெலனும், நானும் கவலைப்பட வேண்டாமென்றும் எழுதி யிருந்தார். ஜென்னி சுகமாகவே இருக்கிறாள் என்ற கடிதம் வந்து ஒரு மணி நேரத்திற்குள், அவள் இறந்து போய்விட்டாள் என்ற தந்தி வந்தது. நான் வென்ட்நோருக்கு உடனே சென்றேன்.

எனது வாழ்க்கையில், மனோவேதனை கொடுக்கும் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஆனால், இதைப்போல் சகிக்க முடியாத கொடிய சம்பவம் நடந்ததே கிடையாது. என் தந்தையிடம், அவருடைய மரண தண்டனையைத் தெரிவிக்கப் போவதுபோல், இதை நான் நினைத்தேன். இந்த துக்ககரமான செய்தியை எப்படி தந்தையிடம் தெரிவிப்பது என்ற எண்ணம் என் மனதில் அலை மோதிற்று. இல்லை, நான் அவரிடம் வாய்விட்டுச் சொல்லவேண்டிய அவசியமே யில்லை. எனது முகம் எனதுஉள்ளத்தைக் காட்டிக்கொடுத்தது. என்னைப் பார்த்தவுடன் “நமது ஜென்னி இறந்துபோய்விட்டாள்!” என்று மூர் கூறினார். உடனே பாரிஸுக்குப் போய் குழந்தைகளுக்கு உதவி புரியும்படி என்னை வேண்டிக்கொண்டார். நான் அவரோடு கூடவே தங்கியிருக்க விரும்பினேன். ஆனால், அவருக்கு விரோதமாக நடக்க முடியாது. வென்ட்நோருக்குப் போய் அரை மணி நேரம்கூட ஆகவில்லை. அதற்குள் உடைந்த உள்ளத்தோடு, பாரிஸுக்குப் போக, லண்டனை நோக்கிப் பிரயாண

மானேன். குழந்தைகளை உத்தேசித்து, மூர் விருப்பப்படி நான் நடந்துகொண்டேன்.

இந்தப் பிரயாணத்தைப்பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்ல மாட்டேன். அந்த பயங்கரமான காலத்தை நினைப்பதற்கே அஞ்சுகிறேன். மனோ வேதனையும், சகிக்கமுடியாத கஷ்ட நஷ்டங்களும் நிறைந்த இருண்ட காலம். அதுபற்றி, அதிகமாகப் பேசாமலிருப்பதே நலம். நான் திரும்பி வந்தேன். மூரும் திரும்பி வந்தார். ஆம், இறப்பதற்காகத்தான்!

என் அருமைத் தாயைப்பற்றி ஒரு வார்த்தை. ஒரு மாத காலமாக மரணத்தோடு போராடிக்கொண்டு, படுத்த படுக்கையாகக் கிடந்தாள் அவள். "கான்ஸர்" என்ற கொடிய நோயின் சகிக்க முடியாத வேதனையால் புழுப்போல் துடித்தாள். ஆயினும்கூட, உங்களுக்குத் தெரிந்திருப்பதுபோல், அவளுடைய மனோஉறுதியும், நகைச்சுவையும் அவளை விட்டு ஒரு கணமேனும் பிரிந்துபோகவேயில்லை. 1881-ம் வருடம் ஜெர்மனியில் நடந்த தேர்தலின் முடிவை சிறு குழந்தையைப்போல் ஆவலுடன் விசாரித்தாள். நாம் வெற்றிபெற்ற செய்தி கேட்டு, அவள் உள்ளம் எப்படிப் பூரித்தது தெரியுமா! கடைசி மூச்சு இருக்கும்வரையிலும், அவள் புன்முறுவலோடு திகழ்ந்தாள். எங்களை உற்சாகப்படுத்தும் பொருட்டும், ஹாஸ்யமாகப் பேசிக்கொண்டேயிருந்தாள். அவள் நிலைமை படுமோசமாக இருக்கிறதென்று நாங்கள் கருதியதால், டாக்டரைப் பார்த்து, எங்களைப் பார்த்து அவள் சிரித்துக்கொண்டேயிருந்தாள். ஆம், மரணவேதனை

யைப் பொருட்படுத்தாமல் கடைசிவரையிலும் சந்தோஷமாகவே இருந்தாள். உயிர்போகும் வரையிலும் பிரக்ஞை யிருந்தது. இனிமேல் பேச முடியாது என்ற நிலைமை வந்ததும், "கார்ல்" என்று தந்தையை அழைத்தாள். அதற்குமேல் வார்த்தைகள் வரவில்லை. எங்கள் கைகளை இறுகப் பிடித்தாள். சிரிக்கவும் முயற்சி செய்தாள்...

மூரைப் பொறுத்தவரையிலும், படுக்கையிலிருந்து எழுந்து, மெயிட்லாண்ட் பார்க்கிலுள்ள வீட்டில், ஒரு சாய்வு நாற்காலியில் படுத்துக் கொண்டு, புத்தகம் படித்துக்கொண் டிருந்தார். அப்படியே, அமைதியாக, நிரந்தரமாக உறங்கத் துவங்கினர் என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம்தான்.

இறந்ததுவரையிலும் "ஜெனரல்" [ஏங்கல்ஸ்] இந்தச் சாய்வு நாற்காலியை பொக்கிஷம்போல் பத்திரமாக வைத்திருந்தார். இப்பொழுது, அது என்னிடம் இருக்கிறது.

நீங்கள் மூரைப்பற்றி ஏதேனும் எழுதினல், லென்சனை மறந்துவிடக் கூடாது. தாயையும் மறக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். லென்சன் என்ற அச்சைச் சுற்றித்தான், வீட்டிலுள்ள சகலபொருள்களும் சுழன்றுகொண் டிருந்தன. தலைசிறந்த, உண்மையான சகோதரி அவள். ஆகையால், மூரைப்பற்றி வரையும்பொழுது, லென்சனை ஒருக்காலும் மறக்கக் கூடாது.

உங்கள் விருப்பம்போல், பிரான்ஸின் தென் பகுதியில் மூர் வசித்ததைப்பற்றிச் சிறிது கூறுகிறேன். தந்தையும் நானும், 1882-ம் வருட ஆரம்பத்

தில், ஆர்ஜெண்டுயிலில் சில வாரங்கள்வரையிலும் ஜென்னியோடு வாழ்ந்து வந்தோம். மார்ச், ஏப்ரல் மாதங்களில் அல்ஜியர்ஸிலும், மே மாதத்தில் மாண்டி கார்லோ, நைஸ், கான் முதலிய நகரங்களி லும் மூர் தங்கியிருந்தார். ஜூன், ஜூலை மாதங் களில் திரும்பவும் ஜென்னி வீட்டில் வசித்தார். அந்தச் சமயத்தில் லென்சனும் அர்ஜெண்டுயிலில் இருந்தாள். அங்கிருந்து, லாராவோடு, மூரும் ஸ்விட்ஸர்லாந்து, விவே முதலிய இடங்களுக்குச் சென்றார். ஸெப்டம்பர் மாத இறுதியில், இங்கிலாந் துக்குத் திரும்பிவந்து, வென்ட்நோரில் வாழ்ந்து வந்தார். அங்கு ஜானியும் நானும் மார்க்ஸைச் சந்தித்தோம்.

மார்க்ஸின் ஆண் குழந்தை எட்கார் (மூஷ்) 1847ம்- வருடம் பிறந்தான். 1855-ல் இறந்து போனான் என்று நினைக்கிறேன். ஹென்ரிச் 1849-ம் வருடம், நவம்பர் 5-ந்தேதி பிறந்தான். இரண்டு வயது பூர்த்தியாவதற்குள் இறந்துபோய்விட்டான். எனது சின்னஞ் சிறு சகோதரி பிரான்ஸிஸ்கா 1851-ம் வருடம் பிறந்து, பதினோரு மாதக் குழந்தை யாக இருக்கும்பொழுதே மரணமடைந்தாள்.

ஹெலனைப்பற்றி சிறிது கூறுகிறேன். இவளை நாங்கள் நிமி என்று அழைத்தோம். எட்டு, அல்லது ஒன்பது வயதுச் சிறுமியாக இருக்கும் பொழுது, ஹெலன் எங்கள் குடும்பத்திற்கு வந் தாள். மூர், தாய், எட்கார் வான் வெஸ்ட்பேலன் ஆகியவர்களோடு அவளும் எங்கள் குடும்பத்தில் வளர்ந்து வந்தாள். எனது பாட்டாவுக்குப் பெரி தும் பிடித்தவள். மூர்கூட அவளைக் கோபிப்பார்.

பேரன் வான் வெஸ்ட்பேலன் [பிரா மார்க்ஸின் தந்தை] ஷேக்ஸ்பியரின் நாடகங்களையும், ஹோமரின் கதைகளையும் கரைத்துக் குடித்தவர். அவர்களுடைய காவியங்களை என் தாத்தா மனப்பாடம் செய்திருந்தாரென்று, என் தந்தை அடிக்கடி சொல்லுவார். அவருக்குப் பிரெஞ்சு பாஷையும், ஜெர்மானிய பாஷையும் நன்ருகத் தெரியும். மூரின் தந்தையும் வால்டேர், ரூஸோ ஆகிய அறிஞர்களின் நூல்களைக் கரைத்துக்குடித்திருந்தார். மூரின் கடல்போன்ற அறிவுக்கு, இந்தப் பாரம்பர்யம் தான் காரணம் என்பதில் கொஞ்சமேனும் சந்தேகமில்லை.

ஹெலனை மறந்து விட்டேன். அவள் என் பெற்ருேரோடு பாரிஸுக்குப் போன பிறகா, அல்லது அதற்கு முன்பா என்பதை நான் திட்டமாகக் கூற முடியாது. கல்யாணமான பின்பு சில நாட்களுக்குள் அவர்கள் பாரிஸுக்குப் போய்விட்டார்கள். என் பாட்டி, என் தாயோடு கூடவே இந்த இளம் பெண்ணை அனுப்பினுள் என்பது மாத்திரம் எனக்குத் தெரியும். "என்னிடமுள்ள விலையுயர்ந்த பொருளை—விசுவாசமுள்ள லென்சனை—நான் அனுப்புகிறேன்" என்று எழுதியிருந்தாள். விசுவாசமுள்ள லென்சன் கடைசிவரையிலும் எனது பெற்ருேர்களோடு வாழ்ந்தாள். அவளுடைய தங்கை மேரியாளுவும் பின்பு எங்கள் குடும்பத்திற்கு வந்தாள். இவளை உங்களுக்குத் தெரியாது. ஏனெனில், நீங்கள் போன பின்பு தான் இவள் வந்தாள்.

## தனிமையும் வறுமையும்

மார்க்ஸைப்பற்றிப் பல கட்டுக் கதைகளைக் கட்டிவிட்டனர் எதிரிகள். அதாவது, சொந்த நாட்டைவிட்டு, வெளி நாடுகளில் அடைக்கலம் புகுந்தவர்கள் கொடிய வறுமைக்கு ஆளாகி, பசியாலும் பிணியாலும் தவியாய் தவித்தனர்; அவர்களுக்கு மத்தியில், மார்க்ஸ் சுகபோக வாழ்க்கையை நடத்திவந்தார் என்று பொய்ப் பிரசாரம் செய்தனர். இந்த விஷயத்தைப்பற்றி நான் விரிவாக எழுதப் போவது கிடையாது. ஆனால், ஒரேஒரு விஷயத்தை மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன். பழைய சம்பவங்கள் என் ஞாபகத்தில் இன்னும் இருக்கின்றன. வெளி நாடுகளில் உதவியின்றி, யாவரும் கஷ்டப்பட்டார்கள். மார்க்ஸுக்கு மாத்திரம் விதிவிலக்கு கிடையாது. பல வருடங்கள் வரையிலும் மார்க்ஸ் குடும்பத்தைவிட அதிகமாகக் கஷ்டப்பட்டவர்கள் யாரும் இல்லை என்று துணிந்து கூறலாம். கடைசி காலத்தில் வருவாய் சிறிது அதிகரித்தது. ஆயினும்கூட, தினசரி வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைப் பெற முடியாது போயிற்று. "நியூயார்க் டிரிபியூன்" பத்திரிகைக்கு மார்க்ஸ் கட்டுரைகள் எழுதிவந்தார். அதன் மூலமாகச் சிறிது பணம் கிடைத்துவந்தது. இதைத் தவிர வேறு வருவாயே கிடையாது.

## மார்க்ஸின் சமாதி

மார்க்ஸின் சமாதி என்று அழைப்பதைவிட, மார்க்ஸ் குடும்பத்தின் சமாதி என்றுதான் அதை அழைக்கவேண்டும். லண்டனின் வட பாகத்தில்,

மிகப் பெரிய நகரத்தை நோக்கி நிற்கும் குன்றின் மீது ஹைகேட் கோளத்தில் அது இருக்கிறது.

மார்க்ஸ் "ஞாபகச் சின்னம்" எதையும் விரும்பவில்லை. "கம்யூனிஸ்டு அறிக்கையும்", "மூலதனத்தையும்" சிருஷ்டித்த பெரியாருக்கு, அவைகளைவிடப் பெரிய ஞாபகச் சின்னங்களை அமைக்க முடியுமா? அவருடைய அறைகூவலுக்குச் செவி சாய்த்து, ஒன்றுபட்ட லட்சக்கணக்கான பாட்டாளிகளின் மனதிலும், மூளையிலும் அவர் நிரந்தரமாகக் குடிகொண்டிருக்கிறார். வெண்கலத்தால் செதுக்கப்பட்ட ஞாபகச் சின்னத்தைவிட, அமரத்துவம் பெற்றிருக்கும் ஞாபகச் சின்னத்தை அவர் விட்டுச் சென்று இருக்கிறார். அவருடைய தத்துவங்களும், இயக்கங்களும் தினைதினை வளர்ந்து வலிமைபெற்றுக் கொண்டே யிருக்கின்றன. தத்துவ ரீதியாக மாத்திர மல்ல, அவை நடைமுறையில் அனுஷ்டிக்கப்படுகின்றன. இதைவிட வேறு ஏதேனும் ஞாபகச் சின்னங்களை அமைக்க முடியுமா? அப்படிச் செய்தால், அது இறந்துபோன பெரியாரை அவமதிப்பதாகும்!

கம்யூனிஸ்டுகளாகிய எங்களுக்கு, ரிஷிகளும் நாயன்மார்களும் ஆழ்வார்களும் கிடையாது. அவர்களைப் பயபக்தியோடு வணங்கும் பழக்கமும் கிடையாது. ஆயினும், லண்டனிலுள்ள சமாதியில், மௌனமாகக் கிடக்கும் இந்த மனிதரைக் கோடானுகோடி மக்கள் சதா சர்வகாலமும் நினைக்கிறார்கள். ஆயிரம் வருடங்களுக்குப் பின்னர், இன்று தொழிலாளர் வர்க்கத்தை மிருகத்தனமாக எதிர்த்து வருகிறவர்கள் மாண்டு மறைந்துபோன

பின்பு, மக்கள் யாவரும் பரிபூரணமாகச் சுதந்திர மடைந்த பின்பு, இந்தச் சவக்குழி யருகில் சுதந்திர மனிதர்கள் நின்று, தலைவணங்கித் தங்களுடைய குழந்தைகளிடம் இவ்வாறு கூறுவார்கள்.

**" இதோ கார்ல் மார்க்ஸ் படுத்திருக்கிறார் !"**

ஆம், மார்க்ஸும் அவரது குடும்பமும் இதோ கிடக்கிறது! ஒரு படர் கொடிபோல், விளிம்புகள் அலங்கரிக்கப்பட்ட சர்வ சாதாரணமான ஒரு பளிங்குக் கல், சமாதியின் தலைமாட்டிலே, தலையணை போல் கிடக்கிறது. அந்தச் சிறு பளிங்குக் கல்லில் பின் வருமாறு பொறிக்கப்பட்டிருக்கிறது :

கார்ல் மார்க்ஸின் அரிய பத்தினியான

**ஜென்னி வான் வெஸ்ட்பேலன்,**

*12—2—1814*-ல் பிறந்தாள் ;
*12—2—1881*-ல் மரண மடைந்தாள்.

**கார்ல் மார்க்ஸ்**

*5—5—1818*-ல் பிறந்தார் ;
*14—3—1883*-ல் மரண மடைந்தார்.

**அவர்களுடைய பேரன் ஹாரி லாங்கெட்**

*4—7—1878*-ல் பிறந்தான் ;
*20—3—1883*-ல் இறந்தான்.

**ஹெலன் டெமூத்**

*1—1—1823*-ல் பிறந்தாள் ;
*4—11—1890*-ல் மரண மடைந்தாள்.

மார்க்ஸ் குடும்பத்தினர் அனைவரும் இந்தச் சமாதியில் அடக்கம் செய்யப்படவில்லை. இப்பொழுது உயிரோடிருப்பவர்களின் சமாதி அங்கு

கிடையாது. முன்பு இறந்துபோன மூன்று குழந்தைகள், லண்டனிலுள்ள மற்றொரு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவன் எட்கார் (மூஷ்) டாட்டன் ஹாம்கோர்ட் தெருவிலுள்ள வைட்பில்ட்டேபலில் அடக்கம் செய்யப்பட்டான். ஏனைய இருவரும் அங்குதான் அடக்கம் செய்யப்பட்டார்கள் என்று நினைக்கிறேன். ஜென்னி மார்க்ஸ், பாரிஸுக்கு அருகில், அர்ஜெண்டுயிலில் அமைதியாக நித்திரை புரிகிறான். சுபீக்ஷமாக வாழ்ந்து வந்த குடும்பத்திலிருந்து, மரணம் ஜென்னியைப் பிடுங்கிக்கொண்டு போயிற்று!

மார்க்ஸின் சமாதியில், அவர் குழந்தைகளும், பேரப் பிள்ளைகளும் இடம் பெறவில்லையென்றாலும், ஹெலன் டெமூத்துக்கு உரிய ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறாள். இரத்த உறவால் குடும்பத்தோடு பிணைக்கப்பட்டவ ளல்ல என்றாலும், அவளும் மார்க்ஸ் குடும்பத்தைச் சேர்ந்தவள் தான்,

தங்களுடைய புதைகுழிக்கு அருகிலேயே அவளையும் அடக்கம் செ●ய வேண்டுமென்று பிரா மார்க்ஸும், கார்ல் மார்க்ஸும் ஏற்கெனவே முடிவு செய்திருந்தனர். லென்சனைப்போல் ஏங்கல்ஸும் அவர் குழந்தைகளின் ஒத்துழைப்போடு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினர். மார்க்ஸ் தம்பதிகள் முன்கூட்டியே இவ்வாறு கூறவில்லையென்றாலும், எங்கல்ஸ் ஹெலன் டெமூத்தை அவர்களுடைய சமாதிக்கு அருகிலேயே அடக்கம் செய்திருப்பார்.

மார்க்ஸின் குழந்தைகள் ஹெலன் டெமூத்தை எவ்வளவு தூரம் நேசித்தார்கள் என்பதை மார்க்

ஸின் இளைய புதல்வி எழுதியிருக்கும் கடிதங்களி லிருந்து ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்.

நான் கடைசி முறை லண்டனுக்கு விஜயம் செய்து, பாரிஸ் மூலமாகத் திரும்பிச் செல்லும் பொழுது, பாரிஸுக்கு அருகாமையி லுள்ள டிரா வேல் என்ற இடத்தில் தங்கினேன். இங்குதான் லவார்க்கும், அவரது மனைவி லாராவும் அழகிய கிரா மத்தில் வாழ்ந்தனர். லண்டனில் நடந்த பழைய சம்பவங்களில் நாங்கள் மூழ்கிக்கிடந்தோம். அவை களைத் தொகுத்து, ஒரு சிறு புத்தகம் எழுத உத் தேசித்திருப்பதாகத் தெரிவித்தேன். அப்பொழுது "லென்சனை மறக்காதீர்கள்" என்று லாரா கூறி னாள்,

ஆம், நான் லென்சனை மறக்கவே யில்லை. அவளை ஒருக்காலும் மறக்க முடியாது. கடந்த நாற்பது வருடங்களாக அவள் எனக்கு தோழியாக இருக்க வில்லையா? லண்டனில் அடைக்கலம் புகுந்து, அகதியாகக் கஷ்டப்பட்ட காலத்தில், அவள்தான் எனக்குக் "கடவுள்." என்னுடைய சட்டப் பை காலியானால், லென்சன்தான் எனக்கு இரண்டு மூன்று பென்னிகள் கொடுத்து உதவு வாள். மார்க்ஸ் குடும்பத்தில் பணமில்லை யென்றால், லென்சனிடமிருந்து ஒரு தம்பிடிகூடக் கிடைக் காது. என்னிடம், புதியதாகத் துணிவாங்கப் பண மில்லாத தருணத்தில், கிழிந்துபோன துணிகளை லென்சன் தைத்துக்கொடுப்பாள்!

நான் முதன் முதலில் லென்சனைச் சந்தித்த பொழுது, அவளுக்கு வயது இருபத்தேழுதான். அவளை ஒரு அழகி என்று சொல்ல முடியாது. ஆயி

னும், போதிய வளர்ச்சியும், வசீகரிக்கும் தோற்ற மும் பெற்றிருந்தாள். அவள் அழகில் பலர் மயங் கினார்கள். கல்யாணம் செய்துகொள்வதற்கும் பல சந்தர்ப்பங்கள் இருந்தன. "கல்யாணமே செய்துகொள்ள மாட்டேன்" என்று முடிவு செய்யவில்லையாயினும், கடைசிவரையிலும் கன் னிப் பெண்ணாகவே இருந்தாள் அவள். மூர், பிரா மார்க்ஸ், அவர்கள் குழந்தைகள் ஆகியவர்களைப் பராமரிப்பதிலேயே இன்பத்தைக்கண்டாள் அவள்:

ஆம், கன்னிப் பெண்ணாகவே இருந்தாள்! அவள் வாலிபம் கடந்து சென்றது. வாழ்விலும், தாழ்விலும் இன்பத்திலும், துன்பத்திலும் அவள் மார்க்ஸ் குடும்பத்தைவிட்டு அகலவே யில்லை. தன் வாழ்க்கையை, இன்பதுன்பங்களை யாருக்காக அர்ப் பணம் செய்திருந்தாளோ, அவர்கள் மார்க்ஸும், பிரா மார்க்ஸும் மரணமடைந்த பின்புதான், அவளுக்கு ஓய்வு கிடைத்தது. பின்னர், ஏங்கல்ஸ் குடும்பத்தில் ஓய்வு கிடைத்தது. அதன் பின்னர் சுயநல மற்ற வாழ்க்கையை நடத்தி, இறுதியில் மரணமடைந்தாள். இப்பொழுது, மார்க்ஸின் குடும்பத்தின் சமாதியில் நிரந்தரமாக ஓய்வெடுத் துக் கொண்டிருக்கிறாள்.

* * *

ஹைகேட்டிற்கு அருகில் வாழும் "சிவப்பு போஸ்ட்மாஸ்டர்" அந்த சமாதியைப்பற்றிப் பின் வருமாறு விவரித்தார்.

"மார்க்ஸ் சமாதியைச் சுற்றி தூய பளிங்குக் கல் பதிக்கப்பட்டிருக்கிறது. அதில், கறுப்பு அக்ஷ ரத்தில், தேதியும், பெயரும் பொறிக்கப்பட்டிருக்

கின்றன. ஸ்விட்ஸர்லாந்திலிருந்து நான் கொண்டு வந்த ஸ்பெயின் தேசத்துப் புல்லும், ரோஜாப்பூச் செடிகளும்தான் சமாதியை அலங்கரிக்கின்றன. அவை, சமாதியைச் சுற்றி இப்பொழுது வளர்ந் திருக்கின்றன. வாரத்தில் இரண்டு முறை அங்கு சென்று நான் களைபிடுங்குவது வழக்கம். வெப்பம் நிறைந்த கோடை காலத்தில், அவை வாடிவதங்கிப் போய்விடும். கடந்த இரு கோடை களின்போது அவை இவ்வாறுதான் வாடி வதங்கிப் போயின. இந்த வருடம், ஐரோப்பா கண்டத்தில், மழை அதிகமாகப் பெய்ததால், இங்கிலாந்தில் பெரிய வரட்சி ஏற்பட்டது. பார்க்குகளிலுள்ள புற்கள்கூட வாடிப்போயின. லெஸ்னருடைய உதவிகொண்டுகூட, கனல் கக்கும் வெப்பத்தி லிருந்து புற்களையும் ரோஜாச் செடிகளையும், பாது காக்க முடியாது போயிற்று. எனவே, ஆவலிங்ஸ் குடும்பத்தாரோடு நாங்கள் ஒரு ஒப்பந்தம் செய்து கொண் டிருக்கிறோம். அவர்கள் வெகு தூரத்தில் வசித்துவருவதால், அடிக்கடி வர முடியாது. ஆகவே, கல்லறையைக் காத்துவரும் காவற்கார னிடம், இதைக் கவனிக்கும் பொறுப்பை ஒப் படைத்திருக்கிறோம்.''

# ஏங்கல்ஸ் புகழ்மாலை

*1883-ஆம் வருடம் மார்ச்சு மாதம் 17-ம் தேதி ஹைகேட் கல்லறையில் மார்க்ஸ் அடக்கம் செய்யப்பட்டார். அப்பொழுது, ஏங்கல்ஸ் நிகழ்த்தின சொற்பொழிவு இது.*

"மார்ச்சு மாதம் பதினாலாம் தேதி இரண்டே முக்கால் மணிக்கு, நமது காலத்தில் தோன்றின தலைசிறந்த சிந்தனையாளர், சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார். இரண்டு நிமிடங்கள்தான் நாங்கள் அவரைப் பிரிந்திருந்தோம். இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு, நாங்கள் திரும்பிவந்தபொழுது, அவர் சாய்வு நாற்காலியில் அமைதியாகத் தூங்குவதைக் கண்டோம். ஆம்; அவர் நிரந்தரமாக தூங்கத் தொடங்கிவிட்டார்.

அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலு முள்ள போர்க்குணம் படைத்த புரட்சிகரமான பாட்டாளி மக்கள், இந்த இணையற்ற தலைவரின் மரணத்தால் ஈடுசெய்ய முடியாத நஷ்டம் அடைந்தனர்; சரித்திர சாஸ்திரமும் பெருத்த நஷ்டம் அடைந்தது. ஆழம் காண முடியாத அறிவுக்கடலுக்கு இவர் மறைந்ததால் ஏற்பட்டிருக்கும் பிளவை, நம்மால் அடைக்க முடியாது. இந்த உண்மை அதிவிரைவில் நமக்குப் புலனாகும்.

உயிர்கள் எவ்வாறு பரிணமிக்கின்றன என்பதை டார்வின் கண்டுபிடித்ததைப்போல், மனித சமூகத்தின் சரித்திரத்தின் பரிணாம விதிகளை

மார்க்ஸ் கண்டுபிடித்தார். காளான்களைப்போல் மிதமிஞ்சி வளர்ந்திருந்த மானசிகவாதம் சர்வ சாதாரண உண்மையைத் திரையிட்டு மறைத்து வைத்தது. இந்தத் திரையை மார்க்ஸ் கிழித்து எறிந்தார். அரசியல், விஞ்ஞானம், மதம், கலை ஆகிய துறைகளில் மக்கள் கவனம் செலுத்து முன், அவர்கள் உண்ணவும் உடுக்கவும் வேண்டும் என்னும் உண்மையை, மார்க்ஸ்தான் முதன்முதல் கண்டுபிடித்தார். எனவே, மனிதனுக்குத் தேவையான பொருள்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன; ஒரு குறிப்பிட்ட காலத்தில் பொருளாதார வளர்ச்சியில் சமூகம் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கிறது என்பவைகளை அடிப்படையாகக் கொண்ட அஸ்திவாரத்தின் மீதுதான், அரசியல் கட்டிடமும், சட்ட திட்டங்கள் சம்பந்தமான எண்ணங்களும், கலை, மதம் முதலியவை சம்பந்தமான கருத்துக்களும் உருவகப்படுத்தப்படுகின்றன. இந்த விஷயங்களை இந்த அடிப்படையில்தான் விளக்க வேண்டும். இதுவரையிலும் இதற்கு நேர்மாறான முறையில் விஷயங்கள் விளக்கப்பட்டன; லோகாயத நிலையை அடிப்படையாகக்கொண்டு நிலைமையைப் பரிசீலனை செய்யாமல், மானசிக தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு நிலைமையைப் பரிசீலனை செய்துவந்தார்கள். இது தவறு.

இது மாத்திர மல்ல. இன்றைய முதலாளித்வ உற்பத்திமுறையையும், இந்த உற்பத்திமுறை சிருஷ்டித்திருக்கும் முதலாளித்வ சமூகத்தை இயக்குவிக்கும் விதிகளையும் மார்க்ஸ் கண்டுபிடித்தார். மார்க்ஸுக்கு முந்தின முதலாளித்வப் பொரு

ளாதார சாஸ்திரிகளும், சோஷலிஸ்டுப் பண்டிதர்களும் லாபம் எவ்வாறு உண்டுபண்ணப்படுகிறது என்ற உண்மையைக் கண்டுபிடிக்க முடியாமல் இருளில் வாழ்ந்தனர். அதிக மதிப்பு (Surplus Value) என்னும் தத்துவத்தை உருவகப்படுத்தி, மார்க்ஸ் இந்தச் சிக்கலைச் சிக்கறுத்தார்.

ஒருவர் பரிபூரண திருப்தி அடைவதற்கு இத்தகைய இரு பெரும் உண்மைகளைத் தமது வாழ் நாளில் கண்டுபிடித்தால் போதும், அல்லது இவைகளில் எதேனும் ஒன்றைக் கண்டுபிடித்தால்கூடப் போதும். ஆனால், மார்க்ஸ் இத்துடன் திருப்தி அடையவில்லை. மார்க்ஸ் பல துறைகளில் தமது நுண்ணிய அறிவைச் செலுத்தி, மிக நுணுக்கமாக ஆராய்ச்சி செய்தார். மார்க்ஸ் ஆராய்ச்சி செய்த ஒவ்வொரு துறையிலும் - கணித சாஸ்திரத்தில் கூட - அவர் பல புதிய உண்மைகளைக் கண்டு பிடித்தார்.

விஞ்ஞான சாஸ்திரத்தில் நிபுணத்வம் வாய்ந்த மார்க்ஸ், பல உண்மைகளை அம்பலத்திற்குக் கொண்டுவந்தார். ஆனால், அவர் கடல்போன்ற அறிவின் ஒரு பகுதிகூட இவைகளில் பிரதிபலிக்கவில்லை. சரித்திரபூர்வமான, ஜீவசக்தி நிறைந்த, புரட்சிகரமான சக்தியாக விஞ்ஞான சாஸ்திரத்தை மதித்தார் மார்க்ஸ். விஞ்ஞானத் துறையில் கண்டு பிடிக்கப்படும் உண்மைகளை மார்க்ஸ் குதூகலத்துடன் வரவேற்றார். அவைகளை உடனே அனுஷ்டிக்க முடியவில்லை என்றாலும், இவை பொருள் உற்பத்திமுறையிலும், சரித்திரத்தின் போக்கிலும் ஏதேனும் மாற்றங்களை உண்டுபண்ணினால், மார்க்

ஸின் மகிழ்ச்சி எல்லையைக் கடக்கும். உதாரண மாக, விஞ்ஞானத் துறையில் அறிஞர்கள் நடத்தின ஆராய்ச்சியை, குறிப்பாக மார்ஸென் டெப்ரிஸ்* நடத்தின ஆராய்ச்சியை மார்க்ஸ் நுட்பமாகக் கவ னித்தார்.

எல்லாவற்றிலும் மேலாக, மார்க்ஸ் புரட்சிக் காரர் என்பதை மறக்கவே கூடாது. முதலாளித்வ சமுதாயத்தைத் தலைகீழாகக் கவிழ்ப்பதும், அது சிருஷ்டித்திருக்கும் அரசியல் முறையை அடித்துத் தகர்ப்பதும், பாட்டாளி மக்களைப் பிணைத்திருக் கும் அடிமைச் சங்கிலிகளை அறுப்பதும் அவர் வாழ்க்கையின் இலட்சியம். தனது தேவைகளையும், கடமைகளையும் தொழிலாளி வர்க்கம் தெளிவாகத் தெரிந்துகொள்ளும்படி செய்தவர் மார்க்ஸ்தான். எந்த சந்தர்ப்பத்தில் தொழிலாளர் வர்க்கம் வெற்றி பெற முடியும் என்பதையும் மார்க்ஸ் எடுத்துக் காட்டினார். போராட்டம் அவர் ஜீவநாடி. அவர் மிகச் சிறந்த முறையில், இணையற்ற முறையில், ஆர் வத்துடனும், தெம்புடனும் தம் வாழ்நாள் முழு தும் வெற்றிகரமாகப் போராடினார். முதலில் "ரீனிஷேஸீடங்கிலும்" (1842) "வோர்வார்ட்ஸி லும் (1144-பாரிஸ்), "டுஷே ஸீடங்கிலும்" (1847 - புரஸ்ஸல்ஸ்), "நியூ ரீனிஷேஸீடங்கிலும்" (1848-49) "நியூயார்க் டிரிபியூனிலும்" (1852-61) அவர் எழுதின தலையங்கங்களும், கட்டுரைகளும், அவர் எழுதின கணக்கற்ற புரட்சிகரமான துண்

* மார்ஸென் டெப்ரிஸ் (1818—1918) பிரபல பிரெஞ்சு பொருளாதார சாஸ்திரி. தூரத்திலிருந்து சக்தியை அனுப்பும் முறையை இவர்தான் முதன்முதல் ஆராய்ந்தார்.

டுப் பிரசுரங்களும் புரட்சி உணர்ச்சியைத் தூண்டி விட்டன ; பாரிஸ், லண்டன், புருஸ்ஸல்ஸ் ஆகிய இடங்களில் இருந்த, புரட்சிகரமான ஸ்தாபனங்களில் சேர்ந்து, அவர் இடைவிடாது வேலை செய்தார் ; இவைகளுக் கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் சர்வதேசத் தொழிலாளர் சங்கத்தை (முதலாவது இண்டர்நேஷனலை) அவர் ஸ்தாபித்தார். இத்தகைய மகத்தான வேலைகளைச் செய்தவர், வேறு எதையும் செய்யவில்லை என்றால்கூட, இவைகளை நினைத்துப் பெருமை அடையலாம்.

இதன் பயனாக, இந்தக் காலத்தில் மார்க்ஸைப் போன்று தூஷிக்கப்படுகிறவரும், வெறுக்கப்படுகிறவரும் வேறு யாரும் இல்லை. முடியரசும், குடியரசும் அவரைத் தேசப்பிரஷ்டம் செய்தன. பிற்போக்குவாதிகளும், தீவிர ஜனநாயகவாதிகளும், முதலாளிகளும் போட்டியிட்டுக்கொண்டு மார்க்ஸை நிந்தித்தனர், இவைகளை அற்பமாகக் கருதி, மார்க்ஸ் ஒதுக்கித்தள்ளினார். ஆனால், அவயம் நேர்ந்தபொழுது, தப்புப் பிரசாரத்திற்கு மார்க்ஸ் தக்க பதில் அளித்தார்.

இன்று மார்க்ஸ் நம்மை விட்டு பிரிந்துபோய்விட்டார். அவர் கோடானு கோடி புரட்சிகரமான பாட்டாளி மக்களால் இதயபூர்வமாக நேசிக்கப்படுகிறார் ; கௌரவிக்கப்படுகிறார். எல்லோரும் துக்கக் கண்ணீர் வடிக்கிறார்கள். ஸைபீரியாவிலுள்ள சுரங்கத் தொழிலாளர்களிலிருந்து கலிபோர்னியாவிலுள்ள தொழிலாளர்கள்வரையிலும், அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலுமுள்ள கோடானு கோடி பாட்டாளி மக்கள் - இன்று துக்கக் கண்ணீர் வடிப்பார்கள்.

ஒன்று மட்டும் நான் தைரியமாகச் சொல்லுவேன்; அவருக்குப் பல எதிரிகள் இருக்கலாம்; ஆனால், தனிப்பட்ட முறையில் அவருக்கு ஒரு எதிரிகூட இல்லை.

அவர் திருநாமமும், அவர் நூல்களும் அமரத்வம் பெறும்; கணக்கற்ற நூற்றாண்டுகள் சுடர் விட்டு எரியும் என்பது திண்ணம்.